விலை : 20.00
பக்கங்கள் : இருபது

Registered as a Newspaper in Sri Lanka

வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 பங்குனி 24 சனிக்கிழமை (06.04.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 108

MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வித சாதாரண போட்லான்
சிமெந்து (O.P.C.) ராம்கோ சிமெந்து

அரசியல் தீர்வு அவசியம்



ரணிலுடனான சந்திப்பில் பிரணாப் வலியுறுத்தல்

போர் முடிவுற்றதால் அரசியல் தீர்வு காண இலங்கைக்கு சிறந்த வாய்ப்புக் கிட்டியுள்ளது. இந்த வாய்ப்பைச் சரியாகப் பயன்படுத்தி அனைத்துத் தரப்பு மக்களும் ஏற்கும் வகையில் அரசியல் தீர்வு ஒன்றை காண வேண்டியது அவசியம் என இந்திய ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக குடியரசுத் தலைவர் மாளிகை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது,

இலங்கையின் எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் வியாழக்கிழமை குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜியை சந்தித்துப் பேசினார். (19ஆம் பக்கம் பார்க்க)

இந். அனைத்து கட்சி குழு 9ஆம் திகதி யாழ். விஜயம்

தமிழகத்தில் ஈழ ஆதரவுப் போராட்டம் வலுவடைந்துள்ள நிலையில், இந்திய அனைத்துக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழு ஒன்று எதிர்வரும் 9ஆம் திகதி திங்கட்கிழமை யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யவுள்ளது.

6பேர்கொண்ட இக்குழுவில் இந்திய ஆளும் காங்கிரஸ் கட்சி, பிரதான எதிர்க் கட்சியான பாரதிய ஜனதா கட்சி, திரிணாமூல் காங்கிரஸ், மற்றும் பகுஜன் சமாஜ் கட்சிகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளடங்குகின்றனர்.

9ஆம் திகதி மாலை 6 மணியளவில் இக் குழுவினர் யாழ்.சிவில் சமூகப் பிரதிநிதிகளை சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர்.

அத்தோடு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட முக்கிய தலைவர்களையும் இவர்கள் சந்தித்து கலந்துரையாடவுள்ளனர்.

இதேவேளை இக்குழுவில் வழமையாக இடம்பெற்றிருக்கும் தமிழக பாராளுமன்ற உறுப்பினர்கள் எவரும் உள்ளடக்கப்படவில்லை என்றும் ஈழத் தமிழருக்கு ஆதரவாக மாறியுள்ள அ.தி.மு.க. ,தி.மு. கட்சிகளின் பிரதிகளும் உள்ளடங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (செ–11)

49 ஏக்கர் காணியை அபகரித்து பண்டத்தரிப்பில் படை முகாம்!

வழக்குத் தொடர கூட்டமைப்பு தயார்

(யாழ்ப்பாணம்)

பண்டத்தரிப்பு காடாப்புலத்தில் 49 ஏக்கர் காணியை அபகரித்து பாரிய படைமுகாம் ஒன்றை அமைக்கும் பணியில் இராணுவத்தினர் ஈடுபட்டு வருவதாக வலி. தென்மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் அ.ஜெபநேசன் குற்றம் சுமத்தியுள்ளார்.

நகர பாதுகாப்பு அமைச்சின் அனுமதி உள்ளதாக தெரிவித்தே இக்காணிக்ளை படையினர் அபகரித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் இராணுவம் கடிதம் ஒன்றை பிரதேச சபையிடம் கையளித்துள்ளது.

இதன்போது காணி வழங்க முடியாது என பிரதேச சபை பதில் அனுப்பியும் இராணுவம் அத்துமீறி படைமுகாம் அமைத்து வருகிறது.

இந்நிலையில் இராணுவத்தின் இந்நடவடிக்கைக்கு எதிராக கூட்டமைப்பின் சார்பில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளதாக தவிசாளர் தெரிவித்துள்ளார். (செ–11)

இலங்கை கடற்பரப்பில் சீனக் கப்பல்கள்

சீன நீர்மூழ்கிக் கப்பல்கள் இலங்கையை அண்டிய கடற்பரப்பில் சஞ்சரிப்பதாக இந்தியா ஊடகமொன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இந்து சமுத்திர கடற்பரப்பில் அடிக்கடி சீன அணு நீர்மூழ்கிக் கப்பல்கள் சஞ்சரித்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இனந்தெரியாத 22 நீர்மூழ்கிக் கப்பல்கள் இந்திய மற்றும் இலங்கை கடற்பகுதிகளில் சஞ்சரித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. நீர்மூழ்கிக் கப்பல்களை இவ்வாறு பயன்படுத்தக்கூடிய வல்லமை சீனாவிற்கு மட்டுமே காணப்படுவதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்திய அமெரிக்க புலனாய்வுத் தரவுகளின் அடிப்படையில் இந்த தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளது. இலங்கைக்கு தென் பகுதி கடற்பரப்பில் இவ்வாறான 13 நீர்மூழ்கிக் கப்பல்களின் சஞ்சரிப்புக்கள் (19ஆம் பக்கம் பார்க்க)

ஆட்டோ-பேருந்து விபத்து

கணவனும் மனைவியும் ஸ்தலத்திலேயே பலி!

(மல்லாவி)

முச்சக்கர வண்டி–தனியார் பேருந்து மோதிய விபத்தில் கணவன், மனைவி ஆகிய இருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

இப் பரிதாப சம்பவம் நேற்று காலை 8.30 மணிக்கு கிளிநொச்சியில் ஏ–9 வீதியில் 155–ம் கட்டை சந்திக்கு அண்மையில் இடம் பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

ஒட்டுசுட்டானில் இருந்து கிளிநொச்சி நோக்கி பயணித்துக் கொண்டிருந்த முச்சக்கர வண்டியும் விசுவமடுவில் இருந்து வவுனியா நோக்கி பயணித்துக் கொண்டிருந்த தனியார் பேருந்தும் நேருக்கு நேர் மோதியதிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் கோயில் புளியங்குளம் நெடுங்கோணி வவுனியாவை சேர்ந்த விசுவலிங்கம் தெய்வேந்திரகுமார் (வயது65) அவரது மனைவியான தெய்வேந்திரகுமார் ஸ்ரீரதி(வயது55) ஆகிய இருவருமே பரிதாபமாக உயிரிழந்தனர்.

இவர்களது சடலம் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் வைக்கப்பட்டு பிரேத பரிசோதனை மற்றும் மரண விசாரணையின் பின்னர் (19ஆம் பக்கம் பார்க்க)

தமிழ் திரைப்படங்களுக்கு இலங்கையில் தடை!

கோருகிறார் அமைச்சர்

ரஜனிகாந்த், கமலஹாசன், விஜய் போன்ற தென்னிந்திய சினிமா கலைஞர்களின் திரைப்படங்கள் இலங்கையில் திரையிடப்படுவது தடைசெய்யப்பட வேண்டும் என பிரதி போக்குவரத்து அமைச்சர் ரோஹண திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இலங்கை போக்குவரத்து சபையின் தலைமையகத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றும்போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

உலக வரைபடத்தில் இருந்து இலங்கையை அகற்றும் அளவிற்கு தென்னிந்திய திரைப்பட நடிகர்கள் மாறியுள்ளனர்.

இலங்கையில் தமிழ் மக்களுக்கு எந்த பிரச்சினையும் இல்லை என இலங்கையின் கிரிக்கெட் வீரர் முத்தையா முரளிதரன் முழு உலகத்திற்குஎடுத்துகூறியுள்ளநிலையில், ரஜினிகாந்த், கமலஹாசன், விஜய், அஜித்குமார், சரத்குமார் போன்ற (20ஆம் பக்கம் பார்க்க)

விடுதி விபச்சாரங்களுக்கு விரைவில் நடவடிக்கை!

தகவல் தருமாறு பொலிஸார் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் விடுதிகளில் விபச்சாரம் நடைபெறுவதாக பொது மக்களினால் முறைப்பாடுகள் கிடைத்தால் அவ்விடுதிகள் மீது நடவடிக்கை மேற்கொள்ளமுடியும் என யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மொகமட் ஜெவ்ரி தெரிவித்தார்.

யாழ்.பொலிஸ் நிலையத்தில் நேற்று இடம் (19ஆம் பக்கம் பார்க்க)

இலங். எதிராக ஆஸியில் போராட்டம்

தமிழ்நாட்டுமாணவர்களின் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து 3 அம்சக் கோரிக்கையை முன்வைத்து அவுஸ்திரேலியாவின் பேர்த் மாநகரில் இரண்டு வெள்ளை இனத்தவர்கள் 24 மணி நேர உண்ணாநிலை போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.

அவுஸ்திரேலி (19ஆம் பக்கம் பார்க்க)

தன்னைத் தானே தாக்கிய நச்சுமரம்
விரைவில்...
உங்கள்
வலம்புரியில்
வாசிக்கத் தவறாதீர்கள்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

அரசாங்க கட்சி பிரதிநிதி என்னைத் தாக்கினார்

நிசாந்தன் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

கொழும்பு வெள்ளவத்தை பகுதியில் வைத்து அரச கட்சியின் யாழ்.மாவட்ட பிரதிநிதி யொருவரின்தூண்டுதலின்பெயரில்கடந்தமூன் றாம் திகதி தான் கடத்தப்பட்டு தாக்கப்பட்டதாக யாழ்.மாநகர சபையின் முன்னாள் உறுப் பினர் எஸ்.நிஷாந்தன் குற்றம் சாட்டியுள்ளார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த மூன்றாம் திகதி தனிப்பட்ட காரணத்திற்காக நான் கொழும்பு சென்றபோது வெள்ளவத்தை பகுதியில் வைத்து வெள்ளை வானில் வந்த 7 பேர் தன்னைக் கடத்தி துப்பாக்கி முனை யில் அச்சுறுத்தி தன்மீது தாக்குதல் நடத்தி யதாகவும் பின்னர் அங்கிருந்து தங்கள் அலுவலகத்திற்கு கொண்டு சென்று அங் குள்ள அறையொன்றில் தன்னை பூட்டிவிட்டு இரண்டு மணித்தியாலத்திற்கு மேல் தன்னை தாக்கியதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தன்னை தாக்கும் போது நாங்கள் யார் என்று தெரியுமா? எங்கள் பலம் தெரியுமா? எங்கள் பின்னால் இருப்பவர்கள் யார் என்று தெரியுமா? எனவும் யாழ்ப்பாணத்தில் விபச் சார விடுதியை பிடிப்பதற்கு நீ யார்? போன்ற பல்வேறு கேள்விகளைக் கேட்டு தன்னை அவர்கள் தாக்கியதாக தெரிவித்தார்.

யாழில் விபச்சார விடுதி பிடிபட்டதற்கும் சுதந் திர கட்சிக்கும் எதுவித சம்பந்தம் இல்லை என்று எழுத்து மூலமும் வீடியோ பதிவும் தர வேண்டும் என்று மிரட்டியுள்ளதாகவும்தனதுஉடைமைகளை அவர்கள் பறிமுதல் செய்துள்ளதாகவும் அவர் மேலும் குற்றம் சாட்டினார். (செ-6)

கைதான நபர் விடுதலை

(யாழ்ப்பாணம்)

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட நபரின் குறித்த ஒப்பு தல் வாக்கு மூலம் நிராகரிக்கப்பட்டதனால் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 2009ஆம் ஆண்டு 5 ஆம் மாதம் 15ஆம் திகதி ஓமந்தையில் வைத்து குறித்த நபர் கைது செய்யப்பட்டிருந்தார்.

இந்த நிலையில் குறித்த நபர் தொடர் பான வழக்கு விசாரணை நேற்று யாழ். மேல் நீதி மன்றத்தில் எடுத்துக்கொள்ளப் பட்டது.

இதன்போது குறித்த நபருக்கு எதிரான குற்ற ஒப்புதல் வாக்குமூலம் நிராகரிக்கப் பட்டதனால் விடுதலை செய்யப்பட் டார். (செ-6)

ஒரு வாரத்தில் யாழில் 40 இலட்சம் ரூபாய் அபேஸ்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் கடந்த வாரத்தில் மட் டும் காங்கேசன்துறை மற்றும் யாழ்.பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் சுமார் 40 இலட்சம் ரூபாய் பெறுமதியான பணம் மற்றும் பொருட் கள் மோசடிகளினாலும் திருட்டுச்சம்பவங் களினாலும் பறிபோயுள்ளதாக யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மொகமட் ஜெப்றி தெரிவித்துள்ளார்.

யாழ்.பொலிஸ் நிலையத்தில் நேற்று இடம்பெற்ற பொலிஸ் வாராந்த ஊடகவிய லாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த வருடம் 8ஆம் மாதம் மூன்றாம் திகதி தொண்டைமானாறு கெருடாவில் பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவரிடம் வவுனியா வேப்பம் குளம் பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் இத் தாலி நாட்டுக்கு அனுப்பி வைப்பதாகக் கூறி சுமார் 10 இலட்சம் ரூபாய் பணத்தினை பெற்று மோசடி செய்துள்ளார் என கடந்த மாதம் 28 ஆம் திகதி வல்வெட்டித்துறை பொலிஸ் நிலை யத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை வாகனம் கொள்வனவு செய்து தருவதாகக் கூறி 4 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் பணத்தை தன்னிடம் நபர் ஒருவர் மோசடி செய்து விட்டார் என சுண்டுக் குழியைச் சேர்ந்த நபர் ஒரு வர் யாழ் பொலிஸ் நிலையத்தில் கடந்த 28ஆம் திகதி முறைப் பாடுசெய்துள்ளார்.

இதேபோன்று யாழ்.நாவலர் வீதியைச் சேர்ந்த நபரிடம் 4 இலட்சம் ரூபாய் காசோ லையை மோசடி செய்துள்ளதாகவும் முறைப் பாடு கிடைக்கப்பெற்றுள்ளது.

இது தவிர நாவலர் வீதியிலுள்ள கடை ஒன்று உடைக்கப்பட்டு சுமார் 6 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் பெறுமதியான பணம் மற்றும் பொருட்கள் திருடப்பட்டுள்ளதாகவும் மானிப்பாய் ஆனைக்கோட்டை பகுதியில் சுமார் 73 ஆயிரத்து 100 ரூபாய் பெறுமதி யான கணனி திருட்டுப் போயுள்ளது.

சுன்னாகம் பகுதியில் நகைக்கடை உடைத்து 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் பெறுமதி யான தங்க ஆபரணங்கள் திருடப்பட்டுள்ள தாகவும், சுன்னாகம் சூராவத்தையில் சுமார் ஒரு இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் பெறுமதியான பொருட்கள் வீடு உடைத்து திருடப்பட்டுள்ளதாக வும் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை சுன்னாகம் உடுவில் பகுதி யில் நபரிடம் 6 இலட்சம் ரூபாய் பெறுமதியான காசோலை கொடுத்து மோசடி செய்ததாகவும் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளன. கடந்த வாரத்தில் மட்டும் இவ்வாறு 40 இலட் சம் ரூபாய் பெறுமதியான பணம் மற்றும் பொருட்கள் திருட்டுப் போயுள்ளதோடு மோசடி யும் செய்யப்பட்டுள்ளன என அவர் மேலும் தெரிவித்தார். (செ-6)

யாழ்-மன்னார் சேவை இன்றிலிருந்து வழமைக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து மன்னாருக் கான சேவையில் ஈடுபடும் தனியார் பேருந்து கள் இன்றிலிருந்து வழமைக்கு திரும்பும் என யாழ்.பிராந்திய கூட்டு இணைக்கப் பெற்ற பஸ் கம்பனிகளின் இணையத்தலைவர் கே.கங்காதரன் அறிவித்துள்ளார்.

மன்னார் சங்கத்தின் கோரிக்கையினை தேசிய போக்குவரத்து ஆணைக்குழு ஏற்று கூறுவிலை கோரல் நடை முறையினை தற்காலிகமாக நிறுத் தியுள்ளமையால் இன்று சனிக்கிழமை முதல் மன்னார் மாவட்ட பேருந்துகள் யாவும் சேவையில் ஈடுபடும் என்பதுடன் யாழ்ப்பாணத்திலி ருந்து மன்னார் செல் லும் யாழ். மாவட்ட பேருந்துகளும் வழ மையான நேர அட் ட வ ணை ப் ப டி சேவையில் ஈடுபடும் என்பதினை அறியத் தருவதாக தலைவர் கெங்காதரன் குறிப் பிட்டுள்ளார். (செ)

மரதன் ஓட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ் ஸ்வரா கல்லூரியின் நூற் றாண்டு விழா நிகழ்வு நாளை ஞாயிற்றுக் கிழமை கொண்டாடப்படவுள்ளது.

இந் நிகழ்வை முன்னிட்டு அன்றைய தினம் காலை 6 மணிக்கு யாழ்.வலயப்பாட சாலைகளுக்கிடையேயான மரதன் ஓட்டப் போட்டியும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக கல்லூரி அதிபர் எம்.மகேந்திரன் அறிவித் துள்ளார். (செ)

ஊடகப்படிகள் அறிமுக நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

சூரியன் எப்.எம். செய்தி முகாமையாளர் எம்.இந்திரஜித்தின் ஆக்கத்தால். ஊடகப்படி கள் அறிமுக நிகழ்வு இன்று பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாணம் பிரதான வீதியில் அமைந்துள்ள திருமறைக்கலா மன்ற கலைத் தூது மண்டபத்தில் ரட்ணசிங்கம் பூரணசற் குணலிங்கம் தலைமையில் இடம்பெறவுள் ளது. (செ-11)

A/L 2015
கலை வர்த்தகப் பிரிவுகள்
இன்று ஆரம்பம்
C.C.A
சுன்னாகம்
(2329)

விற்பனைக்கு
அரைக்கும் ஆலை ஒன்றில் உள்ள தேங்காய் எண்ணெய், சகல தானியங்களும் அரைக்கக் கூடிய நல்ல நிலையில் உள்ள கிறைண்டர் கள் விற்பனைக்கு உண்டு. (England மோட்டர்கள்)(அத்துடன் கடையும் சகல வசதிகளுடன் வாடகைக்கு விடப்படும்.)
தொடர்பு: 077 6081693
(2328)

பெயர் மாற்றம்
உரும்பிராய் கிழக்கு, உரும்பிராயில் வசிக்கும் சோதிவேல் மனோகரன் ஆகிய நான் 06.04.2013 (சனிக்கிழமை) இன்றி லிருந்து எனது பெயரினை சோதிவேல் ராஜன் என மாற்றிக் கொள்கின்றேன்.
இனி வருங்காலங்களில் என் சார்ந்த சகல ஆவணங்களிலும் இப்பெயரினையே பயன் படுத்துவேன் என்பதனையும் அறியத்தரு கின்றேன். (2330) சோதிவேல் ராஜன்.

ரலன்ட் அக்கடமி
TALENT ACADEMY
கணினி மற்றும் ஒலி, ஒளி அமைப்புக்களுடன் (Audio, Video - Home Theatre) முற்றிலும் நவீன முறையில்
ஏழாம் வகுப்பு தொடக்கம் 05 வரையான வகுப்புக்கள் நடைபெறுகின்றன
புலமைப் பரிசில் வகுப்புக்களும் நடைபெறுகின்றன
ஆரம்பம் : 06.04.2013 (சனி, மு.ப. 7.00 மணி)
இடம்: மல்லாகம் (புகையிரத வீதிக்கு அருகாமை)
(2331) -நிர்வாகி-

குறைந்த கட்டணத்தில் பொதிகள் சேவை
3 நாள்களில் உங்கள் கைகளில் பொதிகள் கிடைக்கக் கூடியவாறு துரித சேவை....

கட்டணங்கள் (1Kg) இற்கு
லண்டன் 1400/-
கனடா 2500/-
விசேட கட்டணங்கள் (5Kg) இற்கு
சுவிஸ் 7800/-
அவுஸ்திரேலியா 5500/-
ஜேர்மனி 5500/-
சாதாரண சேவை 1 kg க்கு : கனடா 700/- லண்டன் 600/-
(பொதிகள் நிறை 5 Kg க்கு மேற்பட்டதாக இருத்தல் வேண்டும்.)
குறிப்பு: கருவாடு மருந்து வகை, எண்ணை வகைகள் ஏற்றுக்கொள்ளப்படும்.
மேலதிக தொடர்புகளுக்கு:
Rain Bow Travels
இல.30/2, 3 ஆம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
021 221 9596, 0778710732

யாழ்ப்பாணம் செல்லா சினிமா

சரத்குமார், சேரன், சூர்யா, பிரசன்னா, பிரகாஸ் ராஜ் மற்றும் பிரபலமான நட்சத்திரங்கள் நடித்த
சென்னையில் ஒரு நாள்
10.30, 2.30, 6.30, 9.30
இலங்கையிலும் ஆந்தியாவிலும் ஒரே தின வெளியீடு

விற்பனைக்கு
நியூ பேனார்ட் (NEW BERNARD) NO.1 புறொயிலர் இன கோழி குஞ்சுகள் எம்மிடம் பதிவு செய்து பெற்றுக் கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு:-
செல்வரெட்ணம்
[illegible]
யாழ்ப்பாணம்.
0778448295
0776176370
(2316)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 1981 03 25
இறப்பு 2012 04 09
சிவராஜசிங்கம் ஜெயராஜ்
எம்மருகில் நீ இன்றில்லை
என்றாலும் எம் இதயத்தில் நீதான்
விண்ணுக்கு நீ விரைந்திட்டாலும் உன்
வண்ண முகம் மண்ணோடு மறையுமா?
உரும்பிராய், தெற்கு ஒஸ்கார்லேன். (சி-2887) தகவல் : பெற்றோர், சகோதரர்கள்.

பிள்ளையார் இன்
25% கழிவு
இன்றுமுதல் அதி விசேட 25% விலைக்கழிவுடன் தரமான சைவ உணவுகள் எமது உணவகத்தில் நிறைவான சேவையுடன் காலை, மாலையில் வழங்கப்படும்.
இன்றைய விசேட உணவு :-
பூரி உருளைக்கிழங்கு கறியுடன் ரூ100/-
சப்பாத்தி உருளைக்கிழங்கு கறியுடன் ரூ100/-
தொடர்புகளுக்கு : இல. 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2829
(C-1560)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இன்று ஒரு தகவல்

நன்றி

ஒரு ஊரிலே குரு இருந்தார். அவர் ஒருநாள் இரவு ஒரு முக்கியமான புத்தகத்தைக் கையிலே வைத்து படித்துக் கொண்டிருந்தார்.

அவர் படித்துக் கொண்டிருந்தது ஒரு ஞானநூல். அதிலே ஆழ்ந்து போய் இருந்தார் அந்தக் குரு.

அந்த நேரம் ஒரு திருடன் கையிலே கத்தியுடன் மெதுவாக உள்ளே நுழைந்தான். அந்தக் குருவின் அருகில் மெதுவாகப் போய் மிரட்டினான்.

''சத்தம் போடாதே! மரியாதையாக உன்னிடமுள்ள பணத்தைக் கொடு... இல்லையென்றால் கொன்று விடுவேன்... பணத்தைக் கொடுக்கிறாயா... இல்லையேல் ஒரு குத்தாக குத்தட்டுமா...?'' என்று மிரட்டினான்.

அந்தப் பெரியவர் நிமிர்ந்து பார்த்தார்.

''இதோ பாரப்பா... என்னைத் தொந்தரவு செய்யாதே! கொலை அச்சுறுத்தல் விடுக்காதே! அதோ பார்... அந்த மேசை மேலேதான் பணம் உள்ளது. எடுத்துக் கொள்'' என்று கூறிவிட்டு மறுபடியும் படிக்க ஆரம்பித்தார்.

திருடனும் மேசையை நோக்கி நகர்ந்தான்.

இவ்வேளை பெரியவர் தலை நிமிராமல் புத்தகத்தை பார்த்துக் கொண்டு சொன்னார்; ''எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு போக வேண்டாம். சிறிதளவு மிச்சம் இருக்கட்டும்... நாளைக்கு வரி கட்ட வேண்டியிருக்கிறது'' என்றார்.

இவருடைய நிதானம், பதற்றமின்மை, அமைதி இவற்றையெல்லாம் பார்த்த திருடன் அசந்து போனான்.

இருந்தாலும் அதை வெளியில் காட்டிக் கொள்ளாமல் அவர் கூறியவாறே சிறிதளவு பணத்தை வைத்து விட்டு மிகுதியாக இருந்த பணத்தை எடுத்துக் கொண்டு வாசலைத் தாண்டும்போது அந்தப் பெரியவர் சொன்னார்;

''எதை யார் கொடுத்தாலும் நன்றி சொல்ல வேண்டும்... அதுதான் நாகரிகம்?'' என்றார்.

திருடன் திகைப்புடன் திரும்பிப் பார்த்தான். ''நன்றி'' என்று சொல்லிவிட்டு அவன் தனது பயணத்தைத் தொடர்ந்தான்.

நாட்கள் சென்றன. அந்தத் திருடன் ஒருநாள் பொலிஸாரி டம் மாட்டிக் கொண்டான். பொலிஸார் அவனை விசாரணைக்குட்படுத்தினர். இதன்போது பெரியவர் ஒருவரின் வீட்டிலே திருடியதை அவன் ஒத்துக் கொண்டான்.

அந்தப் பெரியவரை சாட்சி சொல்ல பொலிஸார் அழைத்தனர். அதற்கு அவர் சொன்னார்; ''என்னைப் பொறுத்தவரைக்கும் இவன் திருடன் இல்லை; அவனுக்கு ஏதோ பணக்கஷ்டம் ஏற்பட்டது. அதனாலே அவன் என்னிடம் வந்தான்; நான் கொடுத்தேன்- ''நன்றி'' கூறி விட்டு போனான்... என்னப்பா ''நன்றி'' கூறினீயா இல்லையா? என்றார்.

''ஆமாம் சுவாமி... சொன்னேன்'' என்றான் திருடன் ஆச்சரியத்துடன்...

வேறு குற்றத்திற்காக அவன் சிறைக்குப் போனான்; சிறிது நாட்கள் சென்றபின் வெளியிலே வந்தான்.

வந்தபின் நேராக அந்தப் பெரியவரிடம் சென்றான்; ''குருவே என்னை சீடனாக ஏற்றுக் கொள்ளுங்கள்'' என்றான்.

அதன்பின்னர் அவன் பெரியவரின் சீடனானான்.

அந்தக் காலத்திலே இப்படி நல்லவர்களுடைய நடவடிக்கைகளே கெட்டவர்களை திருத்தியது. இந்தக் காலத்திலே அப்படியெல்லாம் நடக்குமா?

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

அபிவிருத்தித் திட்ட கட்டடங்கள் இன்று திறக்கப்படவுள்ளன

முல்லைத்தீவு மாவட்டத்தில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் நிதியுதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட அபிவிருத்தித் திட்ட கட்டடங்கள் இன்று திறக்கப்பட்டு பாவனைக்காக மக்களிடம் கையளிக்கப்படவுள்ளது.

வவுனியா வடக்கு பிரதேச செயலகப் பிரிவிலுள்ள நெடுங்கேணிப் பிரதேசத்தில் பேருந்து நிலையம், மற்றும் பொதுச்சந்தை என்பன காலை 9 மணிக்கும் கரைதுறைப் பற்று பிரதேசத்தில் திவிநெகும புத்தாண்டுச் சந்தை திறப்புவிழா முற்ற வெளி கச்சேரிக்கு முன்பாகவும் முல்லைத்தீவு கல்வி வலய கட்டடம் திறப்பு விழாவும் காலை 10 மணிக்கும் இடம்பெறவுள்ளது.

வெட்டு வாய்க்கால் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை வகுப்பறைக் கட்டடம், முல்லைத்தீவு மகா வித்தியாலயத்தில் மூன்று மாடிக் கட்டடம், ஆசிரியர் விடுதி, வகுப்பறைக் கட்டடம் ஆகிய திறப்பு விழா காலை 10 மணிக்கும் முல்லைத்தீவு பொது வைத்தியசாலை நோயாளர் விடுதி 11 மணிக்கும் தண்ணீரூற்று முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் வகுப்பறைக் கட்டடம் என்பன 11.15 இற்கும் திறக்கப்படவுள்ளது.

குமுழமுனை மகா வித்தியாலயத்தில் விஞ்ஞான ஆய்வு கூடம் திறப்பு விழா 11.30 மணிக்கும் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி விஞ்ஞான ஆய்வு கூடம் திறப்பு விழா நண்பகல் 12 மணிக்கும் புதுக்குடியிருப்பு பல நோக்கு கூட்டுறவு எரிபொருள் நிரப்பு நிலைய திறப்பு விழா 12.15 மணிக்கும் வள்ளி புனம் கனிஷ்ட உயர்தர வித்தியாலயத்தின் விஞ்ஞான ஆய்வு கூடம் திறப்பு விழா 12.30 மணிக்கும் இடம் பெறவுள்ளது.

ஒட்டுசுட்டான் தபாலகம் திறப்பு விழா 1.30 மணிக்கும் மலேரியா தடுப்பு இயக்கக் கட்டடம் திறப்பு விழா 2.15 மணிக்கும் மாங்குளம் முன்பள்ளி திறப்பு விழா 2.30 மணிக்கும் துணுக்காய் இறைச்சிக்கடை திறப்பு விழா 3 மணிக்கும் துணுக்காய் பிரதேச சபை கட்டடம் 3.15 மணிக்கும் ஐயங்கன்குளம் சந்தைக் கட்டடம் 4 மணிக்கும் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந் நிகழ்வில் கைத் தொழில் மற்றும் வணிக அமைச்சர் ரிசாத் பதியுதீன், ஜனாதிபதியின் முல்லைத்தீவு மாவட்ட இணைப் பாளர் சகனகரத்தினம், முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் நா. வேதநாயகன் மற்றும் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஹனைஸ் பாறூக், ஒவ்வொரு பிரதேச உதவி அரசாங்க அதிபர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ-3-267)

இந்துசமய தினைக்களத்தால் புதுவருட பஞ்சாங்கம் வெளியீடு

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் எதிர் வரும் 14 ஆம் திகதி வியாழக்கிழமை பிறக்கின்ற விஜய தமிழ் புதுவருடப் பிறப்பை முன்னிட்டு, கையடக்கப் பஞ்சாங்கம் ஒன்றை வெளியிடவுள்ளதாக இத்திணைக்கள உதவிப்பணிப்பாளர் ம.சண்முகநாதன் அறிவித்துள்ளார்.

இப் பஞ்சாங்கத்தில் புதுவருடப்பிறப்புத் தொடர்பான சுபநேரங்கள், புதுவருடப் பலன் கள், மாத ரீதியான சுப்நேர விபரங்கள், இந்துக்களின் விரதங்கள், இலங்கையில் உள்ள பிரதான ஆலயங்களின் வருடாந்த விழாக்கள் போன்ற பல அம்சங்கள் அடங்கியுள்ளன.

இலவசமாக விநியோகிக்கப்படும் இப்புதிய பஞ்சாங்கத்தைப் பெற விரும்புவோர் திணைக்களத்திற்கு நேரில் வந்து பெற்றுக் கொள்ளலாம் அல்லது தபால் மூலம் பெற விரும்புவோர், சுயமுகவரி எழுதப்பட்டு முப்பது ரூபா பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட 25X17 செ.மீ அளவான கடித உறையை பணிப்பாளர், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், இல.248 1/1, காலி வீதி, கொழும்பு- 4 எனும் முகவரிக்கு அனுப்பி பெற்றுக் கொள்ளலாம்.

கடித உறையை வைத்து அனுப்பும் வெளி உறையின் இடது பக்க மேல் மூலையில் பஞ்சாங்கம்-2013 எனக் குறிப்பிடுதல் வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

மரக்கறி வகைகள்	நெல்லியடி	திருநெல்வேலி	சாவகச்சேரி	கிளிநொச்சி
	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
கத்தரிக்காய்	40	40	60	30
உருளைக்கிழங்கு	60	630	70	70
பச்சைமிளகாய்	100	100	120	120
தக்காளி	60	50	80	80
மரவள்ளிக்கிழங்கு	60	40	50	40
கோவா	50	40	60	60
கரட்	100	100	1210	120
பூசணி	50	30	50	60
புடோல்	40	60	70	60
வாழைக்காய்	80	50	60	60
சின்ன வெங்காயம்	110	100	80-120	60-100
பெரிய வெங்காயம்	70	80	100	80
பாகற்காய்	80	80	120	100
வெண்டிக்காய்	630	40	80	80
கருணைக் கிழங்கு	100	70	--	80
பயற்றங்காய்	60	70	50	80
லீக்ஸ்	120	90	120	120
பீற்றூட்	90	40	80	60
கறிமிளகாய்	120	60	120	120
முருங்கைக்காய்	400	300	400	600
போஞ்சி	80	60	120	120
கத்தரிதம்புள்ள	20	30	40	--
கீரை - 1 பிடி	20	20	40	30
தேசிக்காய்	60	40	50	40
தேங்காய் (ஒன்று)	35-60	40-50	50	40-45
இராசவள்ளி	100	100	100	100

இராசி பலன்

06.04.2013
(பங்குனி 24, சனிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.07 மணிக்கு
ஏகாதசி மாலை 5.52 மணிவரை
அவிட்டம் முன்னிரவு 9.03 மணிவரை
இராகுகாலம் 9.08-10.38 மணிவரை
சுபநேரம் 3.08-4.38-6.10மணிவரை
ஏகாதசி விரதம், சித்தாமிர்தம்

மேடம் ஆனந்தமான நாள், ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், குடும்ப தேவைகளை பூர்த்தி செய்து கொள்வீர்கள், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள்.

இடபம் சொல்லை காப்பாற்ற துடிப்புடன் செயற்படுவீர்கள், சமுதாயத்தில் உயர்ந்த நிலைக்கு வரத்தோன்றும், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, மனதில் உற்சாகம் பிறக்கும்.

மிதுனம் பாதியில் நின்ற பணிகளை விரைந்து செய்து முடிப்பீர்கள், வியாபாரத்தில் ஏற்பட்ட இழப்புக்களை ஈடுசெய்ய முன்வருவீர்கள், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள்.

கடகம் கவலைகள் தீர கண்ணனை வழிபட வேண்டிய நாள், ஆரோக்கியத்தில் அச்சுறுதல் தோன்றி மறையும், வேலைச்சுமை கூடும், போசன சுகமுண்டு, கௌரவக் குறைவான சம்பவங்கள் ஏற்படலாம்.

சிங்கம் சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், கடன் பிரச்சினையை சமார்த்தியமாக பேசி சமாளிப்பீர்கள், மனதிற்கினிய சம்பவமொன்று நடைபெறலாம், நண்பர்கள் சந்திப்பால் பரவசமடைவீர்கள்.

கன்னி தொழில் வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், மனநிறைவு கூடும் நாள், தொலைபேசி வழித் தகவல்கள் மகிழ்ச்சி தரும், கௌரவம் அந்தஸ்து உயர்வடையும், அரை குறைவாக இருந்த பணிகளை மீதியும் செய்து முடிப்பீர்கள்.

துலாம் பிள்ளைகளால் மகிழ்ச்சி கூடும் நாள், கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள், பொருளாதார முன்னேற்றத்துக்கு பெண் வழி ஒத்துழைப்புக் கிடைக்கும், சேமிப்பை உயர்த்த நடவடிக்கை எடுப்பீர்கள்.

விருச்சிகம் வழிபாடுகளில் நம்பிக்கை வைப்பீர்கள், புதிய சொத்துக்கள் வாங்குவதில் இருந்த தடைகள் அகலும், பூர்வீக சொத்துக்களால் ஆதாயமுண்டு, பணத் தேவைகளை நிறைவு செய்து கொள்ள நண்பர்கள் ஒத்துழைப்பு வழங்குவர்.

தனுசு தொலைபேசி வழித் தகவல்கள் மகிழ்ச்சி தரும், குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், பாகப் பிரிவினைகள் சுமுகமாக முடியும், வியாபார விரோதம் விலகும்.

மகரம் பொது வாழ்வில் புகழ் கூடும், அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும், வருமானம் திருப்தி தரும், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், வாக்கு மேன்மையுண்டு.

கும்பம் ஒரு சில வேலைகளை முடிக்க பல மணி நேரம் காத்திருக்க நேரிடலாம், சான்றோர்களின் சந்திப்பில் சந்தோசமடைவீர்கள், தொழில் மேலதிகாரிகளை அனுசரித்து செல்வது நல்லது, போசன சுகமுண்டு.

மீனம் ஆதாயம் இல்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், உடனிருப்பவர்களை அனுசரித்து செல்வது நல்லது, சுபசெலவுகள் அதிகரிக்கும் நாள் கொடுக்கல் வாங்கல்களை ஒழுங்குபடுத்தி கொள்வீர்கள்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலியல் துஷ்பிரயோக விவகாரம்;

சந்தேக நபருக்கு விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

16 வயதுச் சிறுமியை பாலியல் துஷ்பிரயோகத்திற்குட்படுத்திய சந்தேகத்தின் பேரில் சாவகச்சேரி பொலிஸார் நபர் ஒருவரைக் கைது செய்து நீதிமன்றில் ஆஜர்படுத்தியுள்ளனர் என யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மொகமட் ஜெப்றி தெரிவித்துள்ளார்.

யாழ். பொலிஸ் நிலையத்தில் நேற்று இடம்பெற்ற வாராந்த பொலிஸ்- ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சாவகச்சேரி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் கோவில் பூசகர் (22 வயது நபர்)ஒருவர் தனது தங்கை முறையான 16வயதும் 2 மாதங்களுமான சிறுமி ஒருவரை பாலியல் துஷ்பிரயோகத்திற்குட்படுத்தியுள்ளார் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட மேற்படி சந்தேக நபரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

பாதிக்கப்பட்ட சிறுமியை தனியார் வைத்திய சாலைக்கு அவரது தந்தை சிகிச்சைக்காக கொண்டு சென்ற போது வைத்தியசாலையின் வைத்தியர் கொடுத்த தகவலின் பிரகாரம் சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)



நான்கு சந்தேக நபர்களுக்கும் பிணை வழங்க நீதிமன்று உத்தரவு

(கரவெட்டி)

பருத்தித்துறை பிரதேசசபை உறுப்பினர் தம்பிராசா மணீதரன் தாக்கப்பட்டு வெட்டப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய நான்கு சந்தேக நபர்களுக்கு பருத்தித்துறை நீதிமன்றம் பிணை வழங்கியது.

வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் தெற்குப் பகுதியில் உள்ள ஆலயக் காணியை நில அளவை அதிகாரிகளின் உதவியுடன் அளக்க முற்பட்ட நான்கு பேருக்கும் பிரதேச சபை உறுப்பினர்களுக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் பின் வெட்டுச் சம்பவத்துடன் முடிவுற்றது.

இச் சம்பவம் தொடர்பில் புலோலி வல்லி புரக்குறிச்சியை சேர்ந்த நான்கு சந்தேக நபர்களை பருத்தித்துறைப் பொலிஸார் கைது செய்து பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் ஆஜர்படுத்தினர்.

நான்கு சந்தேக நபர்களையும் விசாரணை செய்த நீதவான் அவர்களை பிணையில் விடுவித்ததுடன் அதில் ஒருவர் நீதிமன்ற அனுமதியுடன் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

இதில் கிட்டினன் சிவகுமார் (வயது-30) என்ற குடும்பஸ்தர் சிகிச்சை பெற்று வருகின்றார்.

மேலும் குறித்த நான்கு சந்தேக நபர்களையும் எதிர்வரும் யூன் மாதம் 6ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். (அ-3-24)

கடந்த வாரத்தில் கைதான 128 பேருக்கு விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

யாழ்மாவட்டத்தில்காங்கேசன்துறைபொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியிலும் யாழ். பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியிலும் கடந்த வாரத்தில் 128 பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மொகட் ஜெப்றி தெரிவித்துள்ளார்.

யாழ். பொலிஸ் நிலையத்தில் நேற்று இடம்பெற்ற பொலிஸ் வாராந்த ஊடகவியாலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த வாரத்தில்காங்கேசன்துறைபொலிஸ் பிரிவுக்குப்பட்ட பகுதியில் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 12 பேரும் சந்தேக நபர்கள் 15 பேரும் குடிபோதையில் வாகனம் செலுத்திய 4 பேரும் ஏனைய குற்றச்செயல்களுடன் தொடர்புடைய 37 பேருமாக 68 பேர் கைது செய்யப்பட்டதோடு யாழ். பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 6 பேரும் மதுபோதையில் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படுத்திய 4 பேரும் திருட்டுக் குற்றச்சாட்டில் 2 பேரும் சட்டவிரோதமாக மதுபானம் விற்பனை செய்த 5 பேரும் பிறரை அடித்து காயப்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் 19 பேரும் பொது இடத்தில் மது அருந்திய குற்றச்சாட்டின் பேரில் 2 பேரும் அத்துமீறி வீட்டிற்குள் நுழைந்த ஒருவரும் மதுபோதையில் வாகனம் செலுத்திய 5 பேரும் சூழல் மாசடையும் வகையில் செயற்பட்ட குற்றச்சாட்டின் பேரில் ஒருவரும் சந்தேகத்தின் பேரில் 11 பேரும் அரச உத்தியோகத்தரை அவரது கடமையை செய்யவிடாது இடையூறு ஏற்படுத்திய ஒருவரும் கொலைக்கு உதவியவர் என்ற சந்தேகத்தின் பேரில் ஒருவரும் பண மோசடி செய்தார் என்ற சந்தேகத்தின் பேரில்ஒருவருமாகமொத்தம் 60 பேர்கைதுசெய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

இவ்வருடத்தில் இதுவரை

பத்திற்கு மேற்பட்டோர் விபத்தில் சிக்கி பலியாகினர்

(யாழ்ப்பாணம்)

வீதி விபத்து காரணமாக யாழ்.மாவட்டத்தில் இவ்வருடத்தில் இதுவரை 10 பேருக்கு மேல் உயிரிழந்துள்ளனர். எனவே வீதி ஒழுங்கு விதிமுறைகளை பயணிகள் கடைப்பிடிப்பதோடு சமாந்தரமாக துவிச்சக்கர வண்டிகளில் பயணிப்பதையும் தவிர்த்துக் கொள்ளுமாறு யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மொகமட் ஜெப்றி தெரிவித்துள்ளார்.

யாழ்.பொலிஸ் நிலையத்தில் நேற்று இடம் பெற்ற வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ். மாவட்டத்தைப் பொறுத்தவரை கடந்த காலங்களைவிட குற்றச் செயல்கள் ஓரளவுக்கு கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. ஆனால் வீதி விபத்துக்கள் அதிகரித்து வருகின்றன. இந்த வருடத்தில் இதுவரை 10 இற்கும் மேற்பட்டவர்கள் வீதி விபத்தில் சிக்கி உயிரிழந்துள்ளனர்.

இதுதவிர வீதி விபத்துகளில் சிக்கி கால், கைகளை இழந்தும் உடலில் பலத்த காயங்களுடனும் பலர் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

வீதிகளில் சமாந்தரமாக துவிச்சக்கர வண்டிகளில் பயணிப்பதனாலும், தலைக்கவசம் இன்றி மோட்டார் சைக்கிளில் பயணிப்பதனாலும் மதுபோதையில் வாகனங்களைச் செலுத்துவதனாலும் இவ்வாறான விபத்துக்கள் அதிகம் இடம் பெறுகின்றன.

எனவே வீதி ஒழுங்குகளை பயணிகள் கடைப்பிடிக்க வேண்டும். அத்தோடு பாடசாலை மாணவர்கள் வீதிகளில் சமாந்தரமாக துவிச்சக்கர வண்டிகளில் பயணிப்பதை தவிர்த்துக் கொள்ள வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்தார்.

அத்தோடு வீதி விபத்துக்கள் தொடர்பில் பொலிஸாருக்கு உடனடியாக தகவல் கொடுக்கும் படியும் அவர் கேட்டுக் கொண்டார். (அ-6)

விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

ஜனசக்தி மழலைகள் கல்விப் பூங்காவின் விளையாட்டு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு மயிலணி முருகமூர்த்தி ஆலய மைதானத்தில் முன்பள்ளி பெற்றோர்களின் சார்பில் த.பிரதீபன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ் விளையாட்டு விழாவின் பிரதம விருந்தினராக யா/ஏழாலை சைவ சன்மார்க்க வித்தியாலய அதிபர் செல்வி ந.பிரதா, சிறப்பு விருந்தினர்களாக சுன்னாகம் குடும்ப முன்பள்ளி தலைவி திருமதி மன்றோ மக்லின், யா/கோட்டைக்காடு அ.த.க.பாடசாலை ஆசிரியர் திருமதி வாசுகி சச்சிதானந்தம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக க.மகேந்திரம் மற்றும் அவரது பாரியார், ஐ.பாலசிங்கம் மற்றும் அவரது பாரியார் ஆகியோரும் ஜனசக்தி முன்பள்ளி முகாமைத்துவ குழுவினரும் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-5)

வர்தன வங்கியின் சுன்னாகம் கிளை நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரி லக்மன் சில்வா நாடாவெட்டி கட்டடத் தினை திறந்து வைப்பதையும் வங்கியின் யாழ்.பிராந்திய முகாமையாளர் சரவணபவன் ரவீந்திரா உரையாற்றுவதையும் முதல் வைப் பினை பிரதம நிறைவேற்று அதிகாரி பெற்றுக் கொள்வதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- எஸ்.ஆர்.கரன்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

முறிகண்டி- முழங்காவில் வீதியை புனரமைக்குமாறு கோரிக்கை

சிறிதரன் எம்.பி. கிளி.அரச அதிபருக்கு மகஜரும் அனுப்பிவைத்தார்

(யாழ்ப்பாணம்)

முறிகண்டி,முழங்காவில் வீதி மிகவும் மோசமாக சேதமடைந்து காணப்படுவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் குற்றம் சாட்டியுள்ளதோடு வீதியை புனரமைத்து தருமாறு அரசாங்க அதிபருக்கு கடிதமும் அனுப்பி வைத்துள்ளார்.

இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில்,

கிளிநொச்சி மாவட்டத்தின் மக்கள் பாவனைக்குள்ள பிரதான வீதிகளில் முறிகண்டி, முழங்காவில் வீதி என்பன கடந்த இரண்டு வருடங்களாக எந்தப் புனரமைப்பும் இல்லாமல் மிக மோசமான நிலையிலுள்ளது.

அவசர நோயாளரைக்கூட கொண்டு வர முடியாத நிலை காணப்படுகின்றது. பருவமழையுடன் வீதியின் நிலை கவலைக் கிடமாகவுள்ளது. அதிலும் குறிப்பாக அக்கராயன், அம்பலப்பெருமாள் சந்தியிலிருந்து ஆனை விழுந்தான், வன்னேரிக்குளம், ஜெயபுரம், பல்லவராயன்கட்டு, முழங்காவில் வரையான வீதி மிகவும் மோசமாகவுள்ளது.

இவ்வீதியின் நிலை தொடர்பாக கடந்த 2012 ஆம் ஆண்டு 6 ஆம் மாதம் 13ஆம் திகதி புதன்கிழமை கிளிநொச்சி வீதி அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளருக்கும் நேரடியாகத் தெரி வித்திருந்தேன். 2012 இல் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்திலும் இது தொடர்பாக ஆராயப்பட்டுள்ளது.

ஆனால் இதுவரை எந்த விமோசனமும் இவ்வீதிக்கு கிடைக்கவில்லை. முழங்காவில், ஜெயபுரம், பல்லவராயன்கட்டு, வன்னேரிக்குளம், ஜயனார்புரம், ஆனைவிழுந்தான், சோலை, வேரவில், நாச்சிக்குடா, குமுழமுனை, வலைப்பாடு, கிராஞ்சி, இரணைமாதா நகர், கரியாலைநாகபடுவான் ஆகிய ஊர்க ளில் வாழுகின்ற மக்களின் போக்குவரத்து, வைத்தியசேவை, கல்வி மற்றும் இதரபணிகள் இவ் வீதி ஒழுங்கின்மையால் பாதிப்படைந் துள்ளன.

இவ்வீதி அவசரமாகப் புனரமைப்புச் செய்யப்பட வேண்டும். குறிப்பாக பாரிய குன்றுகளாக உள்ள பகுதிகள், வீதிகள் முழுவதும் கிரவல் மண்ணாவது இட்டு தற்காலிகமாக போக்குவரத்து செய்யக் கூடிய வகையில் நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகின்றேன் என அந்த அறிக்கையில் மேலும் தெரிவித் துள்ளார். (அ-6)

2014 இல் ஜனாதிபதி தேர்தல் கிடையாது

அமைச்சர் மைத்திரிபால தெரிவிப்பு

(கொழும்பு)

அடுத்த வருடம் ஜனாதிபதித் தேர்தலோ அல்லது பொதுத் தேர்தலோ இடம்பெறாதென சுகாதார அமைச்சரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

கொழும்பு மகாவலி கேந்திர நிலையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் 2014 ஆம் ஆண்டில் ஜனாதிபதித் தேர்தலோ அல்லது பொதுத் தேர்தலோ இடம்பெறுவதற்கான சந்தர்ப்பங்கள் இல்லை. அவ்வாறு அவை இடம்பெறுமானால் 2016 ஆம் ஆண்டில் தான் ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தல்கள் இடம்பெறும்.

நாட்டில் மதங்களுக்கிடையில் தோன்றியுள்ள பிரச்சினைகளுக்கு அரசாங்கம் பின்புலமாக செயற்படுகின்றதென தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டை முற்றாக நிராகரிக்கின்றோம். இதேவேளை கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளில் இடம்பெற்றுள்ள தீர்மானங்களை நாம் நிறைவேற்றி வருகின்றோம். அந்த வகையில் எனது அமைச்சின் கீழுள்ள தீர்மானங்கள் தொடர்பில் ஆராய்ந்து நடைமுறைப்படுத்த முதலில் தீர்மானித்துள்ளேன் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

விலங்கு விசர்நோய் தடுப்பு மருந்தேற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபை எல்லைக்குள் அமைந்துள்ள நல்லூர் பொதுச்சுகாதாரப் பரிசோதகர் பிரிவில் உள்ள வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய் தடுப்பூசி (ஏ.ஆர்.வி) வழங்கும் திட்டம் எதிர்வரும் 10 ஆம் திகதி முதல் ஒரு மாத காலமாக குறிப்பிட்ட தினங்களில் வெவ்வேறு இடங்களில் நடைபெறவுள்ளது என யாழ்.மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி அ.எ.ஞானசோதி தெரிவித்துள்ளார்.

இதன்படி எதிர்வரும் 10 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 9 மணிமுதல் 11 மணி வரையும் மூத்த விநாயகர் சனசமூக நிலையத்திலும் முற்பகல் 11.30 மணிமுதல் பிற்பகல் 1.30 மணிவரையும் ஆசீர்வாதப்பர் வீதியிலுள்ள சுகாதாரக் கல்வி மையத்திலும் நடைபெறவுள்ளது.

மறுநாள் வியாழக்கிழமை முற்பகல் 9 மணி முதல் 11 மணிவரையும் நாயன்மார் வீதியிலமைந்துள்ள சுகாதாரக் கல்வி மையத்திலும் முற்பகல் 11.30 மணிமுதல் பிற்பகல் 1.30 மணிவரை கடுக்காய் வீதியிலமைந்துள்ள சுகாதாரக் கல்வி மையத்திலும் நடைபெறவுள்ளது.எதிர்வரும் 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணி முதல் 11 மணிவரை கச்சேரி நல்லூர் வீதி சுகாதாரக் கல்வி மையத்திலும் முற்பகல் 11.30 மணி முதல் பிற்பகல் 1.30 மணிவரை நாவலர் வீதி நாற்சந்திப் பகுதியிலும் மேற்படி தடுப்பூசி வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

எனவே இச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி குறித்த பிரதேச மக்கள் தமது வளர்ப்பு நாய்களுக்கு மேற்படி தடுப்பூசியை ஏற்றிக் கொள்ளுமாறு மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-6)

உறங்கும் சிங்கத்தை தட்டி எழுப்பாதீர்கள்

தமிழகத்திற்கு மேர்வின் எச்சரிக்கை

(கொழும்பு)

சிங்கத்தை சீண்டிப்பார்க்க முயற்சிக்கக் கூடாது என மக்கள் தொடர்பு அமைச்சர் மேர்வின் சில்வா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

சிங்கத்தை சீண்டி தமிழகம் காயமடையப் போவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

தமிழகத்துடன் சிறந்த உறவுகள் காணப்படுவதாகவும் சகல பிரச்சினைகளுக்கும் தீர்வு கானும் ஆற்றல் ஜனாதிபதிக்கு இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் உறங்கும் சிங்கத்தைஎழுப்பி காயமடைய வேண்டாம் என தமிழகத்தை எச்சரிப்பதாகக் குறிப்பிட்டுள்ளார். இலங்கைக்கு எதிராக தமிழக திரைநட்சத்திரங்கள் நடத்திய உண்ணாவிரதப் போராட்டத்தையும் அமைச்சர் விமர்சனம் செய்துள்ளார்.

மெய்யான ஹீரோக்களாக இருந்தால் சாகும் வரையில் உண்ணாவிரதம் இருந்திருக்க வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். இடை நடுவில் உண்ணாவிரதப் போராட்டம் கைவிடப் பட்டிருக்காது என அவர் குறிப்பிட்டுள்ளார். தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவின் நிலைப் பாட்டை புரிந்து கொள்ள முடியவில்லை என அமைச்சர் தெரிவித்துள்ளார். (அ-2)

கரும்புலிகளின் படகைப் பார்த்து ஆச்சரியமுற்ற சீன அமைச்சர்

இலங்கைக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ள சீனாவின் உதவிப் பாதுகாப்பு அமைச்சர் செகுயு கியுக் தலைமையிலான சீனப் பாதுகாப்பு அதிகாரிகள் குழு கடந்த 3 ஆம் திகதி திருகோணமலையில் பாதுகாப்பு நிலைகளை பார்வையிட்டதாக தெரியவருகின்றது.

அத்துடன் அங்கு காட்சிக்கு வைக்கப்பட்ட கடற்புலிகளால் வடிவமைக்கப்பட்டு போருக்காக பயன்படுத்தப்பட்ட கரும்புலித் தாக்குதல் படகு ஒன்றை பார்த்து அவர் ஆச்சரியப் பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும் கடற்புலிகள் கரும்புலித் தாக்குதல் படகை அமைப்பதற்கு எத்தகைய தொழில் நுட்பத்தை கையாண்டுள்ளனர் எனவும் எவ்வாறான தாக்குதல் உத்திகளை மேற்கொண்டிருந்தமை குறித்தும் சீனப் பாதுகாப்பு அமைச்சர், இலங்கைக் கடற்படையின் கிழக்கு பிராந்திய தளபதியிடம் கேட்டறிந்து கொண்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறித்த சீன பாதுகாப்பு அதிகாரிகள் குழு திருகோணமலையில் அமைந்துள்ள ஸ்ரீலங்கா கடற் படையின் கிழக்குத் தலைமையகமான கொக்ஸ்ட்டுக்கு சென்றதுடன் துறைமுகம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளைப் பார்வையிட்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது. (அ-2)

கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: ரேவதி 1
உயரம்: 5'9"
தகைமை/தொழில்: A/L, விவசாயம் (கணனி தனியார்)
தொ.இ: B -1548

பிறப்பு: 1976 இந்து (குருகுலம்)
நட்சத்திரம்: சுவாதி 2
உயரம்: 6'
கி.பா: 35, சூரி, செவ் ஒரே வீட்டில்
தகைமை/தொழில்: A/L, கணனி தொடர்பான தொழில் (தனியார்)
தொ.இ: B -1550

பிறப்பு: 1970 இந்து (சிவகோத்திரம்)
நட்சத்திரம்: சித்திரை 2
உயரம்: 5'8"
கி.பா: 21, சூரி, செவ் ஒரே வீட்டில்
தகைமை/ தொழில்: A/L, Asst. Tax (Manager)
தொ.இ: B -1551

பிறப்பு: 1976 இந்து வேளாளர்
நட்சத்திரம்: பரணி 4
8 இல் செவ்
உயரம்: 5'11"
தகைமை/தொழில்: A/L கிராம அலுவலர்
தொ.இ: B -1554

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1980 இந்து வேளாளர்
நட்சத்திரம்: அனுசம்
உயரம்: 5'5"
கி.பா: 13, 1 இல் செவ்
தகைமை/ தொழில்: A/L, நூலக உதவியாளர் (அரச)
தொ.இ: G -1586

பிறப்பு: 1983 இந்து வேளாளர்
நட்சத்திரம்: மகம் 3
உயரம்: 5'4"
தகைமை/ தொழில்: B.A, ACCA கணக்காளர் (UK PR)
தொ.இ: G-1587

பிறப்பு: 1980 இந்து வேளாளர்
நட்சத்திரம்: கேட்டை 1, 7 இல் செவ்.
உயரம்: 5'3"
தகைமை/ தொழில்: O/L தனியார் நிறுவனம்
தொ.இ: G -1590

பிறப்பு: 1976 இந்து வேளாளர்
நட்சத்திரம்: பூசம்
உயரம்: 5'6"
கி.பா: 38.5, 4 இல் செவ்.
தகைமை/ தொழில்: பட்டதாரி ஆசிரியை
தொ.இ: G -1591

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
(ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்)
ஊடக அனுசரணை வலம்புரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுத்தத்தில் உயிரிழந்தவர்களின் பெயர்களை வெளியிட வெளிநாட்டின் உதவி அவசியம்

இராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு

யுத்தம் இடம்பெற்ற காலத்தில் உயிரிழந்தவர்கள் பற்றிய சரியான புள்ளி விபரங்களை வெளியிட வெளிநாட்டு உதவிகள் அவசியமானது என இராணுவப் பேச்சாளர் ருவான் வனிக சூரிய தெரிவித்துள்ளார்.

யுத்தம் இடம்பெற்ற காலத்தில் உயிரிழந்த தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்கள் மற்றும் இயற்கை காரணங்களினால் உயிரிழந்தவர்கள் பற்றிய சகல விபரங்களையும் திரட்டுவதற்கு வெளிநாடுகளின் ஒத்துழைப்பு அவசியம் என அவர் குறிப்பிட்டுள்ளார். இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

யுத்தம் இடம்பெற்ற காலத்தில் வெளிநாடுகளுக்கு புலம்பெயர்ந்தவர்கள் பற்றிய துல்லியமான தகவல்களின் அடிப்படையிலேயே உயிரிழந்தோர் தொடர்பான சரியான தகவல்களை வெளியிட முடியும்.

யுத்தத்தின் போது உயிரிழந்ததாக அறிவிக்கப்பட்ட சிலர் தற்போது வெளிநாடுகளில் வாழ்ந்து வருகின்றமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டை விட்டுத் தப்பிச் சென்ற சில விடுதலைப் புலி உறுப்பினர்களை அவர்களது குடும்ப உறுப்பினர்கள் பொதுமக்கள் என அடையாளப்படுத்தி வருவதாகக் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆறு ஆண்டுகளில் 2 இலட்சத்து 50 ஆயிரம் இலங்கையர்களுக்கு கனடாவில் நிரந்தர குடியுரிமை வழங்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு குடிவரவு அமைச்சர் ஜேசன் கென்னி தெரிவித்திருந்தார்.

யுத்த காலத்தில் உயிரிழந்தவர்கள் தொடர்பில் முரண்பட்ட தகவல்களையே சர்வதேச ஊடகங்களும் வெளியிட்டு வருகின்றன.

மேலும் சில ஊடகங்கள் நாட்டின் ஸ்திரத்தன்மைக்கு குந்தகம் ஏற்படுத்தும் முனைப்புக்களில் ஈடுபட்டு வருகின்றன.

தமிழீழ விடுதலைப் புலிகள் யுத்த ரீதியாக தோற்கடிக்கப்பட்ட போதிலும் தொடர்ந்தும் சில தனி நாட்டுக் கோரிக்கையை முன்னெடுத்து வருகின்றனர் என்றார். (அ-2)

ஆஸி. செல்லமுற்பட்ட 38 பேர் கைது

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் அவுஸ்திரேலியா செல்லமுற்பட்ட 38 பேர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். களுத்துறைப் பகுதியில் வைத்து நேற்றுமுன்தினம் கைதானவர்களில் 35 பேர் தமிழர்களாவர்.

அவர்கள் குற்றப் புலனாய்வு தரப்பிடம் மேலதிக விசாரணைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளதாக கடற்படையினர் தெரிவித்துள்ளனர். இதில் 2 சிங்களவர்களும், ஒரு முஸ்லிமும் உள்ளடங்குகின்ற நிலையில், 24 ஆண்களும், 5 பெண்களும் மற்றும் 9 சிறுவர்களும் உள்ளடங்குகின்றனர்.

இந்த பகுதியில் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்த கடற்படையினரால் அவர்கள் கைது செய்யப்பட்டனர். (அ-2)

க.பொ.த.(சா/த) பரீட்சை முடிவுகள்-2012

2012 ஆம் ஆண்டுக்கான கல்வி பொதுத் தராதர சாதாரண தர பரீட்சை பெறுபேறுகள் வெளியாகியுள்ளன.

இதனடிப்படையில் முன்னணி பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களின் விபரங்கள் அவ்வப் பாடசாலை அதிபர்கள் அறிவித் துள்ளனர்.

அதன் விபரம் வருமாறு:-

யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை

ஆங்கில மொழிமூலம்

சி.பாவனா- 9ஏ,தி.ஜனுஜா -9ஏ, செ.கவிதா-9ஏ, அ.நிக்கலின் ஸ்டநிஷா -9ஏ, கு.சலோம் துஷ்யந்தி -9ஏ, உ.தேனுகா- 9ஏ.வி. டக்சனா-8ஏபி, ப.கஜவதனி- 8ஏபி,சி. பிரியந்தினி- 8ஏசி, ர.ரேவதி- 8ஏசி, யோ. சுயோதமி- 8ஏபி, லோ. தர்சிகா- 8ஏசி, ச.தர்வஜோதி- 8ஏபி, ச.திவ்யா- 8ஏசி, ஸ்ரீ.உமையாள்- 8ஏபி, பா.விதுஷா- 8ஏசி, சி.சபார்த்தினி- 8ஏசி.

தமிழ்மொழி மூலம்

சு.சுவேதா- 9ஏ, ம.தனுஷியா- 9ஏ, செ.கம்சவாகினி- 9ஏ, கு.சுஜானி- 9ஏ, பா.கம்சா-9ஏ, சி.கீதாஜினி- 9ஏ, மு.சுலக்சனா- 9ஏ, சி.லக்சனா- 9ஏ, ஸ்ரீ.சுகிந்தா- 9ஏ, சூ.தர்ச்சனி- 9ஏ, தி. மிதுஷா- 8ஏசி, வி.நயனிதா-8ஏபி,செ. சரணியா- 8ஏசி, அ.சிந்துஜா-8ஏசி, சூ.ஸ்ரீநாகசாயினி- 8ஏசி,சி.வித்தியா-8ஏசி, பு.பவித்திரா- 8ஏபி, ப.கதிர்தர்ஷினி-8ஏபி,ச. தாட்ஷாயினி- 8ஏபி, க.ஜனனி-8ஏசி, செ.ஜெயவதனி- 8ஏபி, லோ.சரண்யா-8ஏபி, வ.சங்கவி- 8ஏசி, கு.தர்மிலா- 8ஏபி, கை.யாழினி- 8ஏபி, த.ஹரினா- 8ஏசி, சி. கஜப்பிரியா- 8ஏசி, உ.கீர்த்திகா- 8ஏபி, பு.மயூரி- 8ஏபி, மு.பவித்திரா- 8ஏபி,சி.பிரவீணா- 8ஏபி, செ.சாகித்தியா- 8ஏபி, ரா.ஷாலினி-8ஏசி, சி.சுகன்யா-8ஏசி, கு.வனோஜா- 8ஏபி, மோ.விதுஷா- 8ஏபி, லோ.பவப்ரியா- 8ஏபி, ர.கீர்த்திகா -8ஏபி, ர.கோசிகா -8ஏசி, ம.குகாயினி 8ஏசி, ஜெ.பிரியங்கா- 8ஏசி.

யா/ மத்திய கல்லூரி

சி.ராம்குமார் 8ஏசி, செ.கஜன்- 7ஏபிசி, அ.அமுதன் -6ஏபி2சி, சி.கேடில்ஸ் -5ஏபி3சி, ஜெ.குகந்தன் -4ஏ3பி2சி, க.கிருசாந்தன்- 4ஏ3பி2சி, க.துஷ்யந்தன் -4ஏ3பிஎஸ், கி.கிருசாந்தன் 4ஏ2பி3சி, த.சுபேசன் -4ஏ2பிசிஎஸ், த.சரண்ராஜ்-4ஏபி4சி.

யா/ இந்து மகளிர் கல்லூரி

ஆர்.தமயந்தி -9ஏ,என். வேணுஜா-9ஏ, ஜெ.டிஜீர்த்தனா- 9ஏ, ரி.பிரதாஜினி-9ஏ, ஆர்.தனரோஜினி-8ஏபி,பி.தனுப்பிரியா -8ஏசி,எஸ். சுபலட்சுமி (ஆங்கிலமொழி மூலம்)-8ஏசி,எஸ்.பரணிகா-8ஏசி,எஸ். சாம்பவி-7ஏ2பி,வி.கல்பனா-7ஏ2பி, எஸ். சாருன்ஜா-7ஏ2பி,எஸ்.ஸ்ரீசங்கமீரா-7ஏ2பி,ரி. அனுத்திகா-7ஏபிசி, கே.விஷ்ணுகா -6ஏ3பி, பி.சுபாங்கி-6ஏ3பி, கே.டட்சா யினி-6ஏ3பி, ஜி.விசாலினி-6ஏ2பிசி, ஆர்.சாருசா-6ஏ2பிசி,எஸ். பவிதா-6ஏ2பிசி, பி.துசாங்கி- 8ஏ2பிஎஸ், எஸ்.நிவின்சனா-6ஏ2பிஎஸ்,எஸ்.கௌதமி-6ஏசி2எஸ்.

யா/கொக்குவில் இந்துக் கல்லூரி

பே.சங்கீத்தன்-9ஏ, சி.தனுசன்-9ஏ, த.இந்துஷானி-9ஏ,து.அபிராமி-9ஏ, உ.துளசிகா-9ஏ, தி.மதுரன்-8ஏபி, செ.சுஜீபன்-8ஏபி, ஜெ.உஷாந்தினி-8ஏபி, நா.குமரன்-8ஏசி, மா.லஜீவன்-8ஏசி, லி.மிளிரன்-8ஏசி, இ. ஜினிதன்-8ஏசி, க.மதிவதனி-8ஏசி, பா.அபிராமி-8ஏ, இ.ரம்யா-7ஏ2பி, உ.சாந்திகா-7ஏ2பி, செ.விதுசன்-7ஏபிசி, ந.செந்தூரன்-5ஏ3பிசி, ர.கிருஷானி-5ஏ3பிசி, ப.ஜீனோத்-5ஏ2பிசிஎஸ், சு.சஞ்சீவன்-5ஏ2பி2சி, ஜெ.றதீபன்-5ஏ2 பிசி, கா்.மயூரா- 5ஏ2பி 2சி,சி.பிரவீணா-5ஏ2பி2சி, வி.தனுசிகா- 5ஏ2பி.2சி, மு.தர்சிகா- 5ஏபி3சி, ச.ஜெனந்தினி-5ஏபி3சி, ப.துவாரகன்- 5ஏ4சி. ரா.சாமினி-6ஏ3பி, மா.சாரங்கன்-6ஏ2பிசி, சு.சுபாங்கன்-5ஏ4பி,

யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்

கி.சாய்ரூபன்- 9ஏ, க. மதனாகரன்- 9ஏ, ஸ்ரீ.கார்த்திக்- 9ஏ, , க.பூங்குன்றன் -8ஏசி, வி.சத்தியப்பிரியன்-8ஏசி,த.அனோசன்-8ஏஎஸ்,கி.அபிரா-8ஏஎஸ், ச.விதுர்ஷா-8ஏஎஸ்,நே.ராஜமனோகரி-8ஏஎஸ், ர.செந்தூரன்-7ஏ2பி, த.தினேஸ்-7ஏபிசி, யோ.சஜந்தன்-7ஏபிசி, பி.ராம்கி-7ஏபிசி,ச.சுதாகர்-7ஏபிசி, சி.சுஜீபன்-7ஏபிசி, ஏ.அலன்றொக்ஸி-6ஏ2பிசி,சி.கோகுலன்-6ஏ2பிசி, தி.நிருசன்-6ஏ2பிசி, நா.துஷானி-5ஏ4பி, பா.ஆதர்சன்-5ஏ2பி2சி,சி.தனுசன்-5ஏபி3சி, அ.அஜித்தா-5ஏபி3சி.

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி

ம.விவிதாரணி- 9ஏ, இ. தமிழினி- 8ஏபி , சி.சிவஜனனி-6ஏ3பி, தி.இந்துஜா- 5ஏ3பிசி, சு.கிரிஷா-4ஏ3பி2சி, ஸ்ரீ.குகதாசன்-4ஏ2பி2சி,

மானிப்பாய் மகளிர் கல்லூரி

தமிழ்மொழிமூலம்

ப.சர்மிளா-9ஏ,சி. நவநீதா-8ஏபி,சி. அனிக்கா-4ஏ2பி3சி, ந.நிதர்சனா - 4ஏபி3சி,

ஆங்கிலமொழிமூலம்

கு.கம்சத்வனி-6ஏ2பிசி க.தனுசியா-8ஏபி, ஸ்ரீ.ஆரபி-8ஏபிதரிசாயா-4ஏ2பி3சி,ரா.நிரோசா-3ஏ4பி 2சி

யா/ மகாஜனாக் கல்லூரி, தெல்லிப்பழை

கி.விஷ்ணுகா-9ஏ,ஜெ.மயூரன்-8ஏசி, ஆ.கிருஷா-8ஏசி,வா.விதுஷா-8ஏசி, லி.நேருஜா-7ஏ2பி, ப.கௌதமன்-7ஏபிசி, ஜெ.பரணிதா-7ஏபிசி,சு.சஷானா-6ஏ2பிசி, த.மதுரன்-6ஏ2பி, ஞா.டிலக்ஷன்-5ஏபி2சி எஸ், லோ.ஷயிதா-5ஏபி2சிஎஸ், ம. லோஜினி-4ஏ3பி2சி, ச.அபிசயனி-4ஏ3பி2சி, ப.ஜஸ்வர்யா -4ஏபி3சி

யா/விக்டோரியா கல்லூரி, சுழிபுரம்

தமிழ்மொழிமூலம்

ரா.சிவராமன்-9ஏ, ப.டிலக்சனா-9ஏ, யோ.கிருஸ்ணவேணி-8ஏபி,தி.வேணுராஜ்-8ஏசி, கு.நிருஜா- 6ஏ2பிசி, ர.நிரோஜன்-5ஏ3பிசி, த.நிலக்சிகா-5ஏ3பிசி, க.சயந்தன்-5ஏ2பி2சி,ஜெ.நேசக்குமாரன்-4ஏ3பிசிஎஸ்

ஆங்கிலமொழிமூலம்

தி.தாரணி-7ஏபிஎஸ், பா.ரூபினி-6ஏ2பிசிஎஸ்,தி.அனோஜன்-4ஏ3பி சிஎஸ், பா. மதுவந்தி-4ஏ2பி2சிஎஸ்,ச.ஜசிந்தா-2ஏ 4பி 2சி.

ஆங்கில மொழிமூலம்

த.துவாரகா-8ஏ பி, லி.விதுர்ஷா -7ஏபிசி, ம.ஆரணி-6ஏ2பிசி பி.மயூரியா- 6ஏ2பிஎஸ்.

யா/பெரியபுலம் மகா வித்தியாலயம்

சு.நிரோஜினி-7ஏ2பி, சு.ஜங்கரன்-7ஏபிஎஸ், செ.துர்க்கேசன்-6ஏபி2சி.

ஆங்கிலமொழிமூலம்

ம.பானுசன்- 7ஏபிஎஸ் ,சி.லேய்பிரணவன்-7ஏசிஎஸ், த.டிவேசன்-6ஏ2பிசி, சி.வைகுந்தன்-5ஏ3 பிசி.

பரிசளிப்பு விழாவும் மலர் வெளியீடும்

யாழ்/காங்கேசன்துறை நடேஸ்வரக் கல்லூரியின் பரிசளிப்பு விழாவும் நடேஸ்வரன் மலர் வெளியீட்டு விழாவும் இன்று சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு கல்லூரி அதிபர் பொ.அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளர் செ.சந்திரராஜா, சிறப்பு விருந்தினராக தெல்லிப்பழை கோட்டக்கல்விப் பணிப்பாளர் சு.சண்முகுலகுமாரன்,கௌரவ விருந்தினராக இலங்கை வங்கியின் ஓய்வு பெற்ற பிராந்திய முகாமையாளர் லயன் சி.விக்கினராஜா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

விழாவிற்கான ஆசியுரையினை தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் வழங்கவுள்ளார்.

நூல் வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினராக வடமாகாண சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன், சிறப்பு விருந்தினராக யாழ்.அரசாதியர் பயிற்சிக் கல்லூரியின் அதிபர் செல்வி.றயுலாதேவி வல்லிபுரநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

நூல் வெளியீட்டுரையினை யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் ஈ.குமரன் வழங்கவுள்ளார். (அ-5)

தர்மபுரம் புனித லூக்கா முன்பள்ளியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி கடந்த புதன்கிழமை நடைபெற்றது. இந்நிகழ்வில் தர்மபுரம் பிரதேச.பொலிஸ் அதிகாரி ஒலிம்பிக் தீபம் ஏற்றி விளையாட்டு நிகழ்வினை ஆரம்பித்து வைப்பதனையும், பிரதம விருந்தினராக கலந்து கொண்ட ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் வை.தவநாதன் உரையாற்றுவதனையும், மாணவர்களின் இசையும் அசைவும் நிகழ்வினையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: புளியம் பொக்கணை செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயணிகளோ சொற்பம்; பேருந்துகளோ அதிகம்

சுட்டிக்காட்டி அரச அதிபருக்கு மகஜர்

(மல்லாவி)

முல்லை.மாவட்டத்தில் பயணிகளுக்கு அதிகமான தனியார் பேருந்துகளுக்கான அனுமதியை முல்லை. மாவட்ட அரச அதிபரும் முல்லை.மாவட்ட தனியார் போக்குவரத்து சங்கமும் வழங்கியுள்ளது. இதனால் பயணிப்பதற்கு போதியளவு பயணிகள் சேவை கிடைக்காமை காரணமாக லீசிங் கம்பனிகளில் குத்தகை அடிப்படையில் எடுக்கப்பட்ட பேருந்துகளில் பயணித்தவர்களை இடையில் இறக்கிவிட்டு கடன் கொடுத்த கம்பனிகள் பறித்து செல்கின்றனர் என குறிப்பிட்டு பாதிக்கப்பட்ட முல்லை.மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர்கள் முல்லை.மாவட்ட அரச அதிபருக்கும் முல்லை.மாவட்ட தனியார் பேருந்து சங்கத்தினர் உட்பட போக்குவரத்து துறை சார்ந்த பலருக்கு மகஜர்களை அனுப்பி வைத்துள்ளனர்.

இது தொடர்பாக அம் மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இறுதிப் போருக்கு முன்னரான காலப் பகுதியில் வன்னியில் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான தனியார் போக்குவரத்து சேவை சிறப்பாக இயங்கி வந்தது.

யுத்தத்திற்கு முன்னர் பணியில் ஈடுபட்ட பேருந்துக்கள், சிற்றூர்திகள் அனைத்தையும் வட்டுவாகல், முள்ளிவாய்க்கால் போன்ற இறுதிப் போர் நடைபெற்ற பகுதிகளில் கைவிட்டு உரிமையாளர்கள் சென்றிருந்தனர்.

இந்நிலையில் மீண்டும் மீள்குடியேற்றம் ஆரம்பிக்கப்பட்டு தற்போது வகை தொகையற்ற நிலையில் தனியார் போக்குவரத்து சங்கங்கள் போக்குவரத்து சேவைக்கான அனுமதியினை வழங்கியதன் காரணமாகவே இவ் அவல நிலை ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக முல்லை.மாவட்டத்தில் 70 தனியார் போக்குவரத்து பேருந்துக்களுக்கான அனுமதி மட்டுமே தேவையானவிடத்து 140 இற்கு மேற்பட்ட பேருந்துகளுக்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் முல்லை.மாவட்டத்தில் செயலிழந்திருந்த இ.போ.ச பேருந்து சேவையானது தற்போது 15 பேருந்துகளுக்கு மேல் பணியில் ஈடுபடுவதுடன் இன்னும் 25 பேருந்துக்கள் பணியில் ஈடுபடுவதற்கு அனுமதி உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மீள்குடியேறிய மக்களின் தொகைக்கு அதிகமாக பயணிகள் பேருந்துகள் இருப்பதன் காரணமாக லீசிங் கம்பனிகளில் கடன் எடுத்து பேருந்துகளை கொள்வனவு செய்தவர்கள் அக்கடனை மீள செலுத்த முடியாது திணறுகின்றனர்.

பலர் தற்கொலைக்கு முயற்சிகளை மேற் கொண்ட நிலையில் உறவினர்களால் காப்பாற்றப்பட்டுள்ள சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

இதேவேளை, தேசிய போக்குவரத்து சேவை ஆணைக்குழுவின்வழி அனுமதியின்றிமுல்லை மாவட்ட அரச அதிபரின் அனுமதியுடன் பணியில் ஈடுபடுகின்ற பேருந்துகளினை கடமையில் ஈடுபடுகின்ற போக்குவரத்து பொலிஸார் மறித்து அவர்களுக்கெதிராக் நீதிமன்ற நடவடிக்கையினை மேற்கொள்கின்றனர்.

இதுவரை முல்லை.மாவட்டத்தில் 20 இற்கு மேற்பட்ட பேருந்துகளினை லீசிங் கம்பனிகள் பறித்துச் சென்றிருக்கின்ற அவல நிலை காண முடிகின்றது.

எனவே,பல்வேறுவழிகளில்பாதிக்கப்பட்டுள்ள நாம் மேலும் மேலும் பாதிப்படைவதை தவிர்க்கும் முகமாக அரச உதவிகள் மூலம் பேருந்துகளை கொள்வனவு செய்வதற்கு வழி ஏற்படுத்தி தருவதற்கு ஆவன செய்ய வேண்டும்.

போதியளவு பேருந்துகளுக்கான பணிகள் கிடைப்பதற்கும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் வழி அனுமதி பெறுவதற்கும் ஏற்ற ஒழுங்குகளை ஏற்படுத்தி தருமாறு கேட்டுக் கொள்கின்றோம் என அம் மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-3-15)

கோண்டாவில் சிவபூமி பாடசாலையின் விளையாட்டுப் போட்டி நிகழ்வு நேற்று முன் தினம் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் மாணவர்களின் விளையாட்டு நிகழ்வினையும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடமாகாண கல்வி அமைச்சின் பிரதி செயலாளர் ப.விக்னேஸ்வரன் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கியபின் இப் பாடசாலையின் இயக்குநர் ஆறு.திருமுருகனுடன் அருகில் நிற்பதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- என்.குமார்)

இராஜதந்திரிகளுக்கு பீரிஸ் விளக்கம்

நாட்டின் தற்போதைய நிலைமை குறித்த வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கு வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் விளக்கம் அளித்துள்ளார்.

நாட்டின் .அரசியல், பொருளாதாரம் மற்றும் சமூகம் போன்ற காரணிகள் தொடர்பில் இதன்போது விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டு தூதுவர்கள் மற்றும் உயர்ஸ்தானிகர்கள் இந்த நிகழ்வில் பங்கேற்றனர்.

வெளிநாட்டு தூதுவர்களும் உயர்ஸ்தானிகர்களும் நாட்டின் தற்போதைய நிலைமை குறித்து கேள்வி எழுப்பியுள்ளனர்.

இந்தக் கேள்விகளுக்கும் அமைச்சர் பீரிஸ் விளக்கமளித்துள்ளார். (அ-2)

12 கோடி ரூபா பெறுமதியான சிகரெட் கைப்பற்றப்பட்டது

சுமார் 12 கோடி ரூபா பெறுமதியான பொப் மவுண்டன் ரக சிகரெட்டுகள் அடங்கிய கண்டேனர் ரகவாகனமொன்றை சுங்கப் பரிவு அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

இதேவேளை, புத்தாண்டுக் கால விற்பனைக்காகக் கொண்டுவரப்பட்ட கழிவுகள் அடங்கிய நெத்தலிக் கருவாடுகள் அடங்கிய கண்டேனர் ரக வாகனம் ஒன்றும் சுங்க அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளது.

டுபாயிலிருந்தே இந்த நெத்தலிக் கருவாடுகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (அ)

நீர்ப்பாசன கட்டடம் திறந்து வைப்பு

(பூந்தோட்டம்)

வவுனியா பிராந்திய நீர்ப்பாசன திணைக்களத்திற்கு புதிய கட்டடத் தொகுதி நேற்று காலை திறந்து வைக்கப்பட்டது.

யாழ்.வீதியில் அமைக்கப்பட்ட இக் கட்டடத் தொகுதியினை நீர்ப்பாசன அமைச்சர் தினேஸ் குணவர்த்தன சம்பிரதாயபூர்வமாக திறந்து வைத்திருந்தார்.

65 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட இக் கட்டடமானது வவுனியா பிராந்தியத்தின் நீர்ப்பாசன வேலைத்திட்டங்களை மேம்படுத்துவதற்கும் அதனுடான சேவைகளுக்கும். பெரும் பங்காற்றுமென இதன் போது அமைச்சர் கருத்து தெரிவித்தார்.

இந்நிகழ்வில் நீர்ப்பாசன பிரதியமைச்சர் நிரூபமா ராஜபக்ஷ, அமைச்சின் செயலாளர் குணசேகர, நீர்ப்பாசன சபையின் தலைவர் கருணாசேன கெட்டியாராச்சி, வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் பந்துல கரிச்சந்திர உட்பட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

(அ-2-266)

மெத்தா நிறுவனத்தினால் அவயவங்கள் பொருத்தப்படும்

(மல்லாவி)

பிரித்தானிய அரசாங்கத்தின் நிதி அனுசரணையுடன் இலங்கையில் இயங்கும் மெத்தா தேசிய அவயவங்கள் பொருத்தும் பிரிவானது மன்னார் மாவட்ட வைத்திய சாலையில் இயங்கும் தனது செயலகம் ஊடாக செயற்கை உறுப்புக்கள் பொருத்துதல் மற்றும் அளவுகள் எடுத்தல், திருத்தங்கள் செய்தல் என்பவற்றுக்கான நடமாடும் சேவையினை எதிர்வரும் 9 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 5 மணி வரை மு/மாங்குளம் மகாவித்தியாலயத்தில் நடத்தவுள்ளதாக மெத்தா நிறுவனத்தின் தொடர்பு அதிகாரி சின்கிளேயர் பீற்றர் தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் கிளிநொச்சி கருணை இல்லத்தில் நடைபெற்ற நடமாடும் சேவையின் போது கை, கால் அளவு எடுக்கப்பட்டவர்களுக்கும் ஏற்கனவே செயற்கை கை, கால் பொருத்தியவர்களுக்கான திருத்த வேலைகளும் நடைபெறவுள்ளன.

அத்தோடு பாடசாலை மாணவர்களுக்கான செயற்கை கை, கால் அவயவங்கள் என்பன பொருத்தப்படவுள்ளதுடன் புதியவர்களுக்கான செயற்கை கை, கால் பொருத்துவதற்கான பதிவுகளும் இடம்பெறவுள்ளன.

எனவே, முற்றிலும் இலவசமாக நடைபெறும் இச் சேவையினை பாதிக்கப்பட்ட மக்கள் அனைவரும் பயன்படுத்தி பயனபெற வேண்டும் என கேட்டுக் கொள்ளப்பட்டது. (அ-3-15)

இந்தியாவுடனான வர்த்தக உறவில் பாதிப்புக்கள் எதுவும் கிடையாது

அமைச்சர் அபே குணவர்த்தன தெரிவிப்பு

(கொழும்பு)

இந்திய பொருட்களை ஏற்றுமதி மற்றும் இறக்குமதி நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும். அதில் எவ்வித தடைகளும் இல்லையென அமைச்சர் ரோஹித அபே குணவர்த்தன அறிவித்துள்ளார்.

தமிழ்நாட்டில் இருந்து கப்பல் மூலம் இறக்குமதி செய்யப்படும் பொருட்களையும் தமிழ் நாட்டுக்கு ஏற்றுமதி செய்யும் பொருட்களையும் ஏற்றி இறக்குவதை நிறுத்தப் போவதாக துறைமுக ஊழியர் சங்கமொன்று ஏற்கனவே அறிவித்திருந்தது.

மேலும் நேற்று முன்தினம் கொழும்பு துறைமுக பிரதான வாயிலுக்கருகில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றும் நடைபெற்றிருந்தது.

இச்சம்பவம் தொடர்பாக கருத்துத் தெரிவித்த போதே, கொழும்புத் துறைமுகத்தில் இந்தியப் பொருட்களை ஏற்றியிறக்கும் நடவடிக்கைகள் வழமைபோல் தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என துறைமுகங்கள் நெடுஞ்சாலைகள் கருத்திட்ட அமைச்சர் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது, இந்திய பொருட்களை ஏற்றி இறக்காதிருக்க துறைமுக அதிகார சபை எந்தவித முடிவும் எடுக்கவில்லை என்பதை பொறுப்புடன் அறிவிக்கின்றேன். கொழும்புத் துறைமுகத்தில் இந்திய பொருட்களை ஏற்றி இறக்கும் நடவடிக்கைகள் வழமை போல் தொடர்ந்து முன்னெடுக்கப்படுமென அமைச்சர் தெரிவித்தார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹெரோயின் வைத்திருந்த நபருக்கு மரணதண்டனை

(கொழும்பு)

2.4 கிராம் எடையுடைய ஹெரோயின் போதைப்பொருளை வைத்திருந்த நபருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு உயர் நீதிமன்ற நீதவான் பத்மன் சூரசேனவினால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு-பொரளையைச் சேர்ந்த நபருக்கு இவ்வாறு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

குறித்த நபர் கைது செய்யப்படும் போது 2.4 கிராம் ஹெரோயின் போதைப்பொருள் அவரிடம் காணப்பட்டதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

போதைப்பொருள் வைத்திருந்ததாக நான்கு பேர் சாட்சியமளித்துள்ளனர். தனிப்பட்ட உளவாளி ஒருவரின் தகவல்களின் அடிப்படையில் கடந்த 2004 ஆம் ஆண்டு சந்தேக நபரை பொலிசார் கைது செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

மீள்குடியேற்றப்பட்ட மக்கள் எரிபொருளைப் பெறுவதில் சிரமம்

(பூந்தோட்டம்)

மீள்குடியேற்றம் செய்யப்பட்ட பிரதேச மக்கள் நியாயமான முறையில் எரிபொருளை பெறுவதில் சிரமத்தை எதிர்கொள்வதாக விசனம் தெரிவிக்கின்றனர். இது தொடர்பில் அவர்கள் கருத்து தெரிவிக்கையில்,

விவசாய தேவைகள் உட்பட ஏனைய எரிபொருள் தேவைகளுக்காக நிர்ணயிக்கப்பட்ட விலையை விட அதிகளவில் பணம் செலுத்தி எரிபொருளை பெற வேண்டியுள்ளது. இதற்கு காரணம் இப்பகுதியில் உள்ள எரிபொருள் நிலையங்கள் இயங்காமையே ஆகும்.

நெடுங்கேணி, ஒட்டுசுட்டான், தண்ணீரூற்று, செம்மலை, புதுக்குடியிருப்பு, பளை ஆகிய பிரதேசங்களில் இவ் எரிபொருள் நிலையங்கள் புதிதாக அமைக்கப்பட்டபோதிலும் இவை நீண்டகாலமாக இயங்காமல் உள்ளது. இதனால் தனியார் வர்த்தக நிலையங்களில் கூடுதலான விலையில் விற்பனை செய்யப்படும் எரிபொருளை பெற்று வருகின்றோம்.

இந்நிலையில் பொதுமக்களாக சேர்ந்து எரிபொருள் நிலையத்தின் உரிமையாளர்களிடம் நிலையம் திறக்கப்படாமை தொடர்பில் கேட்டபோது அமைச்சர் வருகை தந்து திறக்க வேண்டியுள்ளமையினால் தாம் வர்த்தக நடவடிக்கையில் ஈடுப முடியாதுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

இவ்வாறான நிலையில் பல கிலோமீற்றர்கள் சென்று எரிபொருளை பெறவேண்டிய நிலை காணப்படுகின்றது. இல்லையேல் அதிகளவான பணத்தில் எரிபொருளை பெற வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் இம்மக்கள் தமது விசனத்தை தெரிவிக்கின்றனர். (அ-2-266)

பொது வித்தியாசம் ஆவணப்படம் வெளியீடு

(கொழும்பு)

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இடம்பெற்ற மோதல்கள் தொடர்பான பொது வான ஆய்வுகளை முன்னெடுக்கும் நோக்கில் தயாரிக்கப்பட்ட பொது வித்தியாசம் எனும் ஆவணத்திரைப்படம் நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்டுள்ளது.

கொழும்பு லக்ஸ்மன் கதிர்காமர் சர்வதேச மத்திய நிலையத்தில் இடம்பெற்ற குறித்த நிகழ்விற்கு பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ச தலைமை தாங்கினார்.

மோதல்களுக்கு காரணமாக அமைந்த விடயங்கள் மற்றும் அதற்கான தீர்வுகள் இந்த ஆவணப்படத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இது பற்றிய காரணிகள் கலந்துரையாடல்கள் ஊடாக ஆராயப்படும் அதேவேளை, இலங்கையின் இனங்களுக்கு இடையிலான பிரச்சினைகளுக்கு சமநிலையான ஆய்வுகள் இதன்போது இடம்பெறவுள்ளது. (அ-2)

இலங்கைக்கு எதிராக நடவடிக்கை எடுக்கக்கோரி எமக்கு அழுத்தம்

மனம் திறந்தார் சல்மன் குர்ஷித்

இலங்கை விடயத்தில் தங்களை பணயம் வைத்திருப்பதாக் இந்தியா தெரிவித்துள்ளது. இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சல்மன் குர்ஷித் தெரிவித்துள்ளார்.

ஐ.ஏ.என்.எஸ். பத்திரிகைக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு எதிராக பல்வேறு நடவடிக்கைகளை எடுக்கக் கோரி இந்தியாவின் பல தரப்பிலும் இருந்தும் இந்திய மத்திய அரசாங்கத்துக்கு அழுத்தம் பிரயோகிக்கப்படுகிறது.

இலங்கை தொடர்பிலான அமெரிக்காவின் பிரேரணைக்கு இந்தியா ஆதரவளித்திருந்தது.

எனினும் தமிழக அரசாங்கத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையை இந்திய அரசாங்கம் நிராகரித்திருந்தது.இந்த விடயத்தில் இந்தியா தம்மை பணயம் வைத்திருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே இலங்கை தொடர்பில் இந்தியா கொண்டுள்ள அக்கறையை இலங்கை புரிந்து கொள்ளும் என்று நம்புவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை இரத்து செய்க!

(கொழும்பு)

இலங்கையில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இரத்து செய்ய வேண்டுமென கண்டி அஸ்கிரி மல்வத்து பீடாதிபதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பிரதமர் ஆட்சி முறைமையே இந்த நாட்டுக்கு மிகவும் பொருத்தமானது. நிறைவேற்று அதிகார முறைமையை இரத்து செய்யுமாறும் விருப்பு வாக்கு தேர்தல் முறைமையை இரத்து செய்யுமாறும் விடுக்கப்படும் கோரிக்கையை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளத் தவறியுள்ளது.

நாம் கூறுகின்ற ஆலோசனைகளை செவிமடுப்பதுடன் விட்டுவிடுகின்றனர்.

தகுதியானவர்களுக்கு உரிய பதவிகள் வழங்கப்படுவதில்லை.

தூதுவர், உயர்ஸ்தானிகர் பதவிகளுக்கு தகுதியானவர்கள் அனுப்பி வைக்கப்படுவதில்லை.

அதிகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக வாக்குறுதிகள் அளிக்கப்படும் போதும், அதிகாரத்தைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் அந்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படுவதில்லை என மாநாயக்கதேரர்கள் தெரிவித்துள்ளனர். (அ-2)

கைக்குண்டு வெடித்து 4 பேர் காயம்

(கொழும்பு)

பொலநறுவையில் கைக்குண்டு வெடித்ததில் நான்கு பேர் காயமடைந்துள்ளனர்.

பொலநறுவை கதுருவெல பிரதேசத்தில் வீடொன்றின் முற்றத்தில் இந்தக் கைக்குண்டு வெடித்துள்ளது.

சம்பவத்தில் இரண்டு பெண்களும் இரண்டு ஆண்களும் காயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்கள் பொலநறுவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பொலநறுவை பொலிஸார் சம்பவம் குறித்து விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.(அ-2)

முஸ்லிம்களுக்கு எதிரான பதற்றம் தொடர்ந்தால் இலங்கை எரியும்

அமைச்சர் ரிசாத் கர்ச்சிப்பு

(கொழும்பு)

நாட்டில் முஸ்லிம் சமூகத்திற்கு எதிராக தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்ற பதற்றம் தொடர்ந்து நீடித்தால் இன்னும் 30, 40 வருட காலங்களில் இலங்கை தீப்பிடித்து எரியும் என அமைச்சர் ரிசாத் பதியூதீன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைபெற்ற மீள்குடியேற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ், முஸ்லிம் மக்களுக்கு இடையில் இருக்கும் தொடர்புகள் மற்றும் உரிமைகள் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் எந்த சந்தர்ப்பத்திலும் பேச்சுக்களை நடத்த தயாராகவே உள்ளோம்.

அத்துடன் நாட்டில் ஒரே மொழியை பேசும் தமிழ், முஸ்லிம் மக்களுக்கு இடையிலான உறவுகள் கடந்த 30 வருடகால போர் காரணமாக அழிந்து போயின. இதனை மீண்டும் கட்டியெழுப்பும் நிலைமைக்கு நாம் வந்துள்ளோம்.

எனவே கிழக்கு மாகாணத்தில் தமிழ், முஸ்லிம் மக்கள் ஐக்கியமாக வாழ்வது போன்று வடக்கிலும் வாழ முடியும்.

தற்போதுள்ள நிலைமையில் வடக்கு, கிழக்கில் வாழும் தமிழ், முஸ்லிம் மக்கள் அமைதியான முறையில் வாழ வேண்டும்.

இதற்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் ஒத்துழைப்பும் அவசியம் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களுக்கு இடையிலுள்ள பிரச்சினைகளை தீர்ப்பதற்கு கூட்டமைப்பும் தயாராக இருப்பதாக தமிழ்தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (அ-

நற்பெயரை பாதுக்காக்க வேண்டிய பொறுப்பு படையினருக்கும் உண்டு

இராணுவத்தளபதி தெரிவிப்பு

இராணுவம் மீதான நற்பெயரை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு இராணுவத்துக்கே இருப்பதாக இலங்கை இராணுத்தளபதி லெப்டினன் ஜெனரல் ஜெகத் ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

வெற்றிலைக்கேணியில் உள்ள 55 ஆவது படைப்பிரிவின் தலைமையகத்தில் இடம் பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

நாட்டின் நற்பெயரை பாதுகாப்பது மற்றும் அபிவிருத்தி தொடர்பில் இராணுவத்தினர் கடமையாற்றுவது அவசியமாகும்.

அதேவேளை இராணுவத்தின் நற்பெயர் பாதிக்கப்படாத வகையிலும் இராணுவத்தினர் செயற்பட வேண்டுமென்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை யுத்தம் நிறைவடைந்துள்ள நிலையில் இராணுவத்தினரின் மனநிலைகளில் மாற்றங்களை ஏற்படுத்தும் செயற்பாடுகளையும் முன்னெடுக்கவிருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான பாலியல் வன்முறைகளைக் கட்டுப்படுத்தக் கோரி யாழ்.நகரில் அண்மையில் கண்டனப் பேரணி இடம்பெற்றதையும் யாழ். அரச அதிபரிடம் மகஜர் கையளிக்கப்படுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-எஸ்.ஆர். கரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாமன்னன் சங்கிலியன்

06

கனகசூரிய சிங்கையாரியர் தனது புத்திரர்களுடனும் சேனை களுடனும் யாழ்ப்பாணம் மீண்டு, அங்கு ஆண்ட விஜயபாகுவை வெற்றி கொண்டார். நல்லூர் இராச வீதிகளையும் முதலில் திருத்தி அமைத்தான். படைகள் தங்குவதற் கான குதிரைக் கொட்டகைகள், யானைப் பந்திகள் என்பனவற்றை அமைப்பித் தான். கைவினையருக்கான தெருக்கள், வதிவிடங்கள் என்பவற்றை தனி அக்கறையுடன் அமைத்துக் கொடுத்தான். இராச்சியத்தில் தட்டார்த் தெரு, தச்சர் தெரு, சாண்டார் தெரு, சேணியர் தெரு, அந்தணர் தெரு, முதலிய தெருக்களை தொழில் அடிப்படையில் அமைத்துக் கொடுத்தான்... கனகசூரிய சிங்கையாரியனுக்குப்பின் அவர் மூத்த மகனான பரராச சேகரன் முடிதரித்தார். பரராச சேகரன் தன் பெயருடன் சிங்கை என்பதைத் தலைப் பொயருடன் சேர்த்துக் கொண் டார். இவர் தன் தந்தையிலும் சிறந்தவராய் நகரத்தின் வட திசையில் சட்டநாதர் திருத் தலத்தையும், கிழக்குத் திசையில் வெயிலுகந்த பிள்ளையார் கோவிலையும் தென் திசையில் கைலாசநாதர் கோவிலையும் மேற்குத் திசையில் வீரமாகாளியம்மன் கோவிலை யும் அமைப்பித்தார். அரண் மனைக்கு அருகில் யமுனா ஏரி அமைத்தவர் சிங்கை பரராச சேகரரேயாவார்.

-செங்கை ஆழியான்-

முதலாவது ஆரியச்சக்கரவர்த்தி காலத்தில் யாழ்ப்பாண இராச்சியத்துக்கு தென் இந்தியாவிலிருந்து பதினெண் வேளாண் குடிகளும் ஏனைய குடிகளும் வந்தனர். யாழ்ப்பாண இராசதானி வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி எனும் நான்கு பெரும் பகுதிகளையும் குடா நாட்டின் தீவுகளையும் பெரு



நிலப்பரப்பில் வன்னிப் பிரிவுகளையும் மேற்கே கற்பிட்டியையும் கிழக்கே மட்டக்களப்பையும் கொண்டுள்ளது. ஆட்சித் தேவைகளுக்காக பல உபபிரிவுகளாக்கப்பட்டு அவற்றிற்குப் பிரதானிகள் நிர்வாகிகளாக இருந்தனர். இவர்கள் அதிகாரிகள் எனப்பட்டனர். அதிகாரிகளுக்குத் துணையாக முதலியார்கள், பண்டாரரப் பிள்ளைகள், கண் காணிகள், உடையார்கள், தலையாரிகள், அடம்பனார், பட்டங்கட்டி என்போர் இருந்தனர். இவர்கள் பலவகைக் கடமைகளைச் செய்ததுடன் வரி வசூலிப்பதிலும் அதிகாரி களுக்கு உதவி செய்தனர்.

யாழ்ப்பாண இராசதானி வடபற்று, தென்பற்று, கீழ்ப்பற்று, மேற்பற்று எனப்பிரிக்கப்பட்டதோடு பற்றுக்கள் சிறு பிரிவுகளாகவும் பிரிக்கப் பட்டு அவை வேளாண் தலைவர்களிடம் நிர்வாகத்திற்காக விடப்பட்டன. அவர்கள் அதிகாரிகளாக விளங்கினர். பொன் பற்றியூரிலிருந்து வந்த பாண்டி மழவனும் அவனது மைத்துனனுமான செண்பக மழவனும் திருநெல்வேலியில் குடியமர்ந்து அதிகாரிகளாயினர். நரசிங்க தேவன் மயிலிட்டியின் அதிபதியானான். சந்திர சேகரமாப்பாணன் தெல்லிப் பளையில் அதிகாரியாக நியமிக்கப்பட்டான். வேராயிய வன் இணுவிலுக்கும் நீலகண்டன் தென்மராட்சி கிழக்கிற் கும் நியமிக்கப்பட்டனர். அவ் வகையில்தான் பருத்தித்துறை அதிகாரி வீரமாணிக்கனின் சிங்கள மனையாட்டிக்குப் பிறந்த ஐந்து புதல்வர்களில் மூத்தவன் காக்கைவன்னியன். ஊர்காவற்றுறையின் அதிகாரியானான். மன்னார்த்தீவின் நிர்வாகப் பொறுப்பினை இளஞ் சிங்கன் என்பவன் கவனித்தான்.

யாழ்ப்பாண இராசதானிக்கு பதினெட்டு வேளாண் குடிகளும் ஏனைய குடிமைகளும் வந்து குடியேறிய மாதிரி வன்னியர்களும் குடியேறினர்.

யமுனா ஏரியும் அரசகேசரி மண்டபமும்

நமது கதை நிகழ்ந்த காலத்தில் வன்னியர்கள் யாழ்ப்பாண அரசனுக்கு கீழ்ப்படிந்து திறை செலுத்தினர்."

அவர்கள், அமைதியாக யமுனா ஏரிக்கரையில் அமர்ந்திருந்தனர். இரவு கழிந்து கொண்டிருந்தது. சிங்கபாகுவை இளவயதில் இழந்த துயரம் பட்டத் துராணியைப்

பெரிதும் பாதித்திருப்பதை மன்னர் அறியாதவரல்லர். தூணைப் பற்றியபடி அவர் எழுந்திருந்தார். மற்ற இருவரும் கூடவே எழுந்தனர். அந்த நேரம் பதற்றத்துடன் ஒரு காவ லாளி ஓடி வந்தான். அவன் உடல் பதறியது.

"அரசே..."

"என்ன?"

"பட்டத்து இளவரசர்...

"வீரபண்டாரத்துக்கு என்ன?" இராஜலக்குமிதேவி பதற்றத்துடன் கேட்டார்.

"எப்படிச் சொல்வேன் தாயே..."

காவலன் தொடர்ந்து கூறியதைக் கேட்ட அரசியின் உடல் வெடவெட வென நடுங்கியது.

"ஐயோ பண்டாரம்... மகனே..."

மன்னரும் வள்ளிம்யமை தேவியும் சுயநினைவுக்கு திரும்புமுன் இராஜலக்குமி உடல் தளர்ந்து, நிலைகுலைந்து, யமுனா ஏரிப்படிக்கட்டுகளில் தலை பயங்கரமாக அடிபட உருண்டு நீரினுள் சரிந்தார்.

அரண்மனைக்குத் திரும்பிய சங்கிலி தனது தனையனார் வீரபண்டாரத்தின், கட்டாரிகுத்திய உடலோடு பட்டத்து ராணியின் உயிரற்ற சடலத்தையும் கண்டான்.

(தொடரும்)

மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றங்கள், இனப்படுகொலை-ஆய்வு

கேள்வி: இனப்படுகொலை என்கின்ற சட்ட எண்ணக்கரு தொடர்பாக நீங்கள் விமர்சனம் செய்வது சரியானதாக இருக்குமா?

பதில்: இந்த எண்ணக்கருக்கள் தொடர்பாக நான் ஒருபோதும் எனது விமர்சனங்களை முன்வைக்க முயலவில்லை. மாறாக எனது கவனத்தை அதிகம் ஈர்த்த இவ்விரு எண்ணக்கருக்கள் தொடர்பாக எனது மனதில் எவ்விதமான சிந்தனைகளும் ஆராய்ச்சிகளும் ஏற்பட்டுள்ளதோ அவற்றை வெளிப்படுத்துவதற்கான முயற்சியிலேயே நான் ஈடுபடுகிறேன்.

அடிப்படையில், மக்கள் தனித்தனியாக கொல்லப்படாது ஒட்டுமொத்த ஒரு குழுவாக கொல்லப்படுவதே இனப்படுகொலை என லெம்கின் கண்டறிந்தார். இந்த மக்கள் குறத்த ஒரு குழுவின் உறுப்பினர் என்ற வகையலேயே அவர்கள் கொல்லப்படுகினறனர். அல்லது தீங்கிழைக்கப்படுகின்றனர் என்பது லெம்கின்சியன் கருத்தாகக் காணப்பட்டது. அதாவது இந்த மக்கள் ஒரே தேசிய இனத்தைச் சேர்ந்த அல்லது ஒரே இனக்குழுமத்தைச் சேர்ந்த அல்லது ஒரே மதத்தைச் சேர்ந்தவர்களாக இருக்க முடியும்.

இது ஒரு உண்மையான நிலை என்பதால் இந்த ஜதார்த்த நிலையை சட்டம் பிரதிபலித்துக்காட்ட வேண்டும் என லெம்கின் வலியுறுத்தியிருந்தார். ஆனால், இந்த மக்கள் தனி மனித உயிரினங்களாக இருப்பதால் இவர்கள் தனித்தனியாகப் பாது காக்கப்படவேண்டுமே ஒழிய ஒட்டுமொத்த ஒரு குழுவின் உறுப்பினர்கள் என்ற வகையில் இவர்கள் பாதிக்கபடக்கூடாது என Lauterpacht வலியுறுத்துகிறார். இந்நிலையில் இவ்விரு சட்ட வல்லுனர்களுக்கும் இடையில் மனிதாபிமானத் திற்கு எதிரான குற்றம் மற்றும் இனப்படுகொலை இருவேறுபட்ட எண்ணக்கருக்கள் தொடர்பில் வாக்குவாதம் ஏற்பட்டது. இவர்கள் இருவரும் மக்கள் படுகொலை செய்யப்படுவது நிறுத்தப்படவேண்டும் என்கிற பொதுவான நோக்கத்தை ஏற்றுக் கொள்ளாது விடவில்லை. ஆனால், இவர்கள் இருவரும் மக்கள் படுகொலை செய்யப்படுவதைத் தடுப்பதற்கான சிறந்த வழியாக இது தான் இருக்கும் என தமது எண்ணக்கருவை மட்டும் வலியுறுத்திக் கூற முயற்சித்தனர்.

இவ்வாறானதொரு முரண் பாட்டின் மத்தியில் இவ்விரு சட்ட வல்லுனர்களின் இருவேறுபட்ட எண்ணக்கருக்களையும் ஏற்றுக்கொள்ள வைப்பதற்கான முயற்சியில் நான் ஈடுபட்டுவருகிறேன். இவ்விரு எண்ணக்கருக்களும் 1945, 1946 காலப்பகுதியில் வெளிப்படுத்தப்பட்டது. ஆனால், 1998-ல் உலக அரசாங்கங்கள் அனைத்தும் ஒன்று சேர்ந்து மனிதாபமானத்திற்கு எதிரான குற்றம் மற்றும் இனப்படுகொலை ஆகிய இருஎண்ணக்கருக்களையும் அனைத்துலக குற்றவியல் நீதிமன்றின் சட்டத்தில் இணைத்தன. இவ்விரு எண்ணக்கருக்களும் சட்டத்திற்கு மிக முக்கியமானவை என இந்த உலகம் ஏற்றுக்கொண்டுள்ளது.

கேள்வி: மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றம் என்கின்ற சட்ட எண்ணக்கருவானது குற்ற மிழைத்த தனியொருவருக்குதண்டனை அளிப்பதையும், இனப்படுகொலை என்பது அதனைப் புரிந்த முழுக் குழுவிற்கும் தண்டனை அளிப்பது என வும் கருதமுடியுமா?

பதில்: இது உணமையில் சரியானது என நான் கருதுகிறேன். இனப்படுகொலை ஒன்றைப் புரிகின்ற ஒருவர் ஒரு குழுவை அழிப்பதை நோக்கமாகக் கொண்டே இதனைச் செய்கிறார். ஆகவே, இவ்வாறான இனப்படுகொலையைப் புரிகின்ற ஒருவரின் குழுவானது பாதிக்கப்பட்ட குழுவை அழிக்க முயல்கிறது. இதனால், இனப்படுகொலையைப் புரிய நினைப்போர் தண்டிக்கபடவேண்டும். இதுவே தொடர்ந்தும் இது இடம்பெறாதிருக்க வழிவகுக்கும்.

மக்கள் தனியொரு மனிதராக இருப்பதால் கொல்லப்படவில்லை. இவர்கள் அவர்களின் குழுவின் அடிப்படையிலேயே கொன்றழிக்கப்படுகின்றனர். இதனால்,லெம்கின் கூறிய இனப்படுகொலை பற்றிய கருத்து சரியானதாக தென்படுகிறது.

கேள்வி: உங்களது அபிப்பிராயத்தின்படி, இது தொடர்பில் ஏதாவது செய்யப்படவேண்டியுள்ளதா? இனப்படுகொலை என்பது சட்ட எண்ணக்கருவிலிருந்து நீக்கப்பட வேண்டுமா?

பதில்: இது மிகப் பெரிய கேள்வி என நான் கருதுகிறேன். இவ்வாறான ஒரு கடினமான சூழலை சமன் செய்வதற்கு சட்டம் எவ்வாறான சிறந்த உதவியை வழங்க முடியும் என்பதைக் கண்டறிதற்கான பணியில் நான் ஈடுபட்டுள்ளேன். பயங்கரமான சம்பவங்கள் இடம்பெறுவதை சட்டத்தால் முற்றாக தடுக்க முடியாது. ஆனால், கடந்த காலத்தில் என்ன நிகழந்தன என்பதை சட்டம் விபரிக்கும் இது பயன்மிக்கது. இவ்வாறான பயங்கரச் சம்பவங்கள் எதிர்காலத்தில் ஏற்படுவதை சட்டத்

தால் தடுக்க முடியும். இவற்றை அடையாளம் காண்பதென்பது மிகவும்சிக்கலானவினாவாகும். இவற்றை ஆராயும்போது, 1940களின் நடுப்பகுதியில் அமெரிக்காவில் இனப்படுகொலை என்கின்ற எண்ணக்கரு மிகப் பலமாக எதிர்க்கப்பட்டது என்ற உணமையைக் கண்டறிய முடிந்தது. குறிப்பாக அமெரிக்காவின் தென்பகுதி சேனற்றர் இந்த எண்ணக்கருவை மிக வலுவாக எதிர்த்திருந்தனர். இவர்கள் லெம்கினின் கருத்தோடு ஒத்துப்போகவில்லை. ஏனெனில் அந்தக் காலப்பகுதியில் பாரபட்சப்படுத்தல் மிகப்பெரிய பிரச்சினையாக உருவெடுத்திருந்ததால் இதனைக் கையாள்வதற்கு லெம்கினின் புதிய சட்ட எண்ணக்கரு பயன்படுத்தப்படலாம் என தென்பகுதி அமெரிக்க சேனற்றர் கருதினர். குறிப்பாக அமெரிக்காவைச் சேர்ந்த வெள்ளையினத்தவர்களுக்கும் கறுப்பு இனத்தவர்களுக்கும் இடையில் அப்போது ஏற்பட்டிருந்த குழப்பநிலையை இந்த எண்ணக்கருவானது மேலும் அதிகரிக்கும் என அமெரிக்கர்கள் அச்சப்பட்டனர். நீக்ரோக்கள் என அழைக்கப்பட்ட கறுப்பினத்து அமெரிக்கர்கள் தம்மீதான பரபட்ச சட்டங்களை எதிர்ப் பதற்கு இந்த எண்ணக் கருவைப் பயன்படுத்தலாம் என வெள்ளை யினத்தவர்கள் அச்சமுற்றனர். இவ்வாறான விவாதங்களை மேற் கொள்ளும்போது உலகிலுள்ள எந்தவொரு சமூகமும் இவ்விரு சட்ட எண்ணக்கருக்களின் தாக்கத் திலிருந்து தப்பிக்க முடியாது என நான் கருதுகிறேன். இது உண்மையில் எங்கள் எல்லோரது உணர்வுகளையும் தொட்டுள்ளதுடன், மனித உயிரினத்தின் நிலைப்பாட்டை கண்டறிவதற்கும் உதவுகின்றது.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்குத் தேர்தல்... அக்கினிப் பரீட்சையா?

வடக்கு மாகாணசபைக்கான தேர்தல் ஓர் அக்கினிப் பரீட்சையாகவே அமையப்போகிறது என்பதை, இப்போதே உணரக்கூடியளவுக்கு சம்பவங்கள் நடந்தேறி வருகின்றன.

போர் முடிவுக்கு வந்து நான்கு ஆண்டுகள் முடிந்துபோயுள்ள நிலையில் வடக்கு மாகாணசபைக்கான தேர்தலை நடத்துவதில் காணப்படும் இழுபறி நிலை இதனை ஒரு சர்வதேச விவகாரமாக்கியுள்ளது.

அமெரிக்கா போன்ற மேற்கு நாடுகளும், இந்தியா போன்ற நாடுகளும் வடக்கு மாகாணசபைக்கு ஜனநாயக ரீதியான தேர்தலை நடத்தி, தமிழ் மக்களுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்க வேண்டுமென்பதில் உறுதியாக உள்ளன.

இந்த நிலையில், வரும் செப்ரெம்பர் மாதத்திற்கு முன்னர் வடக்கு மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படும் என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச சர்வதேச சமூகத்துக்கு ஏற்கனவே வாக்குறுதி கொடுத்துள்ளார். இந்தக் கால அவகாசம் முடிவடைய இன்னமும் 5 மாதங்களே உள்ளன.

தேர்தல் திணைக்களம், வடக்கில் மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்காக வாக்காளர் பட்டியலை தயார் செய்து வைத்துள்ளது. எனினும், வடக்கு மாகாணசபையை உருவாக்கும் வர்த்தமானிப் பிரகடனத்தை இன்னமும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச வெளியிடாததால், தம்மால் தேர்தலுக்கான முன்னேற்பாடுகளை ஆரம்பிக்க முடியாதுள்ளதாக தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்திருந்தார்.

செப்ரெம்பரில் தேர்தலை நடத்துவதாயின், அதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னதாகவே ஜனாதிபதி இந்த வர்த்தமானிப் பிரகடனத்தை வெளியிட வேண்டும் என்றும் அவர் கூறியிருந்தார். வடக்கில் தேர்தலை நடத்துவதில் அரசாங்கம் அர்ப்பணிப்புடன் உள்ளது என்பதை வெளிப்படுத்துவதற்கான எந்த அறிகுறிகளையும் இதுவரை காணமுடியவில்லை. ஆனால், வடக்கில் நியாயமான சூலில் தேர்தலை நடத்துவதைத் தடுப்பதற்கான முயற்சிகள் மட்டும் தீவிரமாக இடம்பெறுவதை அவதானிக்க முடிகிறது.

ஒன்று வடக்கிற்குள் இடம் பெறும் சம்பவங்கள். இரண்டாவது வடக்கிற்கு வெளியே மேற்கொள்ளப்படும் முயற்சிகள் என்று இதனை வேறுபடுத்தலாம்.

கடந்தவாரம் கிளிநொச்சியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அலுவலகத்தில், தேர்தல் குறித்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆலோசனை நடத்திக் கொண்டிருந்தபோது, நடத்தப்பட்ட தாக்குதல், சுதந்திரமான அரசியல் செயற்பாடுகள் வடக்கில் எந்தளவுக்கு சாத்தியம் என்ற கேள்வியை எழுப்பியுள்ளது.

வடக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினது அரசியல் செயற்பாடுகளை முடக்கும் நோக்கில் நடத்தப்பட்ட முதலாவது தாக்குதல் இதுதான் என்றில்லை. இதற்கு முன்னரும் பல சம்பவங்கள் இடம்பெற்றிருந்தன. ஆனால், இதபோன்ற சம்பவங்களைத் தடுக்கின்ற எந்த முயற்சிகளையும் அரசாங்கம் மேற்கொள்ளவில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீது ஏவிவிடப்படும் வன்முறைகளை சாதாரணமான அரசியல் எதிர்ப்புப் போராட்டமாக காட்டிக்கொள்ளலாம் என்று அரசாங்கம் கருதுகிறது போலும். குறிப்பாக கட்சி மோதல்களாக அதனை வெளிப்படுத்த அரசாங்கம் முற்படலாம்.

ஆனால், வடக்கு மாகாணசபைக்குத் தேர்தல் நடத்தப்படவுள்ள நிலையில், இடம்பெற்று வரும் இத்தகைய தாக்குதல்கள், தேர்தலை சுதந்திரமாக நடத்த முடியுமா- தேர்தல் சுதந்திரமாக நடத்தப்படுமா என்ற கேள்விகளையே எழுப்ப வைத்துள்ளன.

இந்தத் தேர்தலை ஏனைய எட்டு மாகாணசபைகளுக்கான தேர்தலைப் போன்று கருதிவிட முடியாது.

2008 ஆம் ஆண்டு கிழக்கை விடுவித்துவிட்டதாக அறிவித்த அரசாங்கம், அவசர அவசரமாக கிழக்கு மாகாணசபைக்கு தேர்தலை நடத்தியபோது இருந்த எதிர்ப்பார்ப்பு-பரபரப்பை விடவும் அதிகமான எதிர்பார்ப்பும் முக்கியத்துவமும் இதற்கு உள்ளது.

போர் முடிந்தபின்னர் வடக்கில் ஒரு நிர்வாகத்தை முதல்முறையாக அமைப்பதற்கான தேர்தல் இது. இதனை உலகமே உன்னிப்பாக கண்காணிக்கிறது. கண்காணிக்கும். எனவே, முறையாகத் தேர்தலை நடத்தாது போனால், அரசாங்கத்தை அது பாரிய நெருக்கடிக்குள் தள்ளிவிடும்.

சுதந்தரமான தேர்தலை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு போதிய வாய்ப்புகள் அரசாங்கத்துக்கு இருந்தாலும், அது தவறவிடப்படுவது, வெளியுலகின் நம்பிக்கையீனத்தையே சம்பாதிக்க வைக்கும். இதுமட்டுமன்றி வடக்கில் படைகுறைப்பு, கருத்துச் சுதந்திரத்தை உறுதிப்படுத்தல் போன்ற வற்றிலும் உலகம் கவனமாக இருக்கிறது.

போரைக் காரணம் காட்டி, ஜனநாயக ரீதியான மக்களின் உரிமைகள் மறுக்கப்பட்டதும், கருத்துச் சுதந்திரம் கட்டுப்படுத்தப்பட்டதும் தான் இதுவரையான வரலாறு. இந்த நிலைமையில் இருந்து வடக்கு மாகாணம் இன்னமும் முற்றுமுழுதாக விடுபடவில்லை. ஊடகங்கள் மீது தொடரும் தாக்குதல்களை இதற்கான ஆதாரங்களாகக் குறிப்பிடலாம். போரைக் காரணம் காட்டி அரசாங்கத்தினால் இனிமேல், வடக்கில் இயல்பற்ற சூழல் நிலவுவதாக நியாயப்படுத்த முடியாது.

அவ்வாறு செய்ய முற்பட்டால் அது வடக்கில் நிரந்தரமான, நிலையான அமைதியை அரசாங்கம் ஏற்படுத்திவிட்டது என்ற பிரசாரம் பற்றி சந்தேகங்களை எழுப்ப வைக்கும். இப்போது கூடத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போன்ற எதிரணி அரசியல் சக்திகளுக்கு வடக்கில் விடுக்கப்பட்டுள்ள அச்சுறுத்தல் அரசாங்கத்துக்கு ஒருபோதும் நற்பெயரை தேடித் தரப்போவதில்லை.

இவையெல்லாம், தேர்தலை நடத்துவதற்கு கொடுக்கப்பட்ட காலக்கெடு நெருங்க நெருங்க வடக்கில் தேர்தல் ஒன்றை நடத்தும் சூழலில் இருந்து அரசாங்கம் விலகிச் செல்கிறதா என்ற கேள்வியை ஏற்படுத்தியுள்ளது.

இன்னொரு பக்கத்தில் வடக்கில் தேர்தலை நடத்தக் கூடாது என்று தெற்கிலுள்ள கடும் போக்காளர்கள் குரல் எழுப்ப ஆரம்பித்துள்ளதும் ஒரு நல்ல சகுனமாக இருக்கப் போவதில்லை.

வடக்கில் தேர்தலை நடத்துவது ஈழத்தை கொடுப்பதற்குச் சமம் என்று செய்யப்படுகின்ற பிரசாரங்களும், அதற்கு எதிரான போராட்டங்களை நடத்த மேற்கொள்ளப்படும் முயற்சிகளும், அரசாங்கத்தினால் ஊக்குவிக்கப்படலாம்.

ஏனென்றால், அரசாங்கம் இலங்கைத் தீவில் எந்தவொரு மாகாண சபையும் தனது கையை விட்டுப் போவதை விரும்பவில்லை. அதுவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வசம் செல்வது அதற்குச் சுத்தமாகவே பிடிக்கவில்லை.

இத்தகைய நிலையில், தெற்கில் இருந்து வடக்கு மாகாண சபைத் தேர்தலுக்கு எதிராக இனம்பும் குரல்களை அரசாங்கம் தாராளமாக ஊக்குவிக்க முற்படலாம். அது தேர்தலை இன்னமும் பின்தள்ளிப் போடுவதற்கு உகந்த காரணமாக அரசாங்கத்தினால் கருதப்படவும் கூடும்.

ஆனால், அத்தகையதொரு ஆபத்தான விளையாட்டில் அரசாங்கம் இறங்குமேயானால், அது வெளியுலகில் பெரிய எதிர்ப்பையும் கண்டனங்களையும் அரசாங்கத்திற்கு ஏற்படுத்தத்தவறாது. இப்போதுள்ள நிலையில் வடக்கில் தேர்தலை நியாயமாக நடத்துவது மட்டுமன்றி, அதற்கான புறச்சூழலை எற்படுத்திக் கொடுப்பதும் கூட, அரசாங்கத்துக்கு சிக்கலாகவே இருக்கும். தேர்தலுக்கு முன்னரே பெருக ஆரம்பித்துள்ள வன்முறைகள் நியாமான தேர்தல் குறித்த அச்சங்களை வடக்கிலுள்ள மக்கள் மத்தியில் ஏற்படுத்த ஆரம்பித்துவிட்டது.

ஒருவேளை நியாயமற்ற ஒரு தேர்தல் நடத்தப்படுமானால் அல்லது, அச்சம் நிறைந்த ஒரு சூழலில் தேர்தல் நடத்தப்பட்டு ஓர் ஆட்சி நிறுவப்படுமானால், அரசாங்கம் தனியே வெளியுலக ஆதரவை மட்டும் இழக்கப் போவதில்லை.

வடக்கிலுள்ள மக்களின் அமைதியான எதிர்காலம் பற்றிய நம்பிக்கைகளையும் அது சிதைத்துவிடும். அது இலங்கையினது நீடித்த அமைதிக்கு சவாலான விடயமாக மாறிவிடும் ஆபத்தும் உள்ளது.

2008 ஆம் ஆண்டு கிழக்கை விடுவித்து விட்டதாக அறிவித்த அரசாங்கம், அவசர அவசரமாக கிழக்கு மாகாணசபைக்கு தேர்தலை நடத்தியபோது இருந்த எதிர்ப்பார்ப்பு-பரபரப்பை விடவும் அதிகமான எதிர்பார்ப்பும் முக்கியத்துவமும் இதற்கு உள்ளது.

போர் முடிந்தபின்னர் வடக்கில் ஒரு நிர்வாகத்தை முதல் முறையாக அமைப்பதற்கான தேர்தல் இது. இதனை உலகமே உன்னிப்பாக கண்காணிக்கிறது. கண்காணிக்கும். எனவே, முறையாகத் தேர்தலை நடத்தாது போனால், அரசாங்கத்தை அது பாரிய நெருக்கடிக்குள் தள்ளிவிடும்.

கே. சஞ்சயன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நான்காவது திருடன்

ஒருநாட்டில் மூன்று பக்காத் திருடர்கள் இருந்தனர். அவர்கள் தினமும் ஏதாவது திருட்டுத்தனம் செய்து கொண்டேயிருந்தனர். ஆனாலும் யாராலும் அவர்களைப் பிடிக்க முடியவில்லை. அவர்களை எப்படியாவது பிடிப்பதென அந்நாட்டு அரசன் ஒரு திருடனின் வேடம் போட்டுக்கொண்டு இரவு வேளைகளில் நகரில் சுற்றலானான்.

இப்படியே பல இரவுகள் சுற்றி ஒருநாள் அம்மூன்று திருடர்கள் இருக்கும் இடத்தை கண்டு பிடித்து விட்டான். அங்கு அவன் சென்ற போது மூவரும் அன்று எங்கு திருடச் செல்வதென திட்டம் வகுத்துக் கொண்டனர். புதியவன் ஒருவனைக் கண்டதும் அம்மூவரும் யார் நீ? இங்கு ஏன் வந்தாய்? என்று கேட்டனர்.

அதற்கு அவன் நானும் ஒரு திருடனே. இந்த நாட்டில் நீங்கள் பெரிய திருடர்களெனக் கேள்விப் பட்டேன். உங்களுக்கு என்னுடைய சக்தியையும் காட்டலாமென வந்தேன் என்றான். அதற்கு மூவரும் எங்களைப்பற்றி தெரியுமா என்று கேட்க அவனும் பெயரைக் கேட்டிருக்கி றேனேயொழிய உங்கள் சக்தி, தராதரம் எல்லாம் எனக்குத் தெரியாது என்றான்.

உடனே முதலாவது திருடன் நான் எந்தப்பூட்டையும் அதிசுலபமாக திறந்துவிடு வேன் என்றான். இரண்டாவது திருடனோ நான் பூமியின் மீது காதைவைத்து அந்த இடத்தைத் தட்டி எங்கு பணம் இருக்கிறதென்று கண்டுபிடித்து விடுவேன் என்றான். மூன்றாவது திருடனோ நான் ஒரு தடவை பார்த்த மனிதனை அவன் எந்த மாறுவேடத்தில் இருந்தாலும் கண்டுபிடித்து விடுவேன் என்றான். கடைசியில் மூவரும் உன்னுடைய விசேட சக்தி என்ன என்று கேட்டனர்.

அதற்கு அரசன் நான் ஆள்காட்டி விரலை கீழே தாழ்த்தினால் எவனையும் எமலோகத்துக்கு அனுப்பி விடமுடியும். அதேவிரலை கீழிருந்து மேலே தூக்கினால் இறக்கப்போகிறவனுக்கு உயிர் கொடுக்க முடியும் என்றான். இதைக்கேட்டு மூன்று திருடர் களும் மகிழ்ச்சியடைந்தனர்.

இன்று எங்கே திருடப் போகிறீர்கள் என்று அவன் கேட்க மூவரும் எங்கு வேண்டுமானாலும் போகலாம் நீயே ஒரு இடத்தைச் சொல்

அம்புலிமாமா கதைகள்

என்று கூற அவனும் அரண் மனைக்குச் செல்லலாம் எனக்கூறினான்.

நால்வரும் காவற்காரர்களின் கண்களில் படாமல் அரண் மனை உள்ளே சென்றனர். இரண்டாவது திருடன் ஓரிடத்தில் நிலத்தின் மீது படுத்துத் தட்டிப்பார்த்து பொக்கிசம் இருக்கும் இடத்தைக் கண்டுபிடித்தான். அதற்கு ஒரு பெரிய பூட்டு போடப்பட்டிருந்தது. அதை முதலில் முதலாவது திருடன் அதிசுலபமாகத் திறந்து விட்டான்.

இச்சமயம் அரசன் அவர்க ளுக்கு தெரியாமல் வெளியே வந்து காவலர்களுக்கு ஏதோ உத்தரவு இட்டுச் சென்றான். மறுநிமிடமே மூன்று திரு டர்களும் கையும் மெய்யுமாகப் பிடிபட்டனர்.

மறுநாள் விசாரணைக்கு அர சன் முன் அவர்கள் நிறுத்தப் களிடம் நேற்று இரவு இவர் தான் தம்முடன் திருடன் வேடத்தில் வந்தது எனக் கூறினான்.

விசாரணை முடிந்தது. அர சன் தனது ஆட்காட்டி விரலை மேல் இருந்து கீழே இறக்கி காவலர்களுக்கு சமிக்ஞை செய்தான். அவர்களுக்கு மரணதண்டனை என அறிவிக்கப்பட்டது.

மறுநாள் அவர்களை தூக்கிலிடும் முன்னால் ஒரு அதிகாரி அவர்களைப் பார் த்து உங்களது கடைசி விரு ப்பம் என்ன? என்று கேட்க அவர்களும் அரச னிடம் ஒரு கேள்வி மட்டும் கேட்கவேண்டும் என்றனர்.

அரசனுக்கு இவ்விடயம் தெரிவிக்கப்படவே அவனும் அங்கு வந்தான். அவர்களிடம் என்னிடம் என்ன கேள்வி கேட்க வேண்டும் என்று அவன் கேட்டான். மூன்றா வது திருடன் பிரபோ நீங்கள் உங்களது இரு சக்திகளைப் பற்றி எங்களிடம் கூறினீர் கள். அவற்றில் ஒன்றை நிரூபித்துக்காட்டி விட்டீர் கள். இரண்டாவது சக்தி யையும் கண்டுகளிக்க வேண்டுமென்பதே எங்கள் கோரிக்கை என்றான்.

அரசன் புன்சிரிப்பு சிரித்த வாறே தன் ஆட்காட்டி விரலை கீழிருந்து மேலுக்குக் கொண்டு போய் சமிக்ஞை செய்யவே வீரர்கள் அந்தத் திருடர்களின் கட்டுக்களை அவிழ்த்து விடுதலை செய்



பட்டனர். அப்போது மூன்றா வது திருடன் சிம்மாசனத்தி லிருந்த அரசனைப் பார்த்துவிட்டு தனது சகாக் தனர். அம்மூவரும் அன்று முதல் திருட்டுத் தொழிலை விட்டு அந்த அரசனிடமே வேலைக்கு அமர்ந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றிகளை வழங்கும் விஜய வருட பலன்கள்

ஜோதிடக் கலைமணி, சிவல்புரி சிங்காரம்

மிதுனம்

மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ஆம் பாதங்கள்

நல்லது நடக்கும் ஆண்டு இது!

சமய சந்தர்ப்பங்களுக்கு ஏற்றவாறு நடந்து கொள்ளும் மிதுன இராசி நேயர்களே!

"விஜய' வருடம் உங்களுக்கு வியக்கும் விதத்தில் வாழ்க்கையை அமைத்துக் கொடுக்கப் போகிறது. காரணம் கோந்திராதிபத்ய தோஷம் பெற்ற கிரகமான வியாழன் 12 ஆம் இடத்தில் விபரீத இராஜயோக அடிப்படையில் சஞ்சரிக்கிறார். எனவே, திட்டமிடாமல் செய்கின்ற காரியங்களில் வெற்றி கிடைக்கும். திடீர் இலாபங்கள் வந்து கொண்டே இருக்கும்.

தனாதிபதி சந்திரன் விரய ஸ்தானத்தில் இருப்பதால் கவலைப்பட வேண்டாம். இலாப ஸ்தானம் வலுவாக இருக்கிறது. உங்கள் இராசிக்கு சூரியன் சகாய ஸ்தானாதிபதி ஆவான். அவருக்குரிய நட்சத்திரமான கார்த்திகையில் ஆண்டு தொடங்குகிறது. எனவே, அனைத்து சகாயங்களும் உங்களுக்கு கிடைக்கும். விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழும் ஆண்டாகக்கூட கருதலாம்.

சவால்களை சமாளிப்பீர்கள்!

மற்றவர்களின் பிரச்சினைகளுக்கு வடிகாலாக விளங்குபவர்கள் நீங்கள். சில கருத்தை ஆதரித்தும் பேசுவீர்கள். மறுத்தும் பேசுவீர்கள. சவால் விடுவதும் அதை சமாளிப்பதும் உங்களுக்குக் கைவந்த கலையாக இருக்கும். வேகமான சிந்தனை, வேகமான செயற்பாடு இவை இரண்டும்தான் உங்கள் முன்னேற்ற பாதைக்கு வித்திடுகிறது.

எதையும் விரைவாக செய்து முடிக்க வேண்டும் என்று விரும்புபவர்களின் பட்டியலில் முதலிடம் பிடிப்பவர்கள் நீங்கள். தாமதம் என்ற வார்த்தை அகராதியிலேயே இருக்கக் கூடாது என்று சொல்வீர்கள். பாச மனதோடு பழகினாலும் பகை என்று வந்துவிட்டால் ஒசைப்படாமலேயே ஒதுங்கி விடுவீர்கள். சீசன் பிசினஸ் என்று சொல்லப்படும் அப்போதைக்கு அப்போது தேவைப்படுபவைகளை விற்பனை செய்து திடீர் தனலாபம் காண்பவர்கள் நீங்கள்தான்.

நந்தன வருடம் பங்குனி மாதம் 13 ஆம் திகதி சனிக்கிழமை இரவு 11.52 மணிக்கு தனுசு லக்னம், கார்த்திகை நட்சத்திரம் ரிஷப இராசியில் அமிர்த யோகத்தில், விஜய வருடம் பிறக்கிறது.

விஜய ஆண்டின் தொடக்கம் விரும்பியதெல்லாம் நடக்கும்!

விஜய ஆண்டின் தொடக்கத்தில் இராசிநாதனாகவும் 4 ஆம் இடத்திற்கு அதிபதியாகவும் உள்ள புதன் 10 ஆம் இடத்தில் அஸ்தமனமும் பெறுகிறார். நீச்சமும் பெறுகிறார். இதனால் உடல் ஆரோக்கியத்தில் சிறுசிறு குறைபாடுகள் இருக்கலாமே தவிர, யோகங்களில் எந்தக் குறைபாடும் இருக்காது. வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும். உச்ச சனி வக்ரம் பெற்றிருக்கிறார். அதுவும் நன்மைதான். அஷ்டமாதிபதி வக்ரம் பெறும் பொழுது இழப்புகளை ஈடுசெய்ய வாய்ப்புகள் கிடைக்கும்.

வியாபாரங்களில் விரோதங்களை வளர்த்துக்கொண்டவர்கள், அது தானாகவே விலகுவது கண்டு ஆச்சரியப்படுவார்கள். மாறுபட்ட கருத்துடையோர் மனம் மாறுவர். சீரும் சிறப்பும் செல்வாக்கும் வந்து சேரும். என்றாலும் சில பிரச்சினைகளும் தலை தூக்கும். ஊர் நலத்தில் அக்கறை கொண்டவர்கள் ஒவ்வொரு நாளும் விழிப்புணர்ச்சியோடு இருந்தால் வீண்பழிகளிலிருந்து தப்பிக்கலாம். மற்றவர்களை விமர்சிப்பதை தவித்தால் மனக் கசப்புகளில் இருந்து விடுபட இயலும்.

தொகை மட்டுமல்ல, நகையும் கூட சேரலாம். ஆனால், பகை மட்டும் சேர அனுமதிக்கக்கூடாது. இதுவரை குடும்ப உறுப்பினர்கள் உங்கள் சொற்களுக்கு

மதிப்பு கொடுக்காமல் இருந்திருக்கலாம். ஊர் முழுவதும் உங்கள் பேச்சுக்கு மதிப்பு கொடுத்தாலும், உடனிருப்பவர்கள் உங்கள் பேச்சுக்கு மதிப்பு கொடுக்கவில்லையே என்ற கவலை இனி அகலும்.

வாக்கு ஸ்தானாதிபதி சந்திரன் குருவோடு இணைந்து சஞ்சரிப்பதால் பஞ்சாயத்துக்களில் தலைமைப் பொறுப்பு ஏற்பீர்கள். அரசியலில் ஈடுபாடு கொண்டிருப்பவர்களுக்கு ஆச்சரியப் படத்தக்க விதத்தில் புதிய பொறுப்புகள் வந்து சேரும்.

ஜென்ம குரு என்ன செய்யும்!

இதுவரை உங்கள் இராசிக்கு 12 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த குரு பகவான், வைகாசி மாதம் 14 ஆம் திகதி (28.05.2013) அன்று மிருகசீரிட நட்சத்திரத்திரம் 3 ஆம் பாதத்தில் உங்கள் இராசியிலேயே சஞ்சரிக்கப் போகிறார். ஜென்மத்தில் சஞ்சரிக்கும் குருவால் ஊர் மாற்றம், இடமாற்றம், இலாகா மாற்றம், நாடு மாற்றம் போன்ற வைகள் வந்தாலும் அவை திருப்திகரமாக இருக்குமா? என்பதை சுயஜாதகத்தில் திசாபுத்தி பலமறிந்து பார்த்துக் கொள்வதே உத்தமம்.

உங்கள் இராசிக்கு களத்திர ஸ்தானாதிபதியாகவும் தொழில் ஸ்தானாதிபதியாகவும் குரு விளங்குகிறார். அவர் ஜென்மத்தில் இருந்தபடியே 5,7,9 ஆகிய இடங்களைப் பார்த்து புனிதப்படுத்துகிறார். 5 ஆம் இடத்தைப் பாரக்கும் குருவால் பூர்வீக சொத்துக்களில் இருந்த தகராறுகள் அகலும். தானாகவே சொத்து கிடைப்பதற்கான அறிகுறிகள் தோன்றும்.

பிள்ளைகள் வழியில் நல்ல முன்னேற்றம் உண்டு. உங்களுக்கு பெருமை சேர்க்கும் விதத்தில் அவர்கள் நடந்து கொள்வார்கள். பூர்வீக இடத்தில் குடியேறும் வாய்ப்பும் ஒரு சிலருக்கு கிடைக்கும்.

குருவின் பார்வை சுகஸ்தானத்தில் பதிவதால் தாமதித்திருந்தவர்கள் தம்பதியர்களாக மாறும் சூழ்நிலை உருவாகும். கல்யாண வாய்ப்புகள் கைகூடி வரவில்லையே என்ற கவலை இனி அகலும். பிரிந்த தம்பதியர் ஒன்று சேரும் வாய்ப்பும் கிடைக்கும். பிரச்சினைகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பதே குருவின் பார்வை ஒன்றுதான். எனவே, இனிய வாழ்க்கை அமையும்.

அடுத்தடுத்து நல்ல சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்பு அந்த குருவின் பார்வைக்கு உண்டு. பெண் பிள்ளைகளின் பூப்புனித நீராட்டுவிழாக்கள், பெற்றோர்களின் மணிவிழாக்கள் போன்றவைகள் நடப்பதற்கான சூழ்நிலைகள் உருவாகும்.

குருவின் பார்வை 9 ஆம் இடத்தில் பதிவதால் பொன், பொருட்கள் வாங்கும் வாய்ப்பு கிட்டும். புதிய தொழில் தொடங்கும் திட்டங்களையும் நிறைவேற்றிக் கொள்வீர்கள். அதற்குரிய மூலதனத்தை தாய், தந்தையர் அல்லது தாராள மனப்பான்மை கொண்டவர்கள் கொடுத்து உதவி செய்வார்கள். வாய்ப்புகள் கைநழுவி செல்கிறதே என்ற கவலை இனி அகலும். தந்தை வழி உறவுகளில் பகை மாறும். பயணங்கள் அதிகரிக்கும். வண்டி, வாகன சேர்க்கைக்கு அஸ்திபாரமிடும் நேரமிது.

மந்தன் சனியால் வரும் மாற்றங்கள்!

சனி 5 ஆம் இடத்தில் உச்சம் பெற்று வருடத் தொடக்கத்திலேயே வக்ரம் பெற்றுத்தான் சஞ்சரிக்கிறார். 04.04.2013 முதல் 04.07.2013 வரையிலும் மீண்டும் 01.03.2014 முதல் 13.04.2014 வரை சனி வக்ரம் பெறுகிறார். இதற்கிடையில் ஏப்ரல், மே, ஆகஸ்ட், செப்ரம்பர், ஒக்டோபர் ஆகிய மாதங்களில் சனி, செவ்வாயின் பார்வை

காலம் ஏற்படுகிறது. இதுபோன்ற காலங்களில் கூடுதல் விழிப்புணர்ச்சியோடு செயற்படுவதுதான் நல்லது.

உங்கள் இராசிக்கு 8,9 ஆகிய இடங்களுக்கு அதிபதியாக சனி விளங்குகிறார். எனவே, அதன் வக்ர காலத்தில் நன்மையும், தீமையும் கலந்தே நடைபெறும். பெற்றோர், உற்றார், உறவினர், மற்றோர் ஆகியோரின் பகையை வளர்த்துக் கொள்ளாமல் பார்த்துக்கொள்வது நல்லது.

உடலில் ஏற்படும் சிறுசிறு பிரச்சினைகளுக்கு தீர்வு காண அப்போதைக்கப்போது மருத்துவ ஆலோசனைகளைப்பெறுவது நல்லது. வீடு, மனை வாங்க முற்படுபவர்கள் ஆவணங்கள் யாவற்றையும் சரிபார்த்தபின் வாங்குவதே நல்லது.

தந்தைவழி உறவில் இருந்த நெருக்கம் குறையும். வெளியூர் பயணங்களால் வேலை அதிகரிக்கும். மனக் குழப்பம் தீவிரமாகும் இந்த நேரத்தில் மந்தன் வழிபாட்டை முறையாக செய்வது நல்லது. காக வாகனத்தானைக் கைகூப்பி தொழுதால் தேக நலன் சீராகும்.

செவ்வாய், சனியின் பார்வை காலத்தில் எதிர்பாராத விரயங்கள் ஏற்படலாம். எவ்வளவு பணம் பர்சில் வைத்தாலும் உடனடியாக செலவாகி விடும். சகோதரர்களும் எதிரியாக மாறலாம். உடன்பிறப்புகளை நீங்கள் அனுசரித்துச்சென்றால்தான் உங்களுக்கு வந்துசேரவேண்டிய பங்கும் முறையாக வந்து சேரும். உள்ளத்தில் அமைதியும் கிடைக்கும். புதிய முதலீடுகள் செய்பவர்கள் யோசித்து செய்வது நல்லது.

குருவின் வக்ர காலமும் செவ்வாயின் வக்ர காலமும்!

13.11.2013 முதல் 2.03.2014 வரை குரு மிதுனத்தில் வக்ரம் பெறுகிறார். 7,10 க்கு அதிபதியாக விளங்குகின்றார். எனவே, சப்தமாதிபதி வலிமை இழக்கும் நேரத்தில் குடும்பப் பிரச்சினைகள் கொடிகட்டி பறக்கலாம். வருமானம் திருப்திகரமாக இருந்தாலும் மனநிம்மதி குறைவாகவே இருக்கும். குடும்ப இரகசியங்களை வெளியில் சொல்வதன்மூலம் சில பிரச்சினைகளையும் சந்திக்க நேரிடும்.

தொழில் கூட்டாளிகளை நம்பி செய்த காரியங்களில் தடைகள் ஏற்படலாம். என்ன இருந்தாலும் புதிய முதலீடுகள் செய்ய நினைப்பவர்கள் யோசித்து செய்வதே நல்லது.

பலன் தரும் பரிகாரம்!

புதன்கிழமை தோறும் விஷ்ணு வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். புதிய பாதை புலப்படும். உங்கள் விருப்பங்களும் நிறைவேறும்.

செவ்வாயின் வக்ர காலமான 01.03.2014 முதல் 13.04.2014 வரை நல்ல வாய்ப்புகளே வந்து சேரும் என்றே சொல்லலாம். பொதுவாக 6க்கு அதிபதி வக்ரம் பெறும் பொழுது ஆரோக்கியம் சீராகும். ஆதாயம் அதிகரிக்கும். எதிரிகள் விலகுவர். உத்தியோக மாற்றங்கள் உறுதியாகலாம். வெளிவட்டார பழக்க வழக்கம் விரிவடையும். கரைந்த சேமிப்புகளை ஈடுகட்ட முன்வருவீர்கள்.

மிதுன இராசியில் பிறந்த பெண்களுக்கு விஜய வருடம் குடும்ப சுமை கூடும் ஆண்டாக அமைந்துள்ளது. கொடுக்கல்- வாங்கல்களில் கூடுதல் விழிப்புணர்ச்சியை காட்டுவது நல்லது. ஊர் மாற்றம், வீடு மாற்றம், உள்ளம் மகிழும் விதம் அமையும். உடனிருப்பவர்களையும் உறவினர்களையும் அனுசரித்துச் சென்றால்தான் நிம்மதியைப் பெறலாம்.

புத்திர ஸ்தானத்தில் சனியும், இராகுவும் இருப்பதினால் பிள்ளைகளின் போக்கை கண்காணித்தக் கொள்வது நல்லது. இராகு, கேது பரிகாரமும் ஆஞ்சநேயர் வழிபாடும் நல்ல வாழ்க்கையை அமைத்துக் கொடுக்கும்.

செவ்வாய், சனி பார்வை காலத்தில் உடன்பிறப்புகள் வழியே பகை உருவாகலாம். கணவன்- மனைவிக்குள் அனுசரிப்பும் அன்பு காட்டும் சூழ்நிலையும் இருந்தால் அமைதியை வரவழைத்துக் கொள்ளலாம்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டத்தரணிகள் சங்கத்திற்கும் மொஹானுக்கும் இடையே முறுகல்

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்திற்கும் பிரதம நீதியரசருக்கும் இடையில் ஏற்பட்டுள்ள கருத்து முரண்பாடுகள் காரணமாக நீதித்துறையில் பாரதூரமான பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளதாக இலங்கை சுதந்திர சட்டத்தரணி சங்கம் தெரிவித்துள்ளது.

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் புதிய தலைவர் பதவி ஏற்கும் வைபவத்தில் பிரதம நீதியரசருக்கு அழைப்பு விடுக்காதது இந்த நிலைமையை தெளிவாக எடுத்து கட்டியுள்ளது எனவும் அச் சங்கம் தெரிவித்துள்ளது.

புதிதாக பதவியேற்றுக் கொண்ட இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் உபுல் ஜயசூரிய பிரதம நீதியரசரை ஏற்றுக் கொள்ளாமையானது இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் வரலாற்றில் கரும் புள்ளியாக பதிவாகியுள்ளது என இலங்கை சுதந்திர சட்டத்தரணிகள் சங்கத்தின் உப செயலாளர் பந்துல வெள்ளாள தெரிவித்துள்ளார்.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்திற்கும் புதிய பிரதம நீதியரசருக்கும் இடையில் கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளதன் காரணமாக நீதிபதிகள் எவரும் சனிக்கிழமை நடைபெற்ற வைபவத்தில் கலந்து கொள்ளவில்லை.

வரலாற்றில் முதன்முறையாக பிரதம நீதியரசர், சட்டமா அதிபர், சொலிசிட்டர் ஜெனரல் ஆகியோர் கலந்து கொள்ளாத வைபவம் என்ற காரணத்தினால் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தொன்றுதொட்டு இருந்து வந்த சம்பிரதாயம் மீறப்பட்டுள்ளது எனவும் பந்துல வெள்ளாள தெரிவித்துள்ளார். (அ-2)

இலங்கையில் தரம் குறைந்த அரசியல்வாதிகளே உள்ளனர்

அமைச்சர் மைத்திரிபால

(கொழும்பு)

இலங்கையில்மிகவும்தரம்குறைந்த அரசியல்வாதிகள் இருப்பதாக சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கை ஒன்றில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் குறிப்பிட்டுள்ள விடயங்கள் வருமாறு,

இலங்கையில் மிகவும் தரத்தில் குறைந்த அரசியல்வாதிகள் பலர் இருக்கிறார்கள்.

அவர்களாலேயே இலங்கையில் பல்வேறு சந்தர்ப்பங்களில் தரம் குறைந்த செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இந்நிலையில் பொருட்களுக்கும் சேவைகளுக்கும் தர நிர்ணயம் செய்யப்படுவதை போல அரசியல்வாதிகளுக்கும் தர நிர்ணயம் செய்யப்பட வேண்டும் என்று அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதன் மூலம் இலங்கையில் சிறந்த அரசியலை உருவாக்கி மக்களுக்கு சரியான சேவையை வழங்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

சைப்பிரஸிற்கு இலங்கையர்களை அனுப்புவது தற்காலிக நிறுத்தம்

(கொழும்பு)

சைப்பிரஸ் நாட்டிற்கு இலங்கைப் பணியாளர்களை அனுப்பிவைக்கும் நடவடிக்கை தற்காலிகமாக இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

சைப்பிரஸில் நிலவி வரும் பொருளாதார நெருக்கடி நிலைமை காரணமாக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அவ்வமைச்சு குறிப்பிட்டுள்ளது.

சைப்பிரஸிற்கு இலங்கையர்களை அனுப்பிவைப்பதற்குஎதிர்ப்புவெளியிடப்பட்டுள்ளது. சைப்பிரஸ் மக்களே வேலையில்லாப் பிரச்சினையினால் திண்டாடும் நிலையில் இலங்கையர்களை அனுப்பி வைப்பது புத்திசாதுரியமானதாக அமையாது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் தற்காலிக அடிப்படையில் சைப்பிரஸிற்கு இலங்கையர்களை அனுப்பி வைக்கும் நடவடிக்கை இடைநிறுத்தப்பட்டுள்ளது. (அ-2)

பாகிஸ்தான் அமைச்சர் ஜனாதிபதியுடன் சந்திப்பு

(கொழும்பு)

மிக முக்கியமான தருணங்களில் பாகிஸ்தான் உதவிகளை வழங்கியுள்ளதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள பாகிஸ்தான் வெளிவிவகாரச் செயலாளர் அப்பாஸ் ஜிலானி நேற்று முன்தினம் ஜனாதிபதியை சந்தித்துள்ளார்.

இச் சந்திப்பின் போதே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் பாகிஸ்தான் தேர்தல்கள் குறித்தும் இச்சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்டுள்ளது. அரசியலில் பெண்களின் பங்களிப்பு அதிகரிக்கப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை யுத்தம் இடம்பெற்ற 2005 ஆம் ஆண்டில் இலங்கைக்கு விஜயம் செய்ததனை விடவும் தற்போது பாரியளவில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் சமாதானம் நிலவுவதாகவும் ஜிலானி தெரிவித்துள்ளார். (அ-2)

★ கி.மு. 648- ஆரம்பகால சூரிய கிரகணம் கிரேக்கர்களால் பதியப்பட்டது.

★ 1782-தாய்லாந்து மன்னன் டாக்சின் ஆட்சியில் இருந்து அகற்றப்பட்டான். முதலாம் ராமா மன்னனாக முடிசூடினான்.

★ 1814-நெப்போலியன் பொனபார்ட் பதவியில் இருந்து அகற்றப்பட்டு எல்பா தீவுக்கு நாடு கடத்தப்பட்டான்.

★ 1865-அமெரிக்க உள்நாட்டுப் போர்: ரிச்மண்ட் நகரில் ஏற்பட்ட தோல்வியின் பின்னர் கூட்டமைப்பின் இராணுவத்தினர் தமது கடைசிச் சமரை வடக்கு வேர்ஜீனியாவில் நடத்தினர்.

★ 1869-செலுலோயிட் கண்டுபிடிக்கப்பட்டது.

★ 1896-ஆயிரத்து 500 ஆண்டுகளாக ரோம் பேரரசர் முதலாம் தியோடோசியசினால் தடை செய்யப்பட்டிருந்த ஒலிம்பிக் போட்டிகள் முதற்தடவையாக கிரேக்கத்தின் எதன்ஸ் நகரில் ஆரம்பமாகின.

★ 1917-முதலாம் உலகப் போர்: ஐக்கிய அமெரிக்கா ஜேர்மனி மீது போரை அறிவித்தது.

★ 1919- மகாத்மா காந்தி பொது வேலை நிறுத்தத்தை அறிவித்தார்.

★ 1936-ஐக்கிய அமெரிக்கா, ஜோர்ஜியாவில் சுழல்காற்று தாக்கியதில் 203 பேர் உயிரிழந்தனர்.

★ 1941-இரண்டாம் உலகப் போர்: யூகொஸ்லாவியா மற்றும் கிரேக்கத்தை ஜேர்மனி முற்றுகையிட்டது.

★ 1965-ஏளி பேட் (Early Bird) என்ற தொடர்பாடற் செய்மதி விண்ணில் ஏவப்பட்டது.

★ 1968-இலியானா மாநிலத்தில் இடம்பெற்ற இரட்டைக் குண்டுவெடிப்புகளில் 41 பேர் கொல்லப்பட்டு 150 பேர் காயமடைந்தனர்.

★ 1973-பயனியர் 11 விண்ணுக்கு ஏவப்பட்டது.

★ 1994-ருவாண்டா மற்றும் புருண்டி ஜனாதிபதிகள் பயணம் செய்த விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டதைத் தொடர்ந்து ருவாண்டாவில் இனப்படுகொலைகள் ஆரம்பமானது.

★ 1998-இந்தியாவைத் தாக்கக் கூடியதான நடுத்தர ஏவுகணைகளை பாகிஸ்தான் சோதித்தது.

★ 2005-குர்தியத் தலைவர் ஜலால் தலபானி ஈராக் ஜனாதிபதியானார்.

பிறப்புக்கள்.

★ 1483-ரஃபாயெல், இத்தாலிய ஓவியர், கட்டடக் கலைஞர் (இ.1520)

★ 1815-மீனாட்சி சுந்தரம்பிள்ளை, தமிழறிஞர் (இ.1876)

★ 1911-பியோதர் லைனென், மருத்துவத்துக்கான நோபல் பரிசு பெற்ற ஜேர்மனியர் (இ.1979)

★ 1920-எட்மண்ட் பிஷர், மருத்துவத்துக்கான நோபல் பரிசு பெற்றவர்

★ 1928-ஜேம்ஸ் வாட்சன், மருத்துவத்துக்கான நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர்

★ 1949-ஹோர்ஸ்ட் ஸ்டோர்மர், நோபல் பரிசு பெற்றவர்

★ 1963-ரஃப்வேல் கோர்ரியா, ஈக்குடோர் நாட்டின் ஜனாதிபதி

இறப்புக்கள்

★ 1520-ரஃபாயெல், இத்தாலிய ஓவியர், கட்டடக் கலைஞர் (பி.1483)

★ 1961-ஜூல்ஸ் போர்டெட், மருத்துவத்துக்கான நோபல் பரிசு பெற்றவர் (பி.1870)

★ 2011-சுஜாதா, தமிழ்த் திரைப்பட நடிகை (பி.1952)

சுஜாதா

சுஜாதா தென்னிந்தியத் திரைப்பட நடிகை. இவர் தமிழ், தெலுங்கு, மலையாளம், இந்தித் திரைப்படங்களில் நடித்துள்ளார். தமிழ் சினிமா உலகில் முன்னணி நடிகையாக விளங்கியவர். இவர் 1952 ஆண்டில் டிசெம்பர் மாதம் 10 ஆம் திகதி இலங்கையில் பிறந்தார். அவருடைய சொந்த ஊர் கேரள மாநிலம் காலே. அவர் எஸ்.எஸ்.எல்.சி.வரை படித்தார்.

1977 ஆம் ஆண்டில் ஜெய்கர் என்பவரை காதல் திருமணம் செய்து கொண்டார். இவர்களுக்கு சஜித் என்ற மகனும் திவ்யா என்ற மகளும் இருக்கிறார்கள். திவ்யா, டாக்டருக்கு படித்து இருக்கிறார்.

பொலிஸ் ஸ்டேஷன் என்ற மலையான நாடகத்தில் முதன் முதலாக நடித்தார். 1972 ஆம் ஆண்டில் கே.பாலச்சந்தர் இயக்கத்தில் அவள் ஒரு தொடர்கதை படத்தில் அறிமுகமானார். அந்தப் படம் வெற்றியெற்றதை தொடர்ந்து சுஜாதா தமிழ்ப்பட உலகில் பிரபலமானார். தெலுங்கு, தமிழ், மலையாளம் மற்றும் இந்தி ஆகிய மொழிகளில் 300 இற்கும் மேற்பட்ட படங்களில் கதாநாயகி உள்ளிட்ட வேடங்களில் சுஜாதா நடித்துள்ளார்.

வரலாறு படத்தில் அஜித்குமாரின் அம்மாவாக நடித்து இருந்தார். அதுதான் அவர் நடித்த கடைசிப் படம். இருதய நோயால் அவருடைய உடல் நிலை மோசம் அடைந்திருந்த நிலையில் கடந்த 2011 ஆம் ஆண்டு இதே நாளில் சென்னையில் மரணம் அடைந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலநிலை மாற்றத்தினால் வெங்காயத்தில் குமிழ் அழுகல் தந்த பாடமும் பயிர் மற்றும் சூழல் பாதுகாப்பு மையத்தின் அவசியமும்



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 25-VI

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

விவசாயமும் கடற்றொழிலும் இயற்கையை நம்பி செய்கின்ற தொழில். இவ்வுலகத்தவருக்கு உண்ண உணவு கொடுக்கும் தொழில். இரண்டுக்குமே ஒற்றுமை, வேற்றுமை என பல இருப்பினும் இவையிரண்டும் எமது பிரதேசத்துக்குரிய வளங்களை அடிப்படையாகக் கொண்டு இயங்குகின்ற தொழிற்றுறைகள். விவசாயத்திற்கு இவ்வாண்டு ஆரம்பம் மகிழ்ச்சியானதாக இருக்கவில்லை. இவ்வாண்டு ஆரம்பம் இனிதாகத் தான் மலர்ந்தது! இயற்கையினை வணங்கி வருண பகவானை வணங்கிப் படைத்து வழக்கமான பொங்கல் நிகழ்வுகளெல்லாம் சிறப்பாகத்தான் நடந்தது.

ஆனால் இயற்கையின் விபரீதம் இம்முறை அவசரமாக வருட ஆரம்பத்திலேயே நடந்தேறியிருக்கின்றது. அநேகமாக விவசாய பெருமக்களை திக்குமுக்காட வைத்து வாட்டியுமெடுத்திருக்கின்றது.

ஒருமுறை இரு முறையல்ல தொடர்ந்து பல விளைவுகள், விவசாய பெருமக்களின் முயற்சிகளை மாற்றிப் பிரட்டிப் போட்டிருக்கின்றது. இயற்கையின் விபரீதம் இங்கு மட்டுமல்லவே உலக நாடுகளையும் ஒரு தரம் உருட்டியெடுத்திருக்கின்றது. இருப்பினும் இவ் விளைவுகளுக்கு நாமும் காரணம் என இன்னும் நாம் புரிந்து கொள்ள தலைப்படவில்லை.

பயிர்ச் செய்கையாளர்களுக்கு மட்டுமல்ல மக்கள் அனைவருக்கும் கடினமான காலமாக நடந்தேறியிருக்கின்றது. குளிர் பிரதேசங்கள் மேலும் வலுப்பெற்று குளிர்ந்திருக்கின்றன. மறுபக்கத்தில் வரட்சியால் நொந்து போயிருக்கும் பிரதேசங்கள் மேலும் வரண்டு வரட்டியுமெடுத்திருக்கின்றன. காலநிலை மாற்றத்தினாலான விளைவு என சுருக்கிக் கூறினாலும் விவசாய பெருமக்களுக்குள்ள சோகத்தை போக்க இம்முறை வழியெதுவும் விரைந்து தேட முடியவில்லையே என்ற ஆதங்கம் இன்னும் நெஞ்சில் கணக்கின்றது.

இலங்கை முழுவதுமாக இந்த மாற்றத்தை உணர்ந்திருந்தாலும் வடபிரதேசத்தில் குறிப்பாக யாழ்ப்பாணத்து விவசாயிகள் பட்ட வேதனையை முழுமையாக உணர்ந்த போது அவர்களுடனிருந்து மனவேதனையுற்ற போது இதற்கொரு வழி இதிலிருந்தாவது பிறக்க வேண்டும் என முடிவுசெய்யப்பட்டது. நெல், புகையிலை மற்றும் வெங்காயப் பயிர்ச்செய் கையாளர்கள் இம்முறை பட்ட வேதனைக்கு இனிவருங்காலத்திலாவது இவ்வாறான பிரச்சினை தீர்வு காணவேண்டும் என்பதில் விவசாய பீடம் முயன்று கொண்டிருக்கின்றது.

குறிப்பாக வெங்காயச் செய்கையாளர்களை மீண்டும் மீண்டும் வாட்டியெடுத்திருப்பது மனதிற்குள் இன்னும் நெருடலாகவே இருக்கின்றது.

வருட ஆரம்பத்தில் வெங்காயம் பயிர் செய்யப்பட்ட பிரதேசங்களில் வெங்காயம் பயிரில் ஏற்பட்ட பலவகையான பூஞ்சண நோய்கள் இப்பயிர்ச்செய்கைக்கு சவாலாகவே அமைந்தது. குறிப்பாக கழுத்தழுகல், இலை வாடல் நேரய், இலைப்புள்ளி நோய், இலையில் கீழ்துகள் பூஞ்சணம் மற்றும் இலைச் சுருளல் நோய் என்பன வெங்காயப்பயிரை வளர விடாமலும் வளர்ந்த பயிரில் குமிழ் தோன்றி வளர்வதைத் தடுத்ததனையும் ஆய்ந்து கண்டுகொண்டோம்.

வழக்கமாக பூஞ்சண நோய்களனைத்தும் இவ்வாறு சேர்ந்து வருவது குறைவு. ஆனால் இம்முறை காலநிலை ஏதுவாக இருந்ததனால் வெங்காயப் பயிருக்கு அதுவும் எமது பிரதேசத்து பணப்பயிருக்கு இப்படியொரு சேதம் ஏற்பட்டிருக்கின்றது. விவசாயப் பெருமக்கள் பல வழிகளில் இந்நோய்களை கட்டுப்படுத்த பூஞ்சண நாசினிகள் பலவற்றை தெளித்திருக்கின்றார்கள். எப்படி முயன்றும் வெங்காயத்தில் ஏற்பட்ட இழப்பை கட்டுப்படுத்த முடியவில்லை. நாளாக நாளாக பூஞ்சணத்தின் விருத்தியும் நோய் பரவும் வேகமும் அதிகமானதே தவிர கட்டுக்குள் வைத்திருக்க முடியவில்லை.

காலம் மாறிப்பெய்த மழையினால் அனைத்துமே நாசமாகிவிட்டது. வரண்ட வலயத்தில் இப்படி மழை பெய்வது அரிதாகினும் இம்முறை பெய்த மழை பயிர்களுக்கு சேதத்தை விளைவிக்க காரணமாகிவிட்டது. மண்ணில் சும்மாயிருந்த பூஞ்சணங்களெல்லாம் வரங்கிடைத்தது போல விரைந்து பெருகி தாக்கியதால் வெங்காயப் பயிர் நிலைகுலைந்து விட்டது போக வெங்காயச் செய்கையாளர்களுக்கும் சவால் விடுத்திருக்கின்றது.

வந்த பூஞ்சணங்கள் மண்ணில் வாழும் தன்மையுடையன என்பது ஒருபக்கமிருக்க அவற்றினது வித்திகளை நன்றாக உற்பத்தி செய்து விளைநிலம் முழுக்க பரவிவிட்டிருக்கின்றது. மேலும் மேலும் மழை பெய்தது அழிவுக்காகினும் மழையினால் வளிமண்டல வெப்பநிலை குறைந்து ஈரப்பதன் அதிகரித்திருக்கின்றது.

பொதுவாகவே பூஞ்சண நோய்களின் விருத்திக்கு வளிமண்டல ஈரப்பதன் அதிகமாக இருப்பது சாதகமானதாகும். மாசி, பங்குனியில் பல இடங்களில் காளான் மண்ணிலிருந்து முளைத்திருப்பது இங்கே சிறந்த சுட்டியாக கொள்ளலாம். மண்ணில் வாழும் பூஞ்சணம் காலநிலைக்கேற்ப தனது வளர்ச்சியை வித்திகள் உற்பத்தி செய்யும் ஆற்றலை பெருக்கிக் கொள்வது இயல்பு.

ஆனால் சாதகமாக சூழல் ஏற்படும் போது இப் பூஞ்சணங்கள் வெகுண்டெழுந்து பயிர்களை துவம்சம் செய்துவிடுகின்றன. வருகின்ற நோய்களை விரைந்து கட்டுப்படுத்த முடியாதவாறு இவற்றினுடைய விருத்தியிருக்கின்றது. நாம் முந்திக் கொள்ள முன் இவை விருத்தியடைந்து விடுவது தான் வேடிக்கையான விடயமாக இருக்கின்றது. விளை நிலத்தில் இவ்வளவுபிரச்சினையும் இருந்து அதிலிருந்துமீண்டுபின்னர்கிடைத்ததை அறுவடை செய்த போதும் மழை வந்து அறுவடையான அனைத்தையும் நனை த்து துவம்சம் செய்திருக்கின்றது. (அடுத்த வாரம் வளரும்)

கொழும்பில் டெங்கு நோயின் தாக்கம் தீவிரமடைந்துள்ளது

கொழும்பு மாவட்டத்தில் டெங்கு நோயின் தாக்கம் தீவிரமடைந்துள்ளதாக கொழும்பு மாவட்ட சுகாதார வைத்தியர் திலகசிறிவர்த்தன தெரிவித்துள்ளார்.

கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது நிறை வடைந்த மார்ச் மாதத்தில் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 100 சதவீதமாக அதிகரித்திருப்பதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

கொலன்னாவை பகுதியிலேயே இந்த விடயத்தில் அதிக பாதிப்பு ஏற்பட்டுள்ளது. பொது மக்கள் இந்த விடயத்தில் அவதானமாக இருக்க வேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார்.

மன்னாரில் தனியார் பேருந்து உரிமையாளர்கள் சேவைப் புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர். மன்னார் மாவட்டத்தின் தனியார் பேருந்து உரிமையாளர்கள் சேவை புறக்கணிப்பை மேற்கொண்டு வருகின்றனர்.

உள்ளூர் பேருந்து சேவை நேர மாற்றங்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து இந்த போராட்டம் நடத்தப்படுகிறது. தங்களின் பிரச்சினைக்கு இன்றைய தினத்துக்குள் தீர்வு கிடைக்காவிட்டால் இன்று முதல் முற்றாக சேவைகளில் இருந்து விலகி போராட்டங்கள் நடத்தப்படும் என்று அவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இதன்படி இன்று முதல் கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை உள்ளிட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்களின் முழுமையான தனியார் போக்குவரத்து சேவைகளும் ஸ்தம்பிதம் அடையும் என்று அவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். (அ-2)

மக்களுக்கு சொந்தமான காணிகளில் புத்தர்சிலை அமைப்பதை நிறுத்துக!

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள பொது மக்களுக்கு சொந்தமான காணிகளிலும் இந்து ஆலயங்களுக்குச் சொந்தமான காணிகளிலும் இராணுவத்தினர் புத்த கோயில் அமைப்பதை நிறுத்த வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இதில் கரைதுறைப்பற்று, ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு, துணுக்காய், மாந்தை கிழக்கு, வெலிஓயா ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளிலே உள்ள மக்கள் காணிகளிலும் இந்து ஆலயங்களுக்கு சொந்தமான காணிகளிலும் இராணுவத்தினரால் புத்த கோயில் அமைக்கப்பட்டு வருகின்றது.

குறிப்பாக கொக்கிளாயில் உள்ள விநாயகர் ஆலயத்திலும், நாயாறுவீதி ஏற்றப்பிள்ளையார் கோயில் வளாகத்திலும் பொது இடங்களான வட்டுவாள் கிராமமைதானத்திலும் புத்த கோயில் அமைப்பதால் இனங்களுக்கு இடையே உள்ள புரிந்துணர்வு, ஒற்றுமை, நல்லிணக்கம் போன்றவற்றிற்கு பங்கம் விளைவிக்கின்ற செயலாகும் என மக்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

எனவே இதனை தடுத்து நிறுத்துமாறு அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-267)

வடமாகாண பிரதம செயலகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட 36 தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கும் 5 பட வரைஞர்களுக்கும் 7 குடியேற்ற உத்தியோகத்தர்களுக்குமான நிய மனக்கடிதங்களை வழங்கி வைக்கும் நிகழ்வு கடந்த 3 ஆம் திகதி வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறியினால் அவரது பணிமனையில் வைத்து வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் வடமாகாண பிரதம செயலாளர் திருமதி ஆர் விஜயலட்சுமி , ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், விவசாய அமைச்சின் செயலாளர் ஹால்டின் மற்றும் நியமனம் பெற்றவரினையும் படங்களில் காணலாம்.

(படங் கள்-என். குமார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐ.நா. சபையின் சுயாதீன விசாரணையை வலியுறுத்தி பிரிட்டனில் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

இலங்கையில் தமிழர்களுக்கு நீதி வழங்கும் வகையில் ஐ.நா. சர்வதேச சுயாதீன விசாரணையை நடத்த வலியுறுத்தி தமிழக மாணவர்களுக்கு ஆதரவாக பிரித்தானியாவில் மாபெரும் ஆர்ப்பாட்டப்பேரணி இடம் பெறவுள்ளது.

இம்மாபெரும் ஆர்ப்பாட்டப்பேரணியில் கலந்து கொள்ளுமாறு உணர்ச்சிக்கவிஞர் காசி ஆனந்தன், பழ.நெடுமாறன் ஆகியோர் அழைப்பு விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக காசி ஆனந்தன் கருத்து வெளியிடுகையில், தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் ஒரு கொதிப்பான காலத்தில் குமுறலான காலத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். முள்ளிவாய்க்காலில் நிகழ்ந்த பொழுது எல்லாம் முடிந்து விட்டது என்று முனகியவர்கள் இருக்கிறார்கள். ஆனால் அது முடிவல்ல ஒரு திருப்பம் என்று நாங்கள் நினைத்தோம்.

இன்று ஐந்து ஆண்டுகளாக எரிந்து கொண்டிருக்கின்ற நிலையில் உலகெங்கிலும் கொதித்தெழுந்திருக்கும் உணர்ச்சி அலைகளைப் பார்க்கின்ற பொழுது முள்ளிவாய்க்கால் முடிவல்ல என்பது தெட்டத் தெளிவாகத் தெரிகிறது.

உலகெங்கிலும் வாழும் தமிழர்கள் உணர்ச்சி வசப்பட்டுப்போய் இருக்கிறார்கள். குறிப்பாக அண்மையில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்தில் அமெரிக்காவினால் கொண்டு வரப்பட்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்ட அந்த நாளையொட்டிய காலகட்டத்தில் பாலச்சந்திரனுடைய அந்தக் கொடுமையான கடைசி நொடிப்பொழுதும் புகைப்படம் மக்கள் முன் வைத்த நேரத்தில் உலகமெங்கும் வெடித் தெழுந்ததை நாம் பார்த்தோம்.

குறிப்பாக தமிழ்நாட்டில் மாணவர்களுடைய பேரெழுச்சி என்பது தமிழீழ விடுதலைப்போராட்டத்தில் ஒரு பகுதியாக அமைந்ததையும் அது ஒரு வரலாற்று நிகழ்ச்சி என்பதையும் நாம் மறந்து விடுவதற்கு இல்லை.

1958 இல் தந்தை செல்வா காலத்தில் அறப்போராட்டம் நடைபெற்ற காலத்தில் யாழ்ப்பாணத்திலும் பல்கலைக்கழக மாணவர்கள் எழுந்தார்கள். மாணவர்கள் ஈழ விடுதலைப் போராட்டத்தில் பெரும் பங்காற்றி வருகின்றனர் என்றார்.

இதேவேளை பழநெடுமாறன் கருத்துத் தெரிவிக்கையில், தமிழக மாணவர்கள் யாருடைய தூண்டுதலும் இல்லாமல் தமிழீழ போராட்டத்தை நடத்தி வருகின்றனர்.

போர்க்குற்றவாளிகளை சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்தவேண்டும் எனப் பல முக்கியமான கோரிக்கைகளை முன்னிறுத்தி அவர்கள் நடத்திக் கொண்டிருக்கக்கூடிய இந்தப் போராட்டம் என்பது அவர்களாகவே திட்டமிட்டு நடத்துகிறார்கள்.

தமிழர்களிடையே பொதுவாக்கெடுப்பு நடத்தவேண்டும் என மாணவர்கள் உரத்த குரலில் முழக்கமிட்டு வருகிறார்கள்.



எனவே உலகத் தமிழர்களும் மாணவர்களின் இந்தப் போராட்டத்திற்கு உற்சாகமும் உந்துதலும் வழங்கவேண்டுமென கேட்டுக் கொள்கின்றேன் எனத் தெரிவித்துள்ளார். (அ-2)

கொலைக்குற்றச்சாட்டின் சந்தேகநபர் கைதானார்

(யாழ்ப்பாணம்)

கொலைக்குற்றச்சாட்டின் பேரில் நபர் ஒருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்தார்.

யாழ்.பொலிஸ் நிலையத்தில் நேற்று இடம்பெற்ற பொலிஸ் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த வருடம் பெப்ரவரி மாதம் 26 ஆம் திகதி சந்திரமோகன் என்ற நபரை தடியால் அடித்து காயப்படுத்தி அவரது மரணத்திற்கு காரணமானவர் என்ற சந்தேகத்தின் பேரில் நேற்று முன்தினம் நபர் ஒருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சுமார் ஒரு வருடத்திற்கு முன்பு கொலை செய்யப்பட்ட நபரின் மரணத்துடன் தொடர்புடைய நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (அ-6)

வீதிகளுக்கு பெயரிடப்படாததால் தபால்களை பெறுவதில் சிரமம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள பெரும்பாலான இல்லங்களில் இன்றுவரை பல வீதிகளுக்கு பெயர் பலகை, வீட்டிலக்கம் என்பன இடப்படாமையால் அஞ்சல் ஊழியர்களும் பொதுமக்களும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இதில் கரைதுறைப்பற்று, ஒட்டுசுட்டான், துணுக்காய், மாந்தை கிழக்கு, புதுக்குடியிருப்பு, வெலிஓயா ஆகிய பிரதேசங்களில் உள்ள மக்கள் போருக்குப் பின்னர் மீள்குடியேறி மூன்று வருடங்கள் கடந்த நிலையிலும் இன்று வரை பல வீதிகளின் பெயர் பலகை, வீட்டிலக்கம் என்பன போடப்படாததன் காரணத்தால் அஞ்சல் அலுவலக ஊழியர்களினால் தபால்களை மக்களுக்கு தாமதமாகவே விநியோகிக்கின்றனர்.

இதனால் முக்கிய தேவைகளை குறித்த தினத்தில் செய்யமுடியாத நிலை காணப்படுகின்றது. எனவே இதனை கருத்திற் கொண்டு உரிய நடவடிக்கையினை எடுக்குமாறு மக்கள் கோரியுள்ளனர். (அ-3-267)

வடமாகாண சபைத் தேர்தல் ஜனநாயகத்திற்கான வெற்றி

இப்படிக் கூறுகிறார் அமைச்சர் டளஸ்

(கொழும்பு)

நாட்டில் நிலவிய 30 வருட கால யுத்தத்தை நிறைவு செய்து வடமாகாண சபைத்தேர்தலை நடத்துவதென்பது ஜனநாயகத்திற்கு கிடைத்த மாபெரும் வெற்றியென ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியின் பொருளாளரும் அமைச்சருமான டளஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

கொழும்பு மகாவலி கேந்திர நிலையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது நாட்டில் 30 வருடங்களாக நிலவிய பயங்கரவாத யுத்தம் நிறைவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இந்நிலையில் இவ்வாண்டு வட மாகாண சபை தேர்தல் இடம் பெறுகின்ற தென்றால் அது எமது ஜனநாயக ஆட்சிக்கு கிடைத்த மிகப் பெரும் வெற்றியாகும்.

வடக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை அரசாங்கம் என்ற ரீதியில் நாம் வன்மையாக கண்டிக்கின்றோம்.

இதற்கு அரசாங்கம் உடந்தையாக செயற்பட்டதாக கூறப்படும் செய்திகளை நாம் நிராகரிக்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

இலங்கை வெள்ளையர்களின் காலணியாக மாற்றமடையாது

பொதுபலசேனா தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் தொழில்துறை, அபிவிருத்தி எனக் கூறிக்கொண்டு சூதாட்ட நிலையங்கள், கசினோ நிலையங்களை திறந்து இலங்கையை வெள்ளைக்காரர்களின் காலணியாக மாற்ற இடமளிக்க போவதில்லை என பொதுபல சேனா அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனை தெரிவித்தார்.

இரண்டு மாதங்களில் நாட்டில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்த எண்ணியுள்ளதாகவும் கூறியுள்ளார்.

பௌத்த மாநாடு ஒன்றின் மூலம் நோய்வாய்ப்பட்டிருக்கும் நாட்டை மீண்டும் உயிர்பிக்க போவதாகவும் இலங்கையை மற்று மொரு தாய்லாந்தாக்க முயற்சிக்கும் அனைவரும் இது வெறும் கனவாக மாறும் காலம் வெகு தொலைவில் இல்லை எனவும் தேரர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்தின் மாத்திரமல்ல எதிர்க்கட்சியினருக்கும் இலங்கை என்ற பௌத்தமண்ணை வெளிநாட்டினரின் காலணியாக மாற்றும் தேவை இருந்த போதிலும் இதனை செய்ய இடமளிக்க போவதில்லை.

முஸ்லிம் பெண்கள் அணியும் பர்தா உடை தொடர்பாக பொதுபலசேனா அமைப்பு சில செயற்பாடுகளில் ஈடுபடவுள்ளதாக ஊடகங்களில் வெளியிடப்பட்ட தகவல்கள் முற்றிலும் பொய்யானது. கே.பி.போன்ற விடுதலைப் புலிகளின் தலைவர்களை கைது செய்யும் அளவுக்கு திறமையான புலனாய்வு பிரிவினர் இலங்கையில் இருக்கின்றனர் என்றார். (அ-2)

வலி.தென்.மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளத்தினர் அண்மையில் முல்லைத்தீவு ஆனந்தபுரம் அ.த.க. பாடசாலைக்கு சென்றிருந்தனர். இதன்போது அவர்கள் மாணவர்களிற்கான மகிழ்வூட்டல் நிகழ்வில் ஈடுபடுவதையும் மாணவர்களிற்கான கற்றல் விளையாட்டு உபகரணங்கள் என்பவற்றை அதிபரிடம் வழங்கிவைப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள் :-மானிப்பாய் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மும்பையை உலுக்கிய துயர சம்பவம்; அடுக்குமாடி குடியிருப்பு இடிந்து வீழ்ந்தது

30 பேர் பலி; 40 இற்கும் அதிகமானோர் படுகாயம்

மும்பையில் கட்டுமான பணிகள் முடியாத நிலையில் கட்டப்பட்டு வந்த புதிய கட்டடம் இடிந்து விழுந்ததில் அதில் பணி செய்து கொண்டிருந்தவர்களில் 30 பேர் பலியாகியுள்ளதுடன் 40 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர். இன்னும் பலர் கவலைக்கிடமான நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றமையால் பலியாவோரின் எண்ணிக்கை உயரும் என அஞ்சப்படுகின்றது.

பல தொழிலாளர்கள் இன்னும் மீட்கப்பட்டா மல் கட்ட இடிபாடுகளில் சிக்கியிருக்கின்றனர். மும்பை தானே ஷில்பாத்தா பகுதியில் 4 மாடி கட்டடம் கொண்ட இந்த பகுதியில் மேலும் கூடுத லாக 3 மாடிகள் கட்டும் பணி ஆரம்பமாகி நடந்து வந்தது. இந்நிலையில் பாரம் தாங்காமல் இந்த கட்டடம் இடிந்து விழுந்தது. ஏற்கனவே இந்த 4 மாடியில் 30 இற்கும் மேற்பட்ட குடும்பத்தினர் வசித்து வந்தனர்.

திடீரென கட்டடம் இடிந்து விழுந்ததும் வீட்டில் இருந்தவர்கள் பலரும் சம்பவ இடத்திலேயே இடிபாடுகளில் சிக்கி உயிரிழந்தனர். 40 இற்கும் மேற்பட்டோர் படுகாயத்துடன் மருத்துவமனை யில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தக் கட்டடம் அனுமதி பெறாமல் விதிமுறை க்கு எதிராக கட்டப்பட்டு வந்ததாக தற்போது தான் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது. இதனையடுத்து கட்ட உரிமையாளர்கள் மீது பொலிஸார் கொலை வழக்கு பதிவு செய்துள்ளனர். இடிபாடுகளில் பலரும் சிக்கியிருப்பதால் இவர்களை மீட்கும் பணியில் தீயணைப்பு படையினர் ஈடுபட்டுள்ளனர். (அ-2)

மாவோயிஸ்ட்டு தாக்குதலில் ஐந்து பொலிஸார் உயிரிழப்பு

மாவோயிட்டு போராளிகளின் அதிரடித் தாக்குதலில் ரோந்து சென்ற 5 பொலிஸார் பலியாகியுள்ளனர். நேற்று முன்தினம் குல்மா மாவட்டம் சென்பூர் பேருந்து நிலையம் அருகே வாகனத்தில் ரோந்து சென்ற பொலி ஸார் மீது அங்கு மறைந்திருந்த மாவோயிஸ்ட்டு போராளிகள், கண் மூடித்தனமான தாக்குதல் நடத்தியு ள்ளனர்.

இதில் சம்பவ இடத்திலேயே 3 பொலிஸார் பலியாகினர். மற்றைய இருவர் மருத்துவமனையில் அனும திக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பல னின்றி உயிரிழந்துள்ளனர்.

மேலும் பொலிஸாரிடமிருந்த துப்பாக்கிகளையும் மாவோயிஸ் டுகள் எடுத்துச் சென்றனர். இதே வேளை கடந்த மாதம் 28 ஆம் திகதி இடம்பெற்ற மாவோயிஸ்டுகளுக்கு எதிராக நடந்த தாக்குதலில் 10 பேர் கொல்லப்பட்டனர். இதற்கு எதிர்ப்பு தெரிவித்து ஏப்ரல் 1 ஆம் திகதி முதல் எதிர்ப்பு வாரத்தை போராளிகள் கடைபிடித்து வருகின்றனர்.

மேலும் வரும் 6 ஆம் திகதி முதல் ஜார்க்கண்டு, பீகாரில் 48 மணி நேர கர்த்தாலுக்கு மாவோயிஸ்டு கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

(அ-5)

புதிய கதிர்வீச்சு மூலம் புற்றுநோய்க்கு சிகிச்சை

புதிய கதிர்வீச்சு மூலம் புற்று நோய்க்கு சிகிச்சை அளிப்பதில் விஞ் ஞானிகள் தீவிரம் காட்டி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 1930 ஆம் ஆண்டு முதல் புற்று நோய்க்கு பி.என்.சி.டி என்னும் கதிர்வீச்சு மூலம் சிகிச்சை அளிக் கப்பட்டு வருகிறது. இந்த நிலையில் தற்போது இதில் ஒரு சில மாற்றம் மேற்கொண்டு புதிய வகை கதிர் வீச்சு மூலம் புற்றுநோயை குணப் படுத்த தீவிர முயற்சி மேற்கொண் டுள்ளனர். இச்சிகிச்சையை அமெ ரிக்காவின் மிஸ்கோரி பல்கலைக் கழக நிபுணர் கள் மேற்கொண்டுள் ளனர். இதன் முதற் கட்டமாக இச் சோதனை எலிக ளுக்கு வெற்றிக ரமாக பரிசோதிக் கப்பட்டது. இதன் மூலம் பக்கவிளைவுகளோ, வேத னையோ ஏற்படவில்லை என தெரி விக்கப்பட்டுள்ளது.

விரைவில் இது பெரிய மிருகங் களிடம் பரிசோதிக்கப்படும் எனவும் முடிவில் இச்சிகிச்சை மனிதர்களிடம் நடைமுறைப்படுத்தப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. அதற்காக அதிநவீன வசதிகளுடன் கூடிய கரு விகள் கண்டுபிடிக்கப்பட உள்ளது டன் மிஸ்கோரி பல்கலைக்கழகத் தில்தான் உலகிலேயே முதன் முறை யாக இந்த புதிய கதிர் வீச்சு சிகிச்சை பரிசோதிக்கப்பட்டுள்ளமை குறிப்பி டத்தக்கது. (அ-5)

யாழ். மணிக்கூட்டு கோபுரம் மீண்டும் செயற்பட ஆரம்பித்தது

நீண்ட காலமாக செயற்படாதிரு ந்த யாழ்.மணிக்கூட்டுக் கோபுரம் நேற்று வெள்ளிக்கிழமை தொடக் கம் செயற்பட ஆரம்பித்துள்ளது.

யாழ்.மாநகர சபையினால் சுமார் ஒரு மில்லியன் ரூபா செலவில் இந்த மணிக்கூட்டுக் கோபுர புனர மைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட டுள்ள நிலையில் நேற்று காலை தொடக்கம் இந்த மணிக்கூட்டுக்கோபு ரம் செயற்பட ஆரம்பித்துள்ளது.

இது தொடர்பில் யாழ்.மாநகர சபை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையிலே மிகவும் பிரபல் யமான மணிக்கூட்டுக்கோபுரம் யாழ். நகரின் முக்கிய கேந்திர நிலைய த்தில் அமைந்து இருப்பதும் யாழ். மாநகரத்தின் பாரம்பரியத்தை தமிழ் மக்களின் வரலாற்றை வெளிக்கொ ணர்வதாகவும் உள்ளது.

இக்கோபுரத்தில் இருந்துதான் எல்லா இடங்களுக்கு செல்லும் தூர ங்கள் கணிக்கப்பட்டு வந்தமையும் வரலாற்று உண்மையாகும்.

இக் கோபுரத்தின் வரலாற்றை நோக்குமிடத்து கடந்த 1929 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த பிரித்தானிய முடியாட்சியின் வேல்ஸ் இளவரசரால் தனது வரு கையின் ஞாபகார்த்தமாக 150 செ.மீ. விட்டமுடைய 04 மணிக்கூடுகள் அரச அதிபதியாக இருந்தடி.ஜே.பிறவு ணிடம் கையளிக்கப்பட்டது.

மக்களின் நன்மை கருதி இக் கோபுரம் 1934 ஆம் ஆண்டு மக் கள் பார்வைக்கு விடப்பட்டது. இக் கோபுரம் இலங்கை வரலாற்றில் மிக உயரமானதும் பழமையான துமாக காணப்படுகிறது. யாழ். நக ரினை அழகுபடுத்தும் திட்டத்தின் கீழ் மாநகர முதல்வர் திருமதி யோகே ஸ்வரி பற்குணராசாவின் முயற்சியி னால் மீண்டும் வர்ணம் தீட்டி, பழைய நான்கு கடிகாரங்களுக்குப் பதிலாக புதிதாக அதே அளவில் இலக்கமி டப்பட்ட கடிகாரங்கள் பொருத்தப் பட்டு இன்று கம்பீரமாக காட்சியளி க்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இக்கோபுர புனரமைப்பு வேலை கள் செய்யப்பட்டு 9 இலட்சத்து 27 ஆயிரம் ரூபா செலவில் நான்கு புதிய கடிகாரங்கள் பொருத்தப்பட் டுள்ளன.

இதனைத் தொடர்ந்து இச்சுற் றாடல் அழகுபடுத்தப்பட்டு மிக விரை வில் மக்கள் மயப்படுத்தப்பட உள் ளது என மேலும் தெரிவிக்கப்பட்டு ள்ளது. (அ-6)

பழிக்கு பழியாக வாலிபருக்கு பக்கவாதம் ஏற்படுத்த உத்தரவு

சவுதி நீதிமன்றின் விநோதம்

சவுதி அரேபியாவில் குற்றத்திற் கான தண்டனையாக பழிக்கு பழி யாக வாலிபருக்கு பக்கவாதம் ஏற் படுத்தும்படி விநோத தீர்ப்பளிக்கப் பட்டுள்ளது. சவுதி அரேபியாவை சேர்ந்த அலி அல் கவாகர் வயது (24) என்பவரிற்கே மேற்படி தீர்ப்பு வழங் கப்பட்டுள்ளது. கடந்த 10 ஆண்டுக ளுக்கு முன்பு குறித்த பிரஸ்தாப நபரி ற்கும் அவரது நண்பருக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. அப் போது அலி தாக்கியதில் அவரது நண்பரின் முதுகு தண்டு வடம் பாதி க்கப்பட்டதனால் அவரை பக்கவாதம் நோய் தாக்கியது.

இதனால் தற்போது அவர் சக்கர நாற்காலியில் தனது வாழ்நாளை கழித்து வருகிறார். இதற்கிடையே, கைது செய்யப்பட்ட அலி மீது நீதிமன் றில் வழக்கு தொடரப்பட்டது. இந் நிலையில் வழக்கை விசாரணை செய்த நீதிமன்றம் கண்ணுக்கு கண் என்பதன் அடிப்படையில் பாதிக்கப் பட்ட நண்பருக்கு ஏற்பட்டது போன்று அலிக்கும் பக்கவாத நோய் ஏற்ப டுத்தும்படி தீர்ப்பளித்துள்ளது.

மேலும் இந்த குற்றத்தில் இரு ந்து தப்பிக்க பாதிக்கப்பட்ட நண்பரு க்கு ஒரு கோடியே 50 இலட்சம் ரூபா நட்டஈடு வழங்கவும் உத்தரவிடப்பட் டுள்ளது.

நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பு க்கு உலக நாடுகளின் மனித உரி மைகள் அமைப்பு கடும் எதிர்ப்பும், கண்டனமும் தெரிவித்துள்ளன. ஆனால் அதை சவுதி அரேபியா அரசு கண்டு கொள்ளாமல் நீதி மன்ற தீர்ப்பை உறுதிசெய்துள் ளது. (அ-5)

கூலிப்படைகளை ஏவி என்னைக் கொல்ல முயற்சி

அன்னா ஹசாரே

தம்மைக் கொல்வதற்கென சிலர் கூலிப் படைகளை ஏவி வருகின்ற னர் என அன்னா ஹசாரே அதிர்ச்சி தகவலை வெளியிட்டுள்ளார்.

ஜனதந்திரா யாத்ரா என்ற பெய ரில் ஊழலை எதிர்த்து பிரசாரப் பய ணம் மேற்கொண்டிருக்கும் அன்னா ஹசாரே நேற்று முன்தினம் அரி யானா மாநிலத்தின் அம்பாலா நகரை வந்தடைந்த போதே மேற்கண்ட வாறு அனைவரையும் அதிர்ச்சிக்கு ள்ளாக்கினார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

வலிமையான லோக்பால் சட்ட த்தை நிறைவேற்ற அனைத்துக்கட் சிகளும் ஒன்றிணைந்து ஆதரவு அளிக்க வேண்டும். மக்களின் ஒத்து ழைப்புடன் தான் ஊழலை ஒழித்து நமது நாட்டை காப்பாற்ற முடியும்.

ஊழலை ஒழிக்கும் எனது இரண் டாம் விடுதலை போராட்டத்திற்கு மக்கள் துணை நிற்க வேண்டும். தேர்தல்களில் வாக்களிக்கும் போது தங்களது வாக்குரிமையின் மதி ப்பை அறிந்து ஊழல் அற்ற நேர் மையான வேட்பாளர்களுக்கு வாக் களிப்பதன் மூலம் மட்டுமே ஊழலை ஒழிக்க முடியும்.

ஊழலை எதிர்த்துப் போராடி வரும் என்னை கொல்ல சிலர் கூலிப்படை யினரை ஏவி விட்டுள்ளனர்.

எனக்கு கடவுள் மீது நம்பிக்கை உள்ளது. இதை போன்ற அச்சுறுத் தல்களுக்கு எல்லாம் நான் பயப்பட மாட்டேன் என குறிப்பிட்டுள்ளார்.

(அ-5)

தமிழக மீனவர்கள் மீதான தாக்குதல் தொடர்பில் உச்ச நீதிமன்றில் வழக்கு

இந்திய கடல் எல்லைக்குள் தமி ழக மீனவர்கள் இலங்கை கடற்ப டையினரால் தாக்கப்படும் விவகா ரத்தில் உரிய நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி உச்சநீதிமன்றத்தில் தமி ழக மீனவர்கள் சார்பில் மனு தாக் கல் செய்யப்பட்டது.

கடந்த மார்ச் மாதத்தில் கோடிய க்கரை பகுதியில் தமிழக மீனவர்கள் மீன் பிடித்துக் கொண்டிருந்த போது இலங்கை கடற்படையினரால் தாக் கப்பட்டனர். இந்திய எல்லைக்குள் புகுந்து இலங்கை கடற்படையினர் வன்முறை தாக்குதலில் ஈடுபட் டதாக கூறப்படும் இந்த விவகாரத் தில் உரிய விசாரணை நடத்த வேண் டும்.

இந்திய கடல் எல்லைக்குள் நுழை ந்து தாக்குதல் நடத்துபவர்கள் மீது இந்திய தண்டனைச் சட்டத்தின்படி குற்றவியல் நடவடிக்கை எடுக்க வேண் டும் என்றும் இந்திய மீனவர்களின் பாதுகாப்புக்கு உறுதியான நடவடிக் கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் மீனவர்கள் சார்பில் தாக் கல் செய்யப்பட்ட மனுவில் கேட்டுக் கொள் ளப்பட்டிருக்கிறது.

இலங்கை கடற்படையினரால் மீனவர்கள் தாக்கப்படும் விடயத்தில் மத்திய, மாநில அரசு கள் இணை ந்து பணியாற்ற வேண்டும் என் றும் மீனவர்கள் தங்கள் மனுவில் கோரிக்கை விடுத்துள்ளனர். இந்திய மீனவர்கள் மீது இலங்கை கடற் படை பலமுறை தாக்கியுள்ளதாக குறித்த மனுவில் குற்றச்சாட்டியுள் ளனர்.

கேரள மீனவரை சுட்ட இத்தாலி வீரர்கள் மீது மத்திய அரசு வழக்கு தொடர்ந்துள்ளது. இத்தாலி வீரர் மீது வழக்கு தொடர்ந்தது போல இலங்கை வீரர்கள் மீதும் வழக்கு தொட ர உச்சநீதிமன்றம் உத்தரவிட வேண்டும் என்று மீனவர்கள் கோரி க்கை விடுத்துள்ளனர். மீனவர்கள் தாக்கல் செய்துள்ள இந்த மனு விரை வில் விசாரணைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணத்திற்காகவும் வெற்றிக்காகவும் என்னுடைய ஆன்மாவை நான் விற்பதில்லை.
~ நாராயணமூர்த்தி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

புலிகளின் தலைவர் பிரபாகரன் என் கனவில் தோன்றினார்

எல்லாம் குழம்பிப் போன சூழ்நிலை, எங்கள் கலாசாரம் முதல் தமிழ் மக்களை ஏமாற்றும் தமிழ்ப் பிரதிநிதிகள்வரை எங்கும் ஒரே குழப்பம். இந்த நினைப்புகள் நம்மை மட்டுமல்ல, தன்மானம் உள்ள எந்தத் தமிழனையும் வதைக்கவே செய்யும்.

இந்த வதைப்பின் வாட்டத்தில் வந்த தூக்கத்தில் ஒரு கனவு.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் கனவில் தோன்றினார்.

அவரைக் கண்டதும் நான் நிரபராதி... நான் நிரபராதி... என்று கூறினேன். பிரபாகரன் சிரித்தார். நிரபராதி மட்டுமல்ல நியாயவாதி, நடுநிலைவாதி என்பதாலும் தான் இந்தச் சந்திப்பு என்றார்.

உங்களைச் சந்தித்தால் உறங்கும் அவசர காலச் சட்டமும், உறங்காத பயங்கரவாத தடைச் சட்டமும் என் மீது சீறிப்பாய்ந்து விடுமல்லவா? என்றேன். மீண்டும் சிரிப்பு.

கனவிலுமா பயம்...? அது சரி, நீ பயப்படுவதிலும் நியாயம் இருக்கத்தான் செய்கிறது. என்னோடு சேர்ந்து நின்று தாயகத்தின் உயிர் மூச்சையே காட்டிக்கொடுத்த உளவாளிகள் உன்னை மட்டும் விட்டுவிடவா போகிறார்கள்?

வலம்புரிப் பத்திரிகைக்கு ஒரு கட்சிப் பெயர் சூட்டி அதனை இல்லாது செய்யுங்கள் என்று எத்தனை தடவைகள் என்னிடம் கோரிக்கை விட்டார்கள்.

இலண்டனில் இருந்த அன்ரன் பாலசிங்கத்தை பயன்படுத்தியும் முயற்சி எடுத்தார்கள்.

ஆனால் நான் அதனை ஏற்கவில்லை. உண்மையைக் கண்டறிந்தேன். அதனால் தான் சொல்கிறேன். வலம்புரிச் சங்கு சாதாரணமானது அல்ல. அது அதர்மத்தை அழிக்கவும் தர்மத்தைக் காக்கவும் அவதாரம் எடுக்கும் கிருஷ்ண பரமாத்மாவின் கரத்தில் இருப்பது.

எல்லாம் வல்ல வலம்புரி வாணன் என்றும் மாற்றானும் கையெடுத்துத் தொழும் பெருமைக் குரியது.

பத்திரிகை என்றால் பக்கம் சாராமல் உண்மையை உள்ளவாறு எழுத வேண்டும். ஆலாவார்ணங்கள் ஆ... கூ... என்ற கோசங்கள், பிழைக்க வழியில்லாதவர்களின் குறுக்குப் பாதைகள்.

நான் ஒன்றச் சொல்ல விரும்புகிறேன். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் சிலர் உணர்வுபூர்வமாக, தமிழ் மக்களுக்காக குரல் கொடுக்க வேண்டும் என்பதை உணர்ந்து செயற்படுகிறார்கள்.

ஆனால் இன்னும் சிலரோ தங்கள் வருமானத்திற்காக தமிழினத்தை காட்டிக்கொடுத்து துரோகம் இழைக்கிறார்கள். என்ன செய்வது! காலமும் நேரமும் எமக்கு சாதகமாகவில்லை. இருந்தால் நடப்பது வேறு.

நான் சிங்கள மக்களை மன்னிப்பேன். ஆனால் எங்களோடு நிற்பதாகக் காட்டி எனது பெயரைச் சொல்லி எம்.பி. பதவி எடுத்து விட்டு, துரோகம் இழைக்கும் துரோகிகளை மன்னிக்கவே மாட்டேன் என்று உரக்கக் கூறி, சிலரின் புகைப் படங்களைக் காட்டிய போது,

அட இவர்களை எப்போ சனத்துக்குத் தெரியும். நீங்கள் தான்.. அறியாமல் விட்டு விட்டீர்கள் என்று நான் கூறிய போது, பிரபாகரன் உண்மை என்று ரைக்க தூக்கம் கலைந்து விழித்துக் கொண்டேன்.

நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதே பொது பல சேனாவின் நோக்கம்

(கொழும்பு)

ஹலால் தொடர்பில் இனிமேல் பேச மாட்டோம் என பொது பல சேனா அறிவித்துள்ளது.

பாதுகாப்பு அமைச்சில் நடைபெற்ற சந்திப்பின் பின்னரே இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் பொது பல சேனா தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே மேற்கண்டவாறு பொது பல சேனா அறிவித்துள்ளது.

இங்கு பொது பல சேனாவின் பிரதிநிதிகள் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில், சமூக ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கமே எமது அமைப்பின் முதன்மை நோக்கமாகும். அத்துடன் முஸ்லிம்கள் ஹலால் சான்றிதழ் பொறிக்கப்பட்ட உணவுகளை உண்ண உரிமை உண்டு. அதேபோல் முஸ்லிமல்லாதவர்கள் விரும்பியதை உண்ணலாம்.

இதேவேளை தமது இயக்கத்தை தடை செய்ய வேண்டும் எனக் கோரி தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார சமர்ப்பிக்கவுள்ள அமைச்சரவை பத்திரத்தை கண்டிக்கின்றோம்.

குற்றச்சாட்டுகளுக்கு பதிலளிக்க உரிய கால அவகாசம் வழங்கப்படாமல் அமைச்சரவை பத்திரத்தை கொண்டு வர அமைச்சருக்கு உரிமையில்லை. அத்துடன் சமூகங்களுக்கு இடையில் பிரிவினையை பரப்புவோருக்கு எதிராக அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளனர். (அ-2)

த.வி.இயக்கத்தின் தேசிய மாநாடு

தமிழீழவிடுதலை இயக்கத்தின் (ரெலோ) 8 ஆவது தேசிய மாநாடு இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் வவுனியா நகர சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கட்சியின் 7 ஆவது தேசிய மாநாட்டின் பதவியியல் தலைமைக்குழு இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஒன்று கூடி மாலை 5 மணிவரை நடைபெறும்.

மாவட்டரீதியாக 8 ஆவது தேசிய மாநாட்டிற்கான தெரிவுகள் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் என தமிழீழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகம் ஹென்றி மகேந்திரன் தெரிவித்தார்.

இதன் போது மாவட்ட ரீதியாக 72 பொதுக் குழு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவார்கள். 20 பேர் சர்வதேச ரீதியாக தெரிவு செய்யப்படவுள்ளனர்.

இந்த 92 பேரும் கூடி 23 பேரை தேசிய பட்டியல் மூலமாக தெரிவுசெய்ய வுள்ளனர்.

பொதுக்குழு அங்கத்தவர்கள் 115 பேரும் இணைந்து தலைவர், செயலாளர் நாயகம், பொருளாளர், தேசிய அமைப்பாளர் உட்பட ஏனைய பதவி நிலைகளுக்கான தெரிவுகள் மேற்கொள்வார்கள் எனவும் அவர் கூறினார்.

பொதுக்குழு அங்கத்தவர்களின் அபிப்பிராயங்கள், கருத்துக்கள் அரசியல் தொடர்பான முன்மொழிகள் மேற்கொள்ளப்பட்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்படவுள்ளன. (அ-6)

யாழ். மாவட்டத்தில் பொலிஸ் ஆளணிப் பற்றாக்குறை

யாழ். மாவட்டத்தில் பொலிஸ் ஆளணிப் பற்றாக்குறை நிலவுவதாக யாழ் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மொகமட் ஜெப்ரி தெரிவித்தார்.

யாழ். பொலிஸ் நிலையத்தில் நேற்று இடம் பெற்ற பொலிஸ் வாராந்த ஊடக வியலாளர் சந்திப்பின்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் விபத்து மற்றும் இளைஞர் குழுக்கிடையிலான மோதல்கள் இடம்பெறும் போது இராணுவத்தினரின் பிரசன்னம் அதிகமாக காணப்படுகிறது. ஆனால் பொலிஸார் விரைவாக சம்பவ இடத்திற்கு வருவதும் இல்லை; வந்தாலும் இராணுவத்தினருக்கு கீழ்ப்பட்டே நடக்கின்றனர். இதற்கு என்ன காரணம் என ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பிய போதே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

அத்தோடு எதிர்காலத்தில் பொலிஸார் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் ஆளணிப்பற்றாக்குறை உள்ளதால் நடவடிக்கைகளை விரைவாக எடுக்க முடியவில்லை எனவும் தெரிவித்தார். (அ-6)

ஸ்ரீ அம்மா பகவானின் மகா வாக்கியங்கள்

ஒவ்வொருவருக்கும் தங்களுடைய சுயநலத்தைப் பற்றிய விழிப்புணர்வு வேண்டும். சுயநலம் உள்ளது. அதை நீங்கள் எதிர்க்கமாட்டீர்கள். அவ்வளவுதான். ஆனால் நீங்கள் எந்நேரமும் அதை நியாயப்படுத்திக்கொண்டோ ஏன் இவ்வாறு உள்ளது என்று காரணங்கள் கண்டுபிடித்தோ அல்லது எதிர்க்கவோ செய்கிறீர்கள். அது உள்ளது என்பது உங்கள் உண்மை நிலை. சுய நலத்தை அவ்வாறே உங்களால் பார்க்க முடிந்தால் விநோதமாக ஏதோ ஒன்று நிகழும். நீங்கள் எதுவும் செய்யத் தேவையில்லை. உங்களால் இதைப்பற்றி எதுவும் செய்யவும் முடியாது. ஆகையால் சுயநலத்தை நேருக்கு நேர் பார்ப்பது என்னும் பதம் தவறான பொருளைக் கொடுத்தாலும் நான் உண்மையிலேயே இதுதான் என்ற விழிப்புணர்வு ஏற்படுவதே அதன் உட் பொருளாகும். நீங்கள் இதுதான் என்று எண்ணியே இருக்கமாட்டீர்கள். ஆனால் உங்கள் விழிப்புணர்ச்சி உங்களுக்கு அதை வெளிப்படுத்தும் அவ்வளவு தான். பார்த்தால் மட்டுமே போதும்.

அலங்கார உற்சவம்

வட்டுக்கோட்டை கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த உற்சவம் கடந்த மார்ச் மாதம் 30 ஆம் திகதி ஆரம்பமாகி இன்று சனிக்கிழமை சப்பறத்திருவிழாவும் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு தேர்த்திருவிழாவும் நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 5 மணிக்கு ஆலய தீர்த்தக்கேணியில் தீர்த்த உற்சவமும் எதிர்வரும் 9 ஆம் திகதி செவ் வாய்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு வைரவ பொங்கலும் இடம் பெறும் என ஆலய பரிபாலன சபையினர் அறி வித்துள்ளனர். (அ-3,17)

மின் தடை

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களை இடம் நகர்த்த வேண்டியிருப்பதாலும், புதிய உயர் அழுத்த மார்க்கங்களின் கட்டமைப்பு வேலைகளுக்காகவும் நாளை மறுதினம் திங்கட்கிழமை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரையும் மாலுசந்தி முதல் இரும்பு மதவடி மடத்தடி வரையான பிரதேசம், அண்ணாசிலையடி முதல் கரணவாய் வரையான பிரதேசம் ஆகிய இடங்களிலும், அடுத்த நாள் 9 ம் திகதி செவ்வாய்க்கிழமை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரையும் சாமியன் அரசடிப் பிரதேசத்திலும் 10ஆம் திகதி புதன் கிழமை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரையும் சுப்பர்மடம் பிரதேசத்திலும் 11ம் திகதி வியாழக்கிழமை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரையும் நெல்லியடிப் பிரதேசத்தின் ஒரு பகுதி, வதிரிப் பிரதேசம், அல்வாய் பிரதேசத்தின் ஒரு பகுதி, திக்கம், உடுப்பிட்டியின் ஒரு பகுதி, மயிலியதனை, தொண்டைமனாறு, வல்வெட்டித் துறை பிரதேசங்களிலும் வரையான பிரதேசங்களிலும் மின்விநியோகம் தடைப் பட்டிருக்கும் என யாழ்.பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (செ)

சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

இயற்கையை வெற்றிகொள்!

✦உள்ளக் கதவைத் திறந்து வையுங்கள். நாலாபுறத்திலும் இருந்து நல்ல விடயங்கள் அதற்குள் நுழைய அனுமதி அளியுங்கள்.

✦எல்லாப் பூக்களில் இருந்தும் தேனைப்பெற்றுக் கொள்ளுங்கள். யாரிடமும் பகை பாராட்டவேண்டாம். நட்புணர்வுடன் பழகுங்கள். ஆனால் உங்கள் சொந்தக்கருத்தை விடாப்பிடியாகப் பற்றுங்கள்.

✦மனிதன் பிறந்திருப்பது இயற்கையை வெற்றி கொள்ளத்தானே தவிர அதற்கு ஒருபோதும் பணிந்து போவதற்கு அல்ல.

✦பாமர மக்களுக்கு உயர்வான எண்ணங்களைப் பரப்புவதற்காகவே புராணங்கள் எழுதப்பட்டன.

✦கடவுளை வணங்கும்போது அவரை நமது தாய் தந்தையாக ஏற்றுக் கொள்கிறோம். ஆனால் மற்றவர்களை சகோதர சகோதரிகளாக நேசிக்க மறந்து விடுகிறோம்.

✦நான்கு பேர் அறிய நல்லவனாகக் காட்டிக்கொண்டு பிறர் அறியாத வகையில் தீய செயல்களில் ஈடுபடுவது இழிவான செயல்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ராவிட்டுக்கு பத்மபூஷண் விருது

இந்திய கிரிக்கெட் வீரர் ராகுல் ராவிட்டுக்கு, நாட்டின் மூன்றாவது உயரிய விருதான பத்ம பூஷண் விருது வழங்கப்பட்டது.

இந்தியாவின் பல்வேறு துறைகளில் சாதித்தவர்களுக்கு, நாட்டின் உயரிய விருதான பத்ம விருதுகளை ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி வழங்கினார். விளையாட்டு துறையில் சிறப்பாக செயற்பட்ட, முன்னாள் கிரிக்கெட் வீரர் ராகுல் ராவிட்டுக்கு, நாட்டின் மூன்றாவது உயரிய விருதான பத்ம பூஷண் விருது வழங்கப்பட்டது.

தவிர, லண்டன் ஒலிம்பிக் குத்துச சண்டையில் வெண்கலம் வென்ற, இந்தியாவின் மேரி கோமுக்கு பத்ம பூஷண் விருது வழங்கப்பட்டது.

அத்துடன் லண்டன் ஒலிம்பிக் மல்யுத்தத்தில் வெண்கலம் வென்ற, இந்தியாவின் யோகேஷ் வர்தத், 2012 பாராலிம்பிக் உயரம் தாண்டுதலில் வெள்ளிப்பதக்கம் வென்ற கிரிஷா ஆகியோருக்கு பத்மஸ்ரீ விருது வழங்கப்பட்டது.

இவர்களை தவிர, விஜய் குமார் (துப்பாக்கி சுடுதல்), திங்கோ சிங் (குத்துச் சண்டை), பஜ்ரங் லால் தக்கார் (படகு வலித்தல்), பிரேம்லதா அகர்வால் (மலையேற்றம்) உள்ளிட்டோர் பத்மஸ்ரீ விருது பெற்றனர்.

உலகக் கிண்ண துப்பாக்கி சுடும் போட்டியில் இந்திய வீராங்கனை தங்கம்

தென்கொரியாவின் சங்வான் நகரில் உலகக்கிண்ண துப்பாக்கி சுடும்போட்டி நடைபெற்று வருகிறது. இதில் நேற்று நடைபெற்ற 25 மீற்றர் துப்பாக்கி சுடும் போட்டியில் பெண்கள் பிரிவில் இந்தியாவைச் சேர்ந்த ரஹீ சர்நோபாத் தங்கம் வென்றார்.

இவர் தன்னுடன் போட்டியிட்ட தென்கொரிய வீராங்கனை கியோங்கே கிம்மை 8- 6 என்ற புள்ளிகளில் தோற்கடித்து முதலிடத்தைப் பெற்றார். ரஹீ, 2012 ஆம் ஆண்டு லண்டனில் நடைபெற்ற ஒலிம்பிக் பந்தயத்தில் கலந்துகொண்ட இளம் போட்டியாளர் ஆவார். இது அவர் பெறும் உயரிய விருது ஆகும்.

வெற்றி குறித்து ரஹீ கூறும்போது, இதற்காக நான் கடுமையாக உழைத்தேன். இந்த வெற்றியின் மூலம் எனது கனவு நனவாகியிருக்கிறது. எனக்கு உதவிய அனைவருக்கும் நன்றி கூற கடமைபட்டிருக்கிறேன் என்றார்.

ஐ.பி.எல். இல் இருந்து விலகினார் பற்றின்சன்



இந்தியன் பிறீமியர் லீக் தொடரின் இவ் வருடத்துக்கான போட்டிகளில் அவுஸ்திரேலிய அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஜேம்ஸ் பற்றின்சன் பங்குபற்ற மாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அவருக்கு ஏற்பட்டுள்ள உபாதை காரணமாகவே பங்குகொள்ள மாட்டார் என தெரிவிக்கப்படுகின்றது.

அடி வயிற்றில் ஏற்பட்ட காயத்திற்கு உடனடியாக சத்திரசிகிச்சை செய்துகொள்ள வேண்டும் என்று பற்றின்சனுக்கு வைத்தியர்கள் அறிவுறுத்தினர். அதனை ஏற்று சத்திர சிகிச்சை செய்ய முடிவு செய்துள்ளதால், இந்த ஐ.பி.எல். போட்டியில் இருந்து விலகி உள்ளார்.

சத்திரசிகிச்சை முடிந்து 4 வாரங்கள் ஓய்வு எடுக்க வேண்டும். இதனால் ஐ.பி.எல். மற்றும் ஐ.சி.சி. சம்பியன் கிண்ணப் போட்டியில் விளையாடுவது கடினம். ஆனால் ஆசஷ் தொடரில் விளையாடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

தோல்வியை ஆராய்கின்றோம் – பொண்டிங்



ஐபிஎல்லில் பெங்களூர் - மும்பை அணிகள் மோதியஆட்டத்தில் பெங்களூர் அணி 2 ஓட்டங்கள் வித்தியாசத்தில் த்ரில் வெற்றி பெற்றது. தோல்வி குறித்து மும்பை இந்தியன்ஸ அணியின் தலைவர் ரிக்கி பொன்டிங் ஆட்டத்தின் பரபரப்பால் கை விரலின் நகங்கள் அனைதையும் இழந்துவிட்டேன். துர்திஷ்டவசமாக தோல்வியை தழுவிவிட்டோம். இந்த ஆட்டத்தில் என்ன தவறுகள் செய்தோம என ஆராய்வோம்." என்று கூறினார்.

அரசாங்கம்– கிரிக்கெட் நிர்வாகத்தினரும் உரிய நேரத்தில் தீர்மானம் எடுக்கவில்லை – ரணதுங்க

கிரிக்கெட் வீரர்களும் நிர்வாகத்தினரும் அரசாங்கமும் உரிய நேரத்தில் தீர்மானமொன்றை எடுக்கவில்லையென பாராளுமன்ற உறுப்பினர் அர்ஜுன ரணதுங்க குற்றஞ்சாட்டியுள்ளார். களுத்துறை மொரன்துடுவ பகுதியில் கிரிக்கெட் போட்டியொன்றின் ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்ட போதே அவர் இதனைக் கூறினார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கிரிக்கெட் வீரர்கள், நிர்வாகம் மற்றும் அரசாங்கம் ஆகியன தீர்மானமெடுக்க வேண்டிய சந்தர்ப்பத்தில் அதனை எடுக்கவில்லையென நான் விரல் நீட்டி சுட்டிக்காட்டுவேன். காரணம் இன்று இந்தியாவில் எமக்கு பாரிய பிரச்சினையொன்றை எதிர்கொள்ளவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

எமது வீரர்கள் எவ்வாறு விளையாட வேண்டுமென்பதை இந்தியாவின் இரண்டு அரசியல்வாதிகளுக்குத் தேவையான வகையில் அவர்கள் தீர்மானிக்கின்றனர். இந்த கிரிக்கெட் போட்டி தனிப்பட்ட போட்டியாகும். அவ்வாறானதொரு போட்டிக்கு எமது வீரர்கள் தகுதியற்றவர்கள் என அவர்கள் எண்ணும்போது எமது வீரர்கள் இப்போட்டியில் பங்கேற்க துரிதமாக சென்றுள்ளனர் என்றார் பாராளுமன்ற உறுப்பினர் அர்ஜுன ரணதுங்க.

சைக்கிள் மன்னன் நீச்சல் வீரராகிறார்

ஊக்கமருந்து பயன்படுத்தியதை ஒப்புக் கொண்ட அமெரிக்க சைக்கிள் பந்தய ஜாம்பவான் லான்ஸ் ஆம்ஸ்ரோங்கிடம் இருந்து 7 உலக சம்பியன் பட்டங்கள் பறிக்கப்பட்டதுடன், அவர் போட்டியில் பங்கேற்க ஆயுட்கால தடையும் விதிக்கப்பட்டது. இந்த நிலையில் 41 வயதான ஆம்ஸ்ரோங் நீச்சல் பந்தய வீரராக மாறி வருகிறார். அமெரிக்காவின் ஆஸ்டின் நகரில் இந்த வார இறுதியில் நடக்கும் மண்டல அளவிலான நீச்சல் சம்பியன்ஷிப் போட்டியில் அவர் தனது வயது பிரிவில் பங்கேற்க உள்ளார். மூத்த நீச்சல் வீரர்களை ஊக்குவிப்பதற்காக அவர் இந்த போட்டிக்கு அழைக்கப்பட்டதாக போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சன் ரைசர்ஸ் திரில் வெற்றி



புனே வாரியர்ஸ் அணியை ஐதராபாத் சன் ரைசர்ஸ் அணி 22 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

ஐ.பி.எல். தொடரில் நேற்று ஐதராபாத் ராஜீவ்காந்தி சர்வதேச மைதானத்தில் நடைபெற்ற லீக் ஆட்டத்தில் உள்ளூர் அணியான ஐதராபாத் சன் ரைசர்ஸ் அணி புனே வாரியர்ஸ் அணியுடன் மோதியது.

நாணயச் சுழற்சியில் வென்ற புனே அணி பந்துவீச முடிவு செய்தது.

கடந்த ஆண்டு விளையாடிய ஐதராபாத் டெக்கான் அணி ஐ.பி.எல். நிர்வாகத்தால் நீக்கப்பட்டதையடுத்து ஐதராபாத் அணிக்கான உரிமத்தை சன் குழும நிறுவனம் பெற்றது.

அந்த நிர்வாகத்தின் கீழ் சன் ரைசர்ஸ் நேற்று முதல் போட்டியில் விளையாடியது.

தொடக்க வீரர்களாக அக்சத் ரெட்டி பார்த்தீவ் படேல் ஆகியோர் களமிறங்கினர்.

19 ஓட்டங்கள் எடுத்த பார்த்தீவ் படேல் திண்டாவின் பந்தில் விக்கெட்டை இழந்தார். அணித் தலைவர் சங்ககாரவும் (15 ஓட்டங்கள்) சோபிக்கவில்லை.

நிலைமையை சமாளித்து ஆடிக் கொண்டிருந்த அக்சய் ரெட்டி 27 ஓட்டங்கள் எடுத்த போது அவரை யுவராஜ் சிங் வெளியேற்றினார். மிகவும் எதிர்பார்க்கப்பட்ட வயிட்டும் 10 ஓட்டங்களில் பெவிலியன் திரும்பினார். இதனால் 15 ஓவர்களில் அந்த அணி 4 விக்கெட் இழப்பிற்கு 87 ஓட்டங்கள் மட்டுமே எடுத்திருந்தது. அதுவரை 6 பவுண்டரிகள் மட்டுமே அடித்திருந்தனர்.

கடைசியில் 5 ஓவர்களில் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்த வேண்டிய கட்டாயத்தில் அதிரடியாக ஆடிய பெரேரா முதல் சிக்சரை பதிவு செய்து ரசிகர்களை உற்சாகப்படுத்தினார். ஆனால் அவர் 30 ஓட்டங்களை மட்டுமே எடுத்து ஆட்டமிழந்தார்.

விகாரி 11 ஓட்டங்களில் அவுட் ஆனார். இதனால் சன் ரைசர்ஸ் அணி 20 ஓவர் முடிவில் 6 விக்கெட் இழப்பிற்கு 126 ஓட்டங்கள் எடுத்தது.

இதனை தொடர்ந்து 127 ஓட்டத்தினை வெற்றி இலக்காக கொண்டு துடுப்பெடுத்தாடிய புனே அணி, சன் ரைசர்ஸின் அபார பந்து வீச்சுக்கு முகம் கொடுக்க முடியாமல்18.5 ஓவர்களில் 104 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது. ஆட்டநாயனாக அமித் மிஸ்ரா தெரிவானார்.



திருநெல்வேலி வை.எம்.எச்.ஏ காலிறுதிக்கு தெரிவானது



வீ.டீ.ஜெயரட்ணசிங்கம் வெற்றிக்கிண்ணத்திற்காக யாழ்.சென்றல் விளையாட்டு கழகம் 9 வது ஆண்டாக நடத்தி வரும் 50பந்து பரிமாற்றங்களை கொண்ட துடுப்பாட்டச் சுற்றுப் போட்டியின் 9-வது போட்டியும்,தொடரின் 103 வது போட்டியும் அண்மையில் ஸ்கந்தவரோதயா கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

போட்டியில் திருநெல்வேலி வை.எம்.எச்.ஏ அணி நியூஸரார் அணியை 5 இலக்குகளால் வெற்றிபெற்று கால் இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றது.

நாணயசுழற்சியில் வெற்றி பெற்ற நியூ ஸ்ரார் அணி துடுபாட்டத்தை தெரிவு செய்து 24.5 பந்து பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 134 ஓட்டங்களை பெற்றனர்.

நீகன்21, ரமணன்26,சஞ்ஜீவ்24, நிரஞ்சன்20 ஓட்டங்களை பெற்றனர். சுபாஸ்03, சிந்துஜன்03, நிவான்02, ராசேந்திரன் 02, இலக்குகளை கைப்பற்றினர்.

135ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டு களமிறங்கிய திருநெல்வேலி வைஎம்எச்ஏ அணி 38.1 பந்து பரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து 135 ஓட்டங்களை பெற்றது.

சந்துரு 15,ராசேந்திரம் ஆட்டமிழக்காது25, சுபாஸ்15, நிவான் ஆட்டமிழக்காது 25 ஓட்டங்களை பெற்றனர். ரமணன் 02, நிஸாந்தன், சஞ்சீவ், அருண் தலா 1 இலக்குகளை கைப்பற்றினர்.

இப்போட்டியின் மூலம் யாழ் சென்றல் விளையாட்டுக்கழகம் 4-வது ஆண்டாக நடத்திவரும் யாழ். நகரில் சிறந்த கழக அணி தெரிவு நிகழ்வுக்கு திருநெல்வேலி வைஎம்எச்ஏ அணி 7.3 புள்ளிகளையும் நியூஸ்ரார் 1.8 புள்ளிகளை பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

விடுதி விபச்சாரம்...

பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவறு தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் உள்ள விடுதிகளில் விபச்சார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் அண்மையில் விடுதி ஒன்றில் விபச்சாரம் நடவடிக்கையில் ஈடுபட்டவர்கள் கைது செய்வதற்கு பொலிஸாருக்கு தகவல் கொடுக்கப்பட்டும் பொலிஸார் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை எனவும் கூறப்பட்டது.

இவ்விடயம் தொடர்பாக ஏன் நடவடிக்கை மேற்கொள்ளவில்லை என ஊடகவியலாளர்களினால் கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்கு பதிலளித்த அவர்,

யாழ்.கோவில் வீதியில் விபசார நடவடிக்கையில் ஈடுபடுவதாக எமக்கு தகவல் கிடைக்கவில்லை .

யாழ்.மாவட்டத்தில் பதிவு செய்யாது விடுதி நடத்தப்படும் இடங்கள் மற்றும் பதிவு செய்யப்பட்டு விடுதி நடத்தும் இடங்களில் விபச்சாரம் நடைபெறுகின்றதாக எமக்கு முறைப்பாடு கிடைத்தால் அம்முறைப்பாட்டினை பரிசீலனை மேற்கொண்டு விபச்சாரம் நடக்கும் இடத்தினை முற்றுகையிடுவதுடன் விபச்சார நடவடிக்கையில் ஈடுபடுபவர்களையும் கைது செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று அவர் மேலும் கூறினார். (செ-6)

இலங்கை கடற்...

பதிவாகியுள்ளன.

2012 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல் தடவையாக நீர்மூழ்கிக்கப்பல் பற்றிய தகவல்கள் கிடைக்கப்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. (செ-11)

கனவனும்...

உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இவ்விபத்து தொடர்பாக சிலரை நொச்சி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-3, 15)

அரசியல் தீர்வு...

அப்போது குடியரசுத் தலைவர் பிரணாப் கூறியதாவது,

இந்தியா-இலங்கை இடையே பல்லாண்டு காலமாக கலாசா, வரலாற்று அடிப்படையில் நெருங்கிய உறவு உள்ளது.

ஆயிரக் கணக்கான ஆண்டுகள் நெருங்கிய நட்புறவின் அடிப்படையில் இலங்கையில் நடைபெறும் சம்பவங்களில் இந்தியாவுக்கும் அக்கறை உண்டு.

போர் முடிபுற்றதால் அரசியல் தீர்வு காண இலங்கைக்கு சிறந்த வாய்ப்பு கிட்டியுள்ளது இதனைப் பயன்படுத்தி அனைத்து தரப்பு மக்களும் ஏற்கும் வகையில் தீர்வு காண வேண்டும் என்றார் .

பிரணாப் முகர்ஜி இந்திய ஜனாதிபதியாக பதவியேற்று கொண்ட பின்னர் ரணில் விக்கிரமசிங்க அவரை சந்திப்பது இதுவே முதல்முறையாகும்.

இந்த சந்திப்பின் ஆரம்பத்தில் இந்திய ஜனாதிபதிக்கு வாழ்த்துக்களை தெரிவித்து கொண்ட விக்கிரமசிங்க, இலங்கை தொடர்பில் இவ்வாறான முழுமையான புரிந்துணர்வை கொண்ட இந்திய ஜனாதிபதி ஒருவர் இதற்கு முன்னர் இருந்ததில்லை என தெரிவித்துள்ளார்.

இதனால் இலங்கை தொடர்பாக விசேட கவனத்தை செலுத்தி நட்புறவை மேலும் அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு முன்னர் ரணில் இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித்தை அவரது அமைசசில சந்தித்து பேச்சுவார்த்தைகளை நடத்தினார்.

இதன்போது இரண்டு நாடுகளுக்கும் இடையில் தொடர்புகளை மேலும் மேலும் வலுப்படுத்துவது குறித்து கூடிய கவனம் செலுத்தப்பட்டது.

தெற்காசியாவில் அனுவங்களை கொண்ட அரசியல் தலைவர் என்ற வகையில் ரணில் விக்ரமசிங்கவின் ராஜதந்திர சேவைகளை பாராட்டிய இந்திய வெளிவிவகார அமைச்சர், பிராந்திய நாடுகள் தொடர்பான ரணில் விக்கிரமசிங்கவின் கருத்துக்களை கேட்டறிந்து கொண்டார்.

ரணில் வெளியிட்ட கருத்துக்கள் மிகவும் முக்கியமானது என குர்ஷித் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியா எப்போதும் இலங்கைக்கு தனது உச்ச உதவிகளை வழங்கியுள்ளதாக சுட்டிக் காட்டிய வெளிவிவாகார அமைச்சர்,

போரை முடிபுக்கு கொண்டு வரவும். அதன் பின்னர் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த இந்தியா வழங்கியுள்ள ஒத்துழைப்புகளை நினைவு கூர்ந்துள்ளார்.

இந்த ஒத்துழைப்பு மூலம் இலங்கை உச்ச பலன் அடைவதை காண்பதே தனது எதிர்பார்ப்பு எனவும் குர்ஷித் தெரிவித்துள்ளார்.

நெருக்கடிகளை எதிர்நோக்கிய அனைத்து சந்தர்ப்பங்களிலும் இந்தியா இலங்கைக்கு வழங்கிய உதவிகளை பாராட்டிய ரணில் எதிர் காலத்தில் இந்த உதவிகளையும் நட்புறவுகளையும் விரிவானதாகவும் வலுவானதாகவும் முன்னெடுத்து செல்ல வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளார்.

அதேவேளை ரணில், இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவசங்கர் மேனனையும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். (செ-1)

இலங். எதிராக...

யாவிடம் புகலிடம் கோரி தஞ்சமடைமந்து தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கபட்டுள்ள பல ஈழத் தமிழர்களுக்கு பல்வேறு உதவிகளை வழங்கிவரும் கிறிஸ்டியன் ஒப்பியஸ் மற்றும் சிங்கள இனவாத அரசுக்கு எதிரான பல்வேறு போராட்டங் களை முன்னெடுத்து வரும் ஹரி கொலிடே ஆகியோரே இவ் அடையாள உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

பேர்த் நேரப்படி நேற்று மாலை 6 மணிக்கு ஆரம்பித்த அடையாள உண்ணாவிரதம் இன்று மாலை 6 மணிக்கு நிறைவடையும். உண்ணாவிரதம் ஆரம்பித்த சில நிமிடங்களிலே உண்ணாவிரதம் ஆரம்பித்த இருவர்களுடனும் இணைந்து பத்துக்கு மேற்பட்டோர் உண்ணா விரதம் இருப்பதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

உண்ணாவிரதம் இருக்கும் இவர்கள் பின்வரும் கோரிக்கைகளை முன்வைத்து உண்ணாவிரதம் இருக்கிறார்கள். அதில், மனித குலத்திற்கு எதிரான போரை நடத்தி போர்க் குற்றம் புரிந்தவர்களை சர்வதேச விசாரணைக்கு உட்படுத்தி தண்டிக்க வேண்டும்.

இலங்கை மீது பொருளாதார தடை விதிக்க வேண்டும். தமிழர்களின் விருப்பத்தை அறிய பொது வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்பதாகும். (செ-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராட்டி வாழ்த்துகின்றோம்

தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்லம்

மாணவி சாதனை

எமது மகளிர் இல்லத்தில் வாழும் சுன்னாகம் இராமநாதன் கல்லூரி மாணவி

செல்வி தேவதர்சினி தர்மகுலராஜா

க.பொ.த சாதாரண தரப்பரீட்சையில் சகல பாடங்களிலும் 9A எடுத்து எமது இல்லத்துக்கு பெருமை சேர்த்துள்ளார். அவரின் சிறந்த பெறுபேற்றுக்காக உழைத்த அனைவருக்கும் நன்றி கூறுவதோடு சிறந்த பெறுபேறு பெற்ற எமது இல்ல மாணவிக்கு எம் இனிய பாராட்டுக்கள் உரித்தாகுக.

நிர்வாக சபை
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை

ஆறு.திருமுருகன்
தலைவர்

(2326)

தமிழ்த் திரைப்பட...

நடிகர்கள் இணைந்து உண்ணாவிரதம் இருந்தனர்.

இதனால் இந்த நடிகர்கள் நடித்துள்ள திரைப்படங்களை இலங்கையில் திரையிடுவதை தடைசெய்ய வேண்டும். இவ்வாறான காட்போர்ட் வீரர்களை சூப்பர் ஸ்ரார்களாக கருதிய காலத்தை நாம் முடிபுக்கு கொண்டு வர வேண்டும் எனவும் திஸாநாயக்க கூறியுள்ளார். (செ-11)

A/L CHEMISTRY HALL

2015- ஒரு வருடத்தினுள் பாடத்திட்டம் நிறைவாக்கப்பட்டு 20 வருட வினாக்கள் செய்ய விரும்பும் மாணவர்கள் மட்டும் பதியவும்.

2014-Physical & Industrial

ஆசிரியர்: S.Sureshkumar B.Sc(Hons) T.P. No.: 0775559028

G.P.S. Road, Kalviankadu. K.K.S. Road, Kokuvil.

(2317)

ALLIANCE FRANÇAISE DE JAFFNA

The Only Official French Language Centre in Jaffna

பிரஞ்சு மொழியை பிரஞ்சு முறையில் கற்றுக் கொள்ளுங்கள்

French மொழியை சுற்பிட்டதற்கு French Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட வடமாகாணத்திலுள்ள ஒரேயொரு நிறுவனம் Alliance Française de Jaffna மட்டுமே. இச் சர்வதேச நிறுவனத்தில் France மற்றும் Canada முதலிய நாடுகளுக்கு செல்வோர், மாணவர்கள் மற்றும் French கற்க விரும்பும் யாவரும் கற்றுக் கொள்கிறார்கள்.

மேலும் தரமான CERTIFICATEஐ பெறுங்கள்.

(2319)

உங்கள் அனுமதிகளுக்கு முந்துங்கள். அழையுங்கள் 021 222 8093

61, Kachcheri-Nallur Road, Jaffna. E-mail: alliancejaffna@yahoo.com

(றக்கா வீதியும் கச்சேரி -நல்லூர் வீதியும் இணையும் சந்தியில் அமைந்துள்ள மாடிக் கட்டிடம்)

கிறிஸ்ரல் சென்ரர்

O/L DAY CLASS

பிரிவு I ஆரம்பம்:- 2013-04-06

நெல்லியடியில் (கொமர்ஷல் வங்கி அருகில்) மு.ப. 9.00

திக்கத்தில் பி.ப. 3.00

7 நாட்களும் மு.ப. 8.30 முதல் பி.ப 1.30 வரை நடைபெறும்.

பிரத்தியேக கணித வகுப்பு

நெல்லியடியில்	10.00 மு.ப	
திக்கத்தில்	2.00 பி.ப	
மருதனார்மடம்	4.30 பி.ப	(12.04.2013)
தெல்லிப்பழை	5.30 பி.ப	(12.04.2013)

T.P. No.:0775133990 -நிர்வாகி

(2315)

தற்போது யாழ் நகரில்...

கட்டிட நிர்மாணத் துறையில் மாத வருமானம் ரூபா 150,000/= இனை உறுதி செய்யும் 18 மாத பாட நெறி

BTEC HND in

- Quantity Surveying
- Civil Engineering

Leading to BSc (Hons) From UK

Why Choose BCAS for QS & Civil Engineering ?

- நவீன கற்கை வசதிகளுடன் கூடிய பிரத்தயேக QS, Civil Engineering கற்கை நிலையத்தில் வழங்கப்படும் பாடநெறி
- பல்கலைக்கழக விரிவுரையாளர்களையும் அனுபவமிக்க QS, Civil Engineering நிபுணர்களையும் கொண்ட முழுநேர விரிவுரையாளர்கள்
- முன்னணி நிறுவனங்களினூடாக வழங்கப்படும் நடைமுறைப்பயிற்சிகள்
- RICS, CIOB, IQSL போன்றவற்றினால் அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்
- £4500 வரை பிரித்தானிய Top-Up கற்கைநெறிகளிற்கான புலமைப்பரிசில்
- தற்போது இலங்கையிலேயே பட்டப் படிப்பை (Top-Up) பூர்த்தி செய்யும் அரிய வாய்ப்பினை BCAS Campus உங்களுக்கு வழங்குகின்றது
- கட்டாரில் தொழில் புரிந்துகொண்டே BCAS Qatar Centre இல் Top-Up கற்கைநெறியை பூர்த்தி செய்யும் வாய்ப்பு
- 14 வருட நம்பகமும் சிறப்பும் மிக்க உயர் கல்விச்சேவை

பாடநெறி ஆரம்பம் 08.04.2013

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES
www.bcas.lk

16, Point Pedro Road, Jaffna.
021 221 9910 / 077 710 2131

Colombo : 077 482 9765
Kandy : 081 222 4737
Batticaloa : 077 766 6432
Kurunegala : 077 387 4747

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு மாபெரும் மலிவு விற்பனையில்....



உங்கள்

தில்லையம்பதி மோட்டோர்ஸ்

Thillaiyampathy Motors

Power Tools. Air Comporssors,
Battooy Charges, Generator.
hard tools, High porssure was hers.
Hilsts pipe Bendors and Jacks.
Mortors, Water pumpers.
Welding plasts.
Tools and Accessories.
Router Bit set
WOOD Working machine

வாடிக்கையாளர் நன்மை கருதி எமது வியாபார நிலையம் சனி, ஞாயிறு கிழமைகளில் முழுநேரம் திறந்திருக்கும்.

06-13 வரை மட்டுமே!

114,Stanley Road,
Jaffna. (மக்கள் வங்கிக்கு முன்பாக)
021 225710,
0777666371,0776733780

DCM யாழ்.நகர்

A/L 2015 கலைவர்த்தகம் புதிய பிரிவு

பொருளியல்	கணக்கீடு
S.வரதராஜன்	P.பகீரதன்
வணிகக்கல்வி	தமிழ்
V.முரளி	K.சந்திரலிங்கம்
புவியியல்	அரசியல்
P.S.குமரன்	K.சுகாஷ்
இந்து நாகரிகம்	அளவையியல்
T.ஸ்ரீஸ்	T.நீதன்
வரலாறு	நாடகம்
R.R.ஆனந்தன்	S.R.றமேஸ்
கிறிஸ்தவம்	ஆங்கிலம்
S.ஜெயம்	S.றஞ்சித்

ஆரம்பம் 07.04.2013 காலை 8. மணி

DCM யாழ்.நகர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.04.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.